விலை: ரூபா 20 பக்கங்கள் 28

பொது நூலகம்
கோண்டாவில்
நல்லூர் பிரதேச சபை

# உதயன்

சுடர் 31 கதிர் 005 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 15, செவ்வாய்க்கிழமை 01.12.2015

## விடுதலையே வேண்டும் விசேட மன்று வேண்டாம்

### தமிழ் அரசியல் கைதிகள் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 1

நாம் விடுதலையையே கேட்கின்றோம். விசாரணையைக் கேட்கவில்லை. எமது வழக்குகளை விசாரணை செய்வதற்காக விசேட நீதிமன்றம் நிறுவப்படுவதை எதிர்க்கின்றோம் எனத் தமிழ் அரசியல் கைதிகள் திட்டவட்டமாகத் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பில் தமிழ் அரசியல்கைதிகள்தமதுஉறவினர்கள் ஊடாக விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளனர்.

அதில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு எதிரான வழக்குகளை விசாரிப்பதற்காக அமைக்கப்படும் விசேட மேல் நீதிமன்றம் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படவுள்ளதாக் நீதி அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, மேற்படி விசேட நீதிமன்றம் அமைக்கப்படுவதைத் தமிழ் அரசியல் கைதிகள் எதிர்த்துள்ளனர். கடந்தகாலங்களில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த போது, எம்மை விடுவிக்க வேண்டும் என்பதையே கோரிக்கையாக முன்வைத் பக். 22

> “எம்மைப் பொது மன்னிப்பில் விடுதலை செய்யுமாறும் அல்லது புனர்வாழ்வு வழங்கி விடுவிக்குமாறும் கோரியிருந்தோம். விசாரணையை நாம் வலியுறுத்தவில்லை. விடுதலையையே கேட்கின்றோம். உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டிருந்தபோது வழங்கிய வாக்குறுதியை நிறை வேற்ற வேண்டும்.”

## தமிழ்க் கைதிகளுக்குப் பிணை வழங்கிய பின்னர் புனர்வாழ்வு

### ஆராய்வதற்கு இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

தமிழ் அரசியல் கைதிகளைப் பிணையில் விடுவித்துப் பின்னர், அவர்களுக்குப்புனர்வாழ்வு வழங்குவது தொடர்பில் அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் ஆராய்வதற்காக இன்று கொழும்பில் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக, கைதிகளைப் பிணையில் விடுப்பதென்றும் பின்னர் புனர்வாழ்வு வழங்கி விடுவிப்பதென்றும் அரசு தீர்மானித்தது. இந்த வாக்குறுதியின் அடிப்படையில் அரசியல் கைதிகள் தமது உணவு தவிர்ப்பை கைவிட்டிருந்தனர்.

இரண்டு கட்டமாக கைதிகள் பிணை பக். 22

## வடக்கு-கிழக்கில் மழை தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ. 1

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட சில மாற்றங்களால் ஆங்காங்கே மழை பெய்யும் வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட மாற்றத்தால், இலங்கை முழுவதும் மேக மூட்டம் வியாபித்திருக்கும் எனவும் , நாட்டின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இதன் தாக்கம் அதிகம் இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் பக். 22

முச்சந்தி முரளி



உந்தக் கைதியள படாத பாடு படுத்துறாங்கள் பாருங்கோ...

## தமிழ் மக்களைப் புகலிடம் அற்றவர்களாக்க முயற்சி

### வடக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 1

எமது பாரம்பரிய சமூகத்தைப் புகலிடம் அற்றவர்கள் ஆக்கவே பல நடவடிக்கைகள் அண்மைக்காலங்களில் எடுக்கப்பட்டு வருகின்றன என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

'நிலமும் நாங்களும்' என்ற தலைப்பில், மாற்றம் நிதி ஏற்பாட்டு நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வு, யாழ்.பொது நூலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் கலந்து பக். 22

## திருமலை முகாமுக்குள் ஐ.நா. குழு தன்னிச்சையாகச் செயற்படவில்லை

### சி.ஐ.டியினர் அனுப்பப்பட்டிருந்தனர் என்கிறார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, டிசெ. 1

திருகோணமலை கடற்படை முகாமுக்குள் சென்ற காணாமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. செயற்குழுவினர் அங்கு தன்னிச்சையாகச் செயற்படவில்லை என்றும், சி.ஐ.டியினருடனேயே அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

நீண்டகால விசாரணையின் பின்னரே புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சிலவற்றின் மீதான தடைநீக்கப்பட்டது என்றுசுட்டிக்காட்டிய அவர், நாட்டின் புலனாய்வுப்பிரிவு பலமாகவே இருக்கின்றது என்றும் கூறினார்.

மகிந்த ஆட்சியின் போது புலம் பெயர் பக். 22

## இலங்கை வருவாரா கமரூன்?

கொழும்பு, டிசெ. 1

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் 2016இல் இலங்கைக்கு பயணம் செய்யும் திட்டம் எதுவும் தற்போதைய நிலையில் கிடையாது என்று இலங்கைக்கான பிரிட்டன் பக். 22

## பட்ஜெட் வாக்கெடுப்பில் கூட்டமைப்பின் நிலை என்ன?

### ஆராய இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது எவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொள்வது என்பது தொடர்பாக ஆராய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் இன்றைய தினம் கூட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் பக். 22

## காய்ச்சலால் இளைஞர் வைத்தியசாலையில் சாவு

கிளிநொச்சி, டிசெ. 1

கடந்த ஒரு வார காலமாகக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளைஞர் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றிச் சாவடைந்துள்ளார்.

இவ்வாறு சாவடைந்தவர் பக். 22

## திருகோணமலைக் கடற்படை முகாமில் மீட்ட எலும்புக் கூடுகள் பகுப்பாய்வுக்கு

கொழும்பு, டிசெ. 1

திருகோணமலைக் கடற்படை முகாமில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பில் இரசாயனப் பகுப்பாய்வுப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் காணாமற்போனோர் தொடர்பான ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் அண்மையில் இலங்கைக்கான பயணமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

அவர்களின் பயணத்தின் ஒரு கட்டமாகத் திருகோணமலை கடற்படை முகாமிலும் கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது முகாமுக்குள் அமைக்கப்பட்டிருந்த நிலக்கீழ் ரகசிய தடுப்பு முகாம்கள் மற்றும் சித்திரவதைக் கூடங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

அத்துடன் குறித்த சித்திரவதைக் கூடங்களில் இருந்து மனித எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பொலிஸார் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்திருந்ததுடன், எலும்புக் கூடுகளையும் தமது பொறுப்பில் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் முல்லையில் 14,689 ஏக்கர் பயிர் நாசம்

## 13 குளங்கள் பகுதியளவில் சேதம்

முல்லைத்தீவு,டிசெ.1

கடந்த நாள்களில் பெய்த அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக் கால் முல்லைத்தீவு மாவட் டத்தில் 14 ஆயிரத்து 689 ஏக்கர் பயிர்ச் செய்கை முற்றாக அழிவடைந்துள் ளது என்று முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 10 கமநல சேவை கள் திணக்களக் கிளைகளின் கீழ் உள்ள பிர தேசங்களில் எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே இந்த விவரம் பெறப்பட்டுள்ளது.

13 ஆயிரத்து 708 ஏக்கர் பெரும் போக நெற் பயிர்ச்செய்கையும், 981 மேட்டுநில பயிர்ச்செய்கையும் முற் றாக அழிவடைந்துள்ளன. பாதிப்புக் குள்ளான விவசாயிகளுக்கான மாற்றீ டுகள், அவர்களுக்கான நட்டஈடு என்பன பெற்று கொடுப்பதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று பணிப்பாளர் குறிப்பிட்டார்.

> பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கான மாற்றீடுகளும், அவர்களுக்கான நட்டஈடுகளும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைக ளும் மேற்கொள்ளப்பட் டுள்ளன

இதனை விட முல்லைத்தீவு மாவட் டத்தில் பெய்த கடும் மழை காரண மாகமாவட்டத்தில்உள்ளகுளங்களில் 13 குளங்கள் பகுதியள வில் சேதத்துக்குள்ளாகி யுள்ளன.

கோடாடங்குளம், மனட் குளம், கீழ் குளம், பட்டங் கட்டிக்குளம், குஞ்சுக் குளம், மனவாளம் பட்ட முறிப்புக் குளம், கரிப் பட்ட முறிப்புக்குளம், பனிக் கன்குளம், மரு தம் குளம், ஒட்டுசுட்டான் குளம், பூக்குளம், பான் டியன் வெளிக் குளம், வாரி வள்ளல் குளம் ஆகிய குளங்களின் அணைக் கட்டு கள் சேத மடைந்துள்ளன. சேதடைந்த அணைக்கட்டுகளைப் புனரமைப் பதற்கான நடவடிக்கைகளும் தற் போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. - என் றும் அவர் தெரிவித்தார்.

(ற-ஜ-21,ரி7)

## வவுனியாவில் சுழல் காற்று 16 வீடுகள் முற்றாகச் சேதம்

வவுனியா, டிசெ.1

மழையுடன் கூடிய கடும் காற்றினால் வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் 16 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளனஎன்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப் பாளர் ரி.என். சூரியராஜ் தெரிவித்தார்.

இரவுவேளை வீசிய கடும் மழையுடன் கூடிய கடும் காற்றால் வவுனியா வடக் குப் பகுதியில் நெடுங்கே ணியில் உள்ள ஒரு வீடும், வவுனியா இறம்பை மடு பகுதியில் 7 வீடும், ஈச்சங் குளம் பகுதியில் 3 வீடும், இலுப்பைக் குளம் பகுதி யில் 5 வீடுமாக மொத்தம் 16 வீடுகள் முற்றாகச் சேத மடைந்துள்ளன.

இதனால் 43 பேர் அவர் களுடைய உறவினர் வீடு களுக்கு இடம்பெயர்ந் துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை அந்தப் பகு தியில் சில பெறுமதியான மரங்களும் சாய்ந்து விழுந்துள்ளன. விவசாயி களும் பாதிப்படைந்துள்ள னர். வவுனியாவில் பல் வேறு இடங்களிலும் சுழல் காற்றின் தாக்கம் உண ரப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ற-ஜ-402)

## மழை வெள்ளத்தின் மத்தியில் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்!

### பிற்போடுமாறு பொதுமக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, டிசெ.1

குடியிருப்புகளுக்குள் மழை வெள்ளம் தேங் கியுள்ள நிலையில் நுளம் புக் கட்டுப்பாட்டு வாரம் சுகாதாரத் திணைக்களத் தால் முன்னெடுக்கப்படு வது குறித்துப் பொதுமக் கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

சுகாதார அமைச்சின் பணிப்பின்பேரில்நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் நேற்றுத்தொடக்கம் நுளம் புக் கட்டுப்பாட்டுச் செயற் பாடுகளை அந்தந்த சுகா தாரத் திணைக்களத்தினர் பொலிஸாரின் உதவியு டன் முன்னெடுத்து வரு கின்றனர்.

அதேவேளை அண்மை யில் மாவட்டத்தில் பெய்த பெருமழையால் பல இடங்களில் மக்கள் குடி யிருப்புகளை விட்டு வெளி யேறி நலன்புரி நிலையங் களிலும் உறவினர் நண் பர்கள் வீடுகளிலும் தங் கியுள்ளனர். பல் குடியிருப் புகளில் வெள்ளம் வழிந் தோடமுடியாமல்உள்ளது. அத்துடன் இடையிடையே மழை பெய்து வருவதால் தொடர்ந்து வெள்ளம் தேங்கிய நிலையில் காணப்படுகின்றது.

இதனால் குடியிருப்ப களைத் துப்புரவு செய்ய முடியாத நிலையில் உள் ளோம் என்றும் குறித்த மக் கள் தெரிவிக்கின்றனர். தற் போது நுளம்புக் கட்டுப் பாட்டு வாரம் முன்னெடுக் கப்பட்டுள்ள நிலையில் பலர் சட்ட நடவடிக்கைக்கு உட்படவேண்டியநிலைமை ஏற்படும்என்றும்அவர்கள் கவலை வெளியிட்டுள்ள னர்.

வெள்ளம் வடிந்தோடி இயல்பு நிலை ஏற்படும் வரையில் நுளம்புக் கட்டுப் பாட்டு வாரச் செயற் பாட்டைப் பிற்போட வேண் டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

(ற-ஜ-9)

## இளவாலையில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு



யாழ்ப்பாணம்,டிசெ.1

இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத் தால் டெங்கு ஒழிப்புச் செயற்திட்டம் இள வாலை சித்திர மேழி சந் தியில் இருந்து ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

பொது இடங்கள் மற்றும் குடியிருப்புக்களை அண்டியிருக்கும் பராம ரிப்பற்ற காணிகளில், டெங்கு நுளம்பு உற்பத்தி யாகக் கூடிய பொருள் களைச் சேகரித்து உரிய முறையில் அப்புறப் படுத்தும் நடவடிக்கை களே ஆரம்பிக்கப்பட் டுள் ளன.

கிராமத்தவரின் வீட்டு சுற்றாடலில் இருக்கும் டெங்கு நுளம்பு பெரு கக் கூடிய பொருள்கள் சேகரிக்கப்பட்டு வீடுகள் தோறும் பொதி செய்து வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையினரின் குப்பை சேகரிக்கும் வாக னத்தின் மூலமாக சங்க உறுப்பினர்கள் வீடுகள் தோறும்சென்று அந்தப் பொதிகளைச் சேகரித்து உரிய முறையில் அப் புறப்படுத்தும் நட வடிக் கையில் ஈடுபட்டுள்ள னர்.

(ஐ)



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப் பகுதியில் நேற்று வீசிய பலமான காற்றுக் காரணமாக மரங்கள் முறிந்தும், சரிந்தும் வீழ்ந்துள்ளன. சுமார் ஒரு மணி நேரம் இடி, மின்னல், சூறைக் காற்றுடன் பெய்த பலத்த மழை காரணமாக, மக்கள் வெளியில் எங்கும் செல்லமுடியாது வீடுகளுக்குள் முடங்கியிருந்ததாகவும் தெரி விக்கப்பட்டது. மரங்கள் மின்கம்பங்களில் சரிந்து வீழ்ந்ததால் சில மணிநேரம் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்தது. காற்றால் சரிந்து போக்குவரத்துக்குத் தடையாக வீதிக்குக் குறுக்கே சரிந்து கிடந்த மரங்கள் அகற்றப்பட்டன என்று ஏறா வூர் நகரசபைச் செயலாளர் எச்.எம்.எம். ஹமீம் தெரிவித்தார். (ற)

## உருளைக்கிழங்கு நடுகை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

அச்சுவேலி,டிசெ.1

யாழ். மாவட்ட விவசாயி கள் இந்த வருடத்துக் கான உரு ளைக்கிழங் குப் பயிர்ச் செய்கை யில் ஆர் வத்துடன் ஈடுபட்டுள் ளனர்.



விவசாயிகளுக்கான விதை உருளைக்கிழங்கு களை உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் கூட்டு றவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசமும், தனி யார் துறையினரும் இறக் குமதி செய்து வழங்கு கின்றனர்.

முதற் கட்டமாக யாழ். மாவட்டத்துக்கு ஆயி ரத்து 250 அந்தர் விதை உருளைக் கிழங்கு எடுத் துவரப்பட்டு விவசாயி களுக்கு வழங்கப் பட்டுள்ளது. அதில் ரெட்ல சோடா ரகம்கூடிய அளவிலும் சசி ரகம் மட்டுப்படுத் தப்பட்ட அளவிலும்எடுத்து வரப்பட்டுள்ளது. விவசாயி கள் முற்பணம் செலுத்தி பதிவுசெய்த அளவு அடிப் படையில் பங்கீடு செய்து வழங்கப் பட்டுள்ளது என்று உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் கூட்டு றவுச் சங்கங்களின் சமா சத்தின் தலைவர் இ. தெய் வேந்திரம் தெரிவித்தார்.

(ற-ஜ-11)

## நெடுந்தீவு புறாக்கூட்டுப் பகுதியை புனரமைப்பதற்கு அனுமதி மறுப்பு

நெடுந்தீவு, டிசெ.1

நெடுந்தீவில் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்த புறாக்கூட்டுப் பகுதியில் உல்லாசப் பயணி களைக் கவரக்கூடிய தான சில ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த தொல்பொருள் திணைக் களம்அனுமதிமறுத்துள் ளது என்று தெரிவிக்கப் படுகின்றது. இந்தத் திட் டத்துக்கென வடமாகா ணசபை 1.29 மில்லி யன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்த நிலையி லேயே அனுமதி மறுக் கப்பட்டுள்ளது.

> இந்தத் திட்டத்துக்கென வட மாகாணசபை 1.29 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திருந்த நிலையிலேயே அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

முன்யை காலங்களில் கடிதத் தொடர் புகளுக்கு புறாக்கள் பயன்படுத்தப்பட்டன என்று கூறப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்திலேயே இது கைக்கொள்ளப்பட்டதால் இந்தப் புறாக்கூடு அமைக்கப்பட்டது என வும் முன்னோர்கள் சொல்வதுண்டு. முன்னர் தொல்பொருள் திணைக்களம் விதேசிகளால் அமைக்கப்பட்ட புராதன சான்றுகளின் பொறுப்புக்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை. இந்த நிலையில் குறித்த புறாக்கூட்டுப் பகுதியை மாற்றியமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அத னால்அபிவிருத்திப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

(ஐ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி வா.சாந்தினி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் கலந்து கொள்வர். (ஐ-10)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவக்கொழுந்து தம்பிஐயா



நயினாதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து தம்பிஐயா நேற்று (30.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

வீடும் காணியும் விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 2 பரப்புப் காணி பலாலி வீதியில் (திருநெல்வேலியில்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0772096110

## மரண அறிவித்தல்

### தவராசா குபேரன்

(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவன்)



உடுத்துறையைப் பிறப்பிடமாகவும் (வடமராட்சி கிழக்கு), புற்றளை புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா குபேரன் நேற்று (30.11.2015) திங்கட் கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் வல்லிபுரம் தவராசா (கிராம அலுவலர் மருதங்கேணி), அம்பிகாபதி (ஆசிரியை, யா/புற்றளை மகா வித்தி யாலயம்) தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ் சென்ற குகேசன் மற்றும் குணேசன், குகாஜனன், குகாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.12.2015) செவ்வாய்க் கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புற்றளை புலோலி.
077 0532133

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தமியாம்பிள்ளை அருட்பிரகாசம்

(முன்னாள் இ.போ.ச. ஊழியர்)



உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தமியாம்பிள்ளை அருட்பிரகாசம் (முன்னாள் இ.போ.ச. ஊழியர்) நேற்று (30.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தமியாம்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அலங்காரத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அமலோற்பவம், மனுவேற்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ் சென்ற பாஸ்கரன் மற்றும் பத்மாவதி (ஜேர்மனி) றிச்சாட் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராணி, இராசேந்திரம் (ஜேர்மனி), செறின (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், டீன் சுதாகரன், மொறிஸ் தயான் (ஜேர்மனி) டைமன் சுனேத்திரா (லண் டன்), டென்சிகுமாரிக்கா, கபிலரன்காஞ்சனா, பிறேமசியா, கிறிஸ்ரின்வேணி, றொண்சியா, ஜேர்மனியில் வசிக்கும் மென்ரோர், ஜான்சன், றெனிசன், றிக்ஸ்மன், சபீனா, றொகான் ஆகியோரின் பேரனும், காலஞ் சென்றவர்களான பாக்கியம், லூர்தம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (02.12.2015) முற்பகல் 10.00 மணிக்கு புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(66520) (10.17)

தகவல்: குடும்பத்தினர். 0750385156

## மரண அறிவித்தல்

### திருமதி R.W அன்னபூரணம் அழகரத்தினம்



பருத்தித்துறை தும்பளை ஒருதானை ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி R.W.அழகரத்தினம் அன்னபூரணம் நேற்று (30.11. 2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற R.W. அழகரத்தினம் (ஓய்வுநிலை கல்வி அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுகிர்தரத்தினம் மற்றும் கமலரத்தினம் (கனடா), யோகரத்தினம் (ஒய்வுநிலை தாதிய உத்தியோகத்தர், தாதியநிர்வாக அதிகாரி, அக்குறணை), சீதாரத்தினம் (டென்மார்க்), விமலரத்தினம் (ஓய்வுநிலை பிரதி அதிபர் தும்பளை சைவப்பிரகாச மகா வித்தியாலயம்), நிமலரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற ச. சோமசுந்தரம்(ஓய்வுநிலை வருமானவரி மதிப்பீட்டளர்) மற்றும் ஆ. கார்த்திகேசு (ஓய்வு நிலை கணக்காளர், உள்ளூராட்சி அமைச்சு -கனடா), காலஞ்சென்ற சி. பாலசுப்பிரமணியம் (டென்மார்க்) மற்றும் ஆ. சிவகுமாரன் (பொருளாளர், நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலன சபை), இ.கணேசநாதன் (ஓய்வுநிலை பொலீஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற ஜெயலீலா ஆகியோரின் மாமியும், திருமதி மங்களேஸ் வரி தவபாலச்சந்திரன் (கொழும்பு), காலஞ்சென்ற யோகாம்பாள் மற்றும் மீனலோஜினி, நவரத்தினரத்திகராசா, Dr. தேவலோஜினி - தயாபரன், Dr. தனசாயிதன் (ராகம) -துருசாந்தி, கிருசாயினி, முரளிதரன், Dr. கிருபாகரன் (டென்மார்க்), காண்டீபன் (சம்பத் வங்கி யாழ்ப்பாணம்), நிரஞ்சனி, சிந்திக்கா - பிரதீபன் ஆகியோரின் பேர்த்தியும், கௌசிகா, சுதர்சன், சஜீலினி, செந்தீபன், சுஜன், ரம்மியா, கொயானா, பிறயானா, ஜெய்தன், கெனிஸ்கா, வருண், நிசாந்திக்கா, நிசான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2015) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 226 4101

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பொளி கல்வியகம்

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி, யாழ்ப்பாணம்.

2016 இல் தரம் 2,3,4

மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

அனுமதிகளை 30.11.2015 திங்கட்கிழமையில் இருந்து 05.12.2015 சனிக்கிழமை வரை பி.ப 3.00 மணி தொடக்கம் பி.ப 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

சின்னவிழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

(F/20506)(11,15,17)

இயக்குநர்.

SAAMSON Experts in Language Training இன் ஆங்கில,சிங்கள பயிற்சிநெறிகள்.

அரச, தனியார் ஊழியர்கள், தொழில்தேடுவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள் வயதுவந்தோர் இணையமுடியும்!

ஆங்கில வகுப்புகள் (திங்கள்,புதன்) ஆரம்பம்-07.12.2015
1.காலை 08-10 2.காலை 10-12

சிங்கள வகுப்பு ( சனி,ஞாயிறு )ஆரம்பம்-05.12.2015
1.காலை 08-10

பயிற்சியில் இணைந்துகொள்ள முன்பதிவு அவசியமானது.
பதிவுசெய்யவேண்டிய கடைசி நாள் 05.12.2015

SAAMSON Experts in Language Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2706 திகதி 30.11.2015
08 51 53 57 M 48
ரூ. 11,896,025/-

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1215
சீட்டிழுப்பு திகதி 2015.11.30
வெற்றி இலக்கங்கள்
19 25 53 64 O
ரூ. 35,794,020=

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 429
சீட்டிழுப்பு திகதி 2015.11.30
26 28 37 63 H
ரூ. 44,216,480/=

## மரண அறிவித்தல்

### திருமதி ஈஸ்வரி சிவபாதசுந்தரம்



கரவெட்டி கிழக்கைப் பிறப் பிடமாகவும் கொடிகாமம் வேத வனம் இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி சிவபாத சுந்தரம் தனது 96வது வயதில் அவர்களது சிவன் உபயமான சோமவார திங்களில் (30.11. 2015) சிவபதமடைந்தார்..

அன்னார் காலஞ்சென்ற Dr. சிவபாதசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், தற்போது பிரான்சை வதிவிடமாக கொண்ட Dr. பத்மா வித்தி யாசாகர் அவர்களின் அன்புத் தாயாரும், வித்தியாசாகரின் அன்பு மாமியும், விபூசணாவின் அம்மம்மாவும், உருத்திர சபாபதி, பர்வதவர்தினி, (புனிதம்), நடராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமாமகேசன் -இந்திரா, மகேஸ்வரி-தங்கராசா, மீனாட்சியம்மா -சிவகுருநாதன்(U.K), சித்ரா-பாலசுப்பிரமணியம், Dr.குமுதினி-பாஸ்கரன், ஆதி-தற்பரானந்தன் (கனடா) ஆகியோரின் சிறியதாயாரும், சாந்தினி -பராபரன், தவராஜன் - விமலா, சுந்தரரூபி -மோகனராஜா, அமுதா, கபிலன் -கார்த் திகா , செந்திரு -கெங்காதரன், சந்தியா, சாமளா -சஞ்சீவ நாத், அருண், பானுஷா, மதன், மைதிலி ஆகியோரின் பாட்டியும், அக்ஷயா, ரமணன், குபேரன், பவசிகா, பிரி யங்கா, நீலன், அஸ்விகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2015) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு கொடிகாமத்தில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வேதவனம்"
கொடிகாமம்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P:- 021 205 0341
077 9174425

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதில் தவறில்லை

## *சொல்கிறார் வாசுதேவ நாணயக்கார*

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தவறில்லை என இடதுசாரிக் கட்சிகளிடையே பொதுக் கருத்துக் காணப்படுவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இடதுசாரிக் கட்சிகள் சில இணைந்து நேற்றுக் காலை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர். இதன்போது கருத்து வெளியிட்ட வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எது எவ்வாறு இருப்பினும் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் அவர்களது நடவடிக்கைகள் குறித்து அரசு அவதானமாக இருக்க வேண்டும்.

அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரிவினை குறித்த கருத்தைக் கைவிட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது. எனினும் அவர்கள் தேசிய ஐக்கியத்துக்கு அத்திவாரம் இடத் தயாராக உள்ளனரா என்ற கேள்வியை நாம் எழுப்புகின்றோம்-என்றார். (த-வி)


# INVITATION FOR BID

## CONSTRUTING OF FUEL STATION AT VADIYADY - POONAKARI M.P.C.S LTD

## KILINOCHCHI

01 The Chairman on behalf of the M.P.C.S Committee, Poonakari M.P.C.S Ltd., invites **Sealed Bids** from the **eligible and qualified Bidders** for the **Construction Work** of a Fuel Station, described in the table below.

02 To be eligible for contract award, the successful bidder shall not have blacklisted and shall have been registered in the field of **Building Construction** for the grade mentioned in the table below with the Institute for Constriction Training And Development (ICTA).

03 The Interested Bidders may obtain further information from **The Chairman, M.P.C.S Ltd., Poonakari, Kilinochchi (Tel.No:021-2060852)** and inspect the bidding Documents at The Chairman's Office on any working days from 09.00 am to 1.00 pm up 24th December, 2015.

04 The Interested Bidders may obtain the Complete set of Bidding Document in English Language from the office of The Chairman, M.P.C.S Ltd. Poonakari by paying (Cash) an amount of Rs. 2,000.00 as a Non Refundable Deposit and the Closing date of Bidding will be on 24.12.2015 - 1.00 p.m.

05 Bids (in Duplicate) shall be delivered of sent by Registered Post to The Chairman, M.P.C.S Ltd, Poonakari on or before 24.12.2015 - 1.00 p.m. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of Bidder's Representatives who chose to attend.

06 The successful Bidders will be allowed only up to 45 days (08.02.2016)

| Description of work | Estimated Cost Rs in Million | Contract Period | Minimum ICTAD Grade Required | Required Bid Security Amount |
|---|---|---|---|---|
| Construction of a Fuel Station Building at Vadiyady Poonakari- Kilinochchi | 15.2M | 3 Months | 7 up (And above) | Rs. 152,000.00 |

**The Chairman,**
**M.P.C.S. Ltd.**
**Poonakari, Kilinochchi.**




திருகோணமலை பிரடெரிக் கோட்டையை அண்மித்த கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் நேற்றுக் காலை திருகோண மலை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறு வள்ளங்களில் தூண்டில்களைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட பகுதியில், குறித்த மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைக்கொண்டு மோட்டார் படகில் மீன் பிடியில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு உபயோகித்த தடைசெய்யப்பட்ட வலை உள்ளிட்ட, மோட்டார் படகு மற்றும் இயந்திரம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ற)

# 2015 உஷ்ண ஆண்டு

## *காலநிலை ஆய்வு மையம் தகவல்*

கொழும்பு, டிசெ .1

இந்த ஆண்டு உலகில் மிக உஷ்ணமான ஆண்டாகுமென உலக காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சமுத்திரம் பெரிதும் உஷ்ணமடைந்து நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதும், பச்சை வீடுகளில் இருந்து வாயுக்கள் வெளியேறுவதும் இந்த ஆண்டு பெரிதும் உஷ்ணமடைந்திருப்பதற்குக் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

மனிதனின் பொறுப்பற்ற செயற்பாடுகளே இவ்வாறு ஏற்படுவதற்கு 95 வீத காரணமாகியிருப்பதாகக் காலநிலை ஆய்வுகள் மையம் கூறியுள்ளது.

இந்தக் காலநிலை மாற்றமானது எதிர்கால உலகம் முகம் கொடுக்க வேண்டிய மிகப் பெரிய பயங்கரமான சவால் எனவும், அதற்கு உடனடியாகப் பரிகாரங்களைக் காண்பதற்கு முயற்சிக்காதுவிடின் உலகப் பாதுகாப்பும், உலக மயப் பொருளாதாரமும், சுற்றாடலும் அழிந்து போகுமெனவும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆய்வு மையத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார். (த-22)


## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வயோதிபப் பெண் ஒருவரைப் பரிமாரிப்பதற்கு 30 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

தொடர்பு:
077 028 0271
(62213)(12.15)


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்
## 2016ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள். மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2016 தொடக்கம் 31.12.2016ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இ | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் வெட்டுமிடம், மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 7878150.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 172305.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1000.00 | 10000.00 | 2835825.30 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7500.00 | 150000.00 | 250.00 |
| 5 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 57487.50 | 250.00 |
| 6 | கோழிக்கடை இல 07 | 750.00 | 7500.00 | 255150.00 | 250.00 |
| 7 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 42000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 16088415.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 53025.00 | 250.00 |
| 3 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | 50000.00 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 01.12.2015 – 10.12.2015 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் - 11.12.2015 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் - 11.12.2015 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 2015.11.12ஆம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. தியாகராசா தியாகச்சந்திரன்**
**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வக அனுமதி - 2016

சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண்பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன பிள்ளைகளுக்கான உணவு, உடை உட்பட அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும். இத்தகைய நிலையில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 20.12. 2015 இற்குப் பிந்தாமல் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழி சமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு: தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி இல: 021 224 0146

## ஐந்தாம் ஆண்டு நினைவு

பிறப்பு
20.11.1953

இறப்பு
01.12.2010





திருமதி மல்லிகா
**மரினி கீதபொன்கலன்**

"உலகில் என்னை அன்பு செய்தோரே
இப்போதும் எப்போதும் எனக்காக
இறைவனிடம் மன்றாட மறவாதீர்!"
"மண்ணில் வாழ்ந்து செல்லும் தாயே
விண்ணில் இறைவன் இன்பம் தருவார்"

தற்காலிக முகவரி:
சிந்திப்பந்தல் மேற்கு, இளவாலை.

குடும்பத்தினர்.

# பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏற்படுத்தமாட்டோம்

## பரிஸில் இலங்கையரிடம் ஜனாதிபதி மைத்திரி உறுதி

கொழும்பு, டிசெ.1
நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எவ்வாறான நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நேற்றுமுன்தினம் இலங்கையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
நாட்டின் பாதுகாப்புக்கு சிறிதளவேனும் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாட்டை நாம் செய்யமாட்டோம். அதற்கான முழுப் பொறுப்பையும் நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -
கடந்த காலத்தில் எமக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. தற்போது அது கிடைத்துள்ள நிலையில், மேலும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் நான் ஈடுபட்டுள்ளேன். அதன் மூலம் எமது நாட்டின் தேசிய பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

> நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும், தேசிய பாதுகாப்புக்காகவும், நாளைய தலைமுறைக்காகவும், உலகத்தின் முன்னேறிச்செல்லும்நாடுகள் வரிசையில் நாமும் இணைந்து செயற்பட்டு வெற்றிபெற வேண்டும்.

நாட்டுக்கு மட்டுமன்றி நாளைய தலைமுறைக்கும் ஒரு கௌரவமான பாதுகாப்பு அவசியம். அந்த வகையில் நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும், தேசிய பாதுகாப்புக்காகவும், நாளைய தலைமுறைக்காகவும், உலகத்தின் முன்னேறிச் செல்லும் நாடுகள் வரிசையில் நாமும் இணைந்து செயற்பட்டு வெற்றிபெற வேண்டும்.
அதேபோன்று தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த கடந்த அரசுகளால் முடியாமல் இருந்த நிலையில், எமது அரசு அதனைச் செய்துள்ளது. இற்றைக்கு இரண்டு வாரங்களுக்குமுன்னர் அதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.
19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, மனிதஉரிமைஆணைக்குழு, பொலிஸ்ஆணைக்குழு என இதுவரை 9 ஆணைக் குழுக்களை நிறுவியுள்ளோம்.
நாட்டில் நல்லாட்சியை நிலை நாட்டும்நோக்கில் ஊழல் மோசடிகளை முடிவுக்குக் கொண்டு வந்து, மக்களுக்குச் சுதந்திரமான ஜன நாயகமான நாட்டை ஏற்படுத்திக் கொடுக்கும் அவசியமான அனைத்துச் செயற்பாடுகளையும்நாம்முன்னெடுத்துச் செல்கின்றோம்.
உலகின் தலைசிறந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றிக் காட்டுவேன் என கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவேன் -என்றார். (ற)

(இது குறித்த படம் 10 ஆம் பக்கத்தில்)

## தற்போதைய அரசு விரைவில் கவிழும் என திஸ்ஸ ஆரூடம்

கொழும்பு, டிசெ. 1
வெகுவிரைவில் தற்போதைய அரசு கவிழ்க்கப்படும் என்று லங்கா சம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர்செயலாளர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.
சோசலிச் மக்கள் முன்னணியினால் நேற்றுக் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அதேவேளை மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரசேன விஜேசிங்க, வரவு-செலவுத்திட்டத்தில் வெட்டப் பட்ட உர மானியங்கள் மீளவும் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ற)

## அரச வைத்திய அதிகாரிகள் போராட்டம்

கொழும்பு, டிசெ.1
நாடளாவிய ரீதியில் அரச வைத்திய அதிகாரிகள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.
குறித்த சங்கத்தினால் நேற்று (திங்கட்கிழமை) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அதன் செயலாளர் டாக்டர் நலிந்த ஹேரத் இதனைத் தெரிவித்தார்.
இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வரிச்சலுகையுடனான வாகனக் கொள்வனவு அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டமையைத் தாங்கள் கண்டிப்பதாகவும், தாங்கள் எதிர்பார்த்தது போன்று வரவு-செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் எவருக்கும் அடிப்படைச் சம்பளத்தில் எவ்வித அதிகரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை போன்ற காரணத்தை முன் வைத்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.
எதிர்வரும் வாரமளவில் இடம்பெறவுள்ள இந்தப் போராட்டம், நாடுதழுவிய ரீதியில் இடம்பெறும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ற)

யா/புனித ஜோண் பொஸ்கோவின் சாதனையாளர்களின் கௌரவிப்பு விழா - 2015






அகில இலங்கையில் ஆரம்பப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் உயர் நிலைப் பெறுபேறுகளைப் பெற்று முதன்மை நிலைப் பாடசாலையாகத் தேசிய ரீதியில் தரமுயர்ந்து நிற்கின்ற யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்திப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கின்ற சிறப்பான நிகழ்வு இன்றைய இனிய நாளில் நடை பெறுகின்றது.

இன்றையபரிசில் நாள் நிகழ்வுகள் (01.12.2015) செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி, ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு வித்தியாலய முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் இடம் பெறுகின்றது. நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் உயர்திரு. அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் அவர்கள் கலந்து சிறப்பிக்கின்றார். கௌரவவிருந்தினராக வைத்திய கலாநிதி சிவராஜா கார்த்திகன் அவர்கள்(பழைய மாணவன்) கலந்து சிறப்பிக்கின்றார்.

புனிதமான கல்விப் பாதையில் வெற்றிக்கனிகளைப் பெற்றிட வழிகாட்டிய அதிபர் அவர்களையும், ஆசிரியப் பெருந்தகைகளையும் , அவர்களோடு ஒன்றிணைந்து உழைத்த பெற்றோர்களையும் இனிய நாளில் வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

64 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
சுப்பிரமணியம் சிவானந்தன்
இன்று (01.12.2015) செவ்வாய்க்கிழமை
64 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்
சுப்பிரமணியம் சிவானந்தன்
அவர்களை சகல செல்வங்களையும்
பெற்று நீடூழி வாழ்கவென இறை
ஆசிவேண்டி வாழ்த்துகிறேன்.
Happy Birthday
வாழ்த்துபவர்:
ம.அலைக்சன்
குரும்பசிட்டி கிழக்கு.



சேவைநலன் பாராட்டு



யாழ் போதனா வைத்தியசாலையில்
கடந்த 32 வருடகாலமாக தாதியாகவும்,
விடுதிப் பொறுப்புத் தாதியாகவும் விடுதிச்
சகோதரியாகவும் கடமையாற்றி
13.11.2015 அன்று ஓய்வு பெற்றுச் சென்ற
திருமதி
பரமேஸ்வரி பாலசூரியன்
அவர்களை சகல சௌபாக்கியமும் பெற்று
குடும்பத்தினருடன் பல்லாண்டு காலம் வாழ
மனதார வாழ்த்துகின்றோம்.
தாதிய உத்தியோகத்தர் நலன்புரி
கூட்டுறவுச்சங்கம் , யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது பற்றிஷன்
தொழிற்பயிற்சி
நிறுவனத்தின் முன்னாள்
போதகரும் தற்போதைய
பாதுகாவலரும்,
முகாமையாளருமாகிய
அதி வணக்கத்துக்குரிய
ஜஸ்ரின் பேணாட்
ஞானப்பிரகாசம்
ஆண்டகை
அவர்களை இறை
அருளுடன் நற்பணி ஆற்றிட
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
பதிவாளர், அலுவலர்கள்,
தொழிலாளர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்
பற்றிஷன் தொழில் பயிற்சி
நிறுவனம்
Patrician Institutes
No.61,ST.Patrick's Road,
Jaffna.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று 01.12.2015 கொழும்பு
BMICH இல் நடைபெறும்
பட்டமளிப்பு விழாவில்
விஞ்ஞான முதுமாணிப்பட்டம்
பெறும்
திரு திருமதி
குட்டித்தம்பி ஈஸ்வரி
தம்பதியினரின்
செல்வப்புதல்வன்
குணாளன்
( B.Sc Special M.Sc Merit )
அவர்களை வல்லியாவத்தை பராசக்தி அம்மன்,
இமையாணன் ஸ்ரீமுருகப் பெருமான் ஆகியோரின் அருள்
பெற்று மென்மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும்
வாழ வாழ்த்துகின்றோம்.
தேவி பவனம்,
வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.
வாழ்த்துவோர்:
சிவலிங்கம், நாகம்மா, இராசு, பசுபதி,
குலேந்திரராஜா, சரோஜினிதேவி,
சிறிலங்கருபன், மல்லிகாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

## வழிபடுநர் பேரவை, உறுப்புரிமை விண்ணப்பம் கோரல் - 2016

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத்திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியிலோ நேரடியாகவோ செலுத்த இயலும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 01.12.2015 தொடக்கம் 31.12.2015 மாலை 5 மணிவரை ஆகும்.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய காசுக்கட்டளை தபாற் கட்டளை விவரங்கள் தேவைப்படும் இடத்தில் 0213213024 021 320 7785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாகத் தயாரித்துக் கொள்ளலாம். 2015 ஆம் ஆண்டு வழிபடுநர் பேரவை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் விண்ணப்பத்தை விண்ணப்பிக்க விரும்பின் வழிப்படுநர் பேரவையின் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திலும் (2ஆவது அட்டவணை) அவ்வாறு இல்லாது புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வழிபடுநர் பேரவை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் (முதலாவது அட்டவணை) விண்ணப்பிக வேண்டும்.

குறிப்பு : - விண்ணப்பங்கள் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும்.

* சமாதான நீதிவான்
* இந்து மதகுரு
* இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்
* கிராம சேவை உத்தியோகத்தர்
* அரசாங்கப் பாடசாலை அதிபர்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயருடன் கூடிய இறப்பர் முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

ஆ. தியாகராசா,
தலைவர்
அறங்காவலர் சபை.

முதலாம் அட்டவணை

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர்
2. பிறந்த நாள் :
3. இந்து சமயத்தவரா?
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலில் வழிபடுபவரா?
5. நீங்கள் உறுப்புரை 3(2)(ஏ) அல்லது 3(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின் இந்த ஆண்டு கோயிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச் சீட்டு தொடர்பான விவரங்களைத் தருக:

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப் பட்டது என்ற விவரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி:
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற் கட்டளையின் விவரம்:
காசுக்கட்டளை / த.க. எண் அலுவலகமும் வழங்கியநாளும் தொகை
8. நீங்கள் ஏதாயினும் குற்றத்துக்காக நீதிமன்றம் எதிலாவது எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விவரங்களையும் தருக.
9. இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விவரங்களையும் தருக.

மேற்கூறிய விவரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மை யானவையும், சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துகிறேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவுசெய்துகொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

................................
விண்ணப்பகாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணகாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்பத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்துகொண்டதாக தென்பட்டதோடு, என் முன்னிலையில் .... ஆம் ஆண்டு ..... மாதம் ............ நாளன்று ...........................எனுமிடத்தில் தமது கையொப்பத்தையும் இட்டார்.

................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:- விண்ணப்பகாரரின் ஒப்பம், சமாதான நீதிவான்; இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவைஅலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக் கான ''றபர் ஸ்டாம்ப்'' இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2015.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேணடும்.

இரண்டாம் அட்டவணை

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையை புதுப்பித்தற்கான விண்ணப்பம்

நயினாதீவு
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிவிலின்
அறங்காவலர் சபை செயலாளருக்கு

அன்பார்ந்த ஐயா,

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

......ஆம் ஆண்டு சனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவைக்கான எனது சந்தாவை புதுப்பித்துக் கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன். ........................... அஞ்சலகத்தால் ...... ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட ............. ஆம் இலக்கங்கொண்ட காசுக்கட்டளை/தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன் வழிபடுநர் பேரவை யின் ஓர் உறுப்பினராகப் பதிவுசெய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று வெளிப்படுத்துகின்றேன்.

................................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்துகொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் .... ஆம் ஆண்டு ..... மாதம்........ நாளன்று .................... எனுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார்.

........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:- விண்ணப்பகாரரின் ஒப்பம், சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவைஅலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான ''றபர் ஸ்டாம்ப்'' இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2015.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேணடும்.

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## சில குழுக்கள் வதந்தி பரப்புகின்றன என்கின்றார் பாதுகாப்புச் செயலாளர்

கொழும்பு, டிசெ. 01

இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக, நாட்டுக்குள்ளும் வெளியேயும் இருக்கின்ற தீவிரவாதக் குழுக்களே வதந்திகளைப் பரப்புகின்றன என்று, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். அரசியல் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்படுகின்ற சில குழுக்கள், நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பல்வேறு வதந்திகளைப் பரப்பிவருகின்றன என்றும் அவர் கூறினார்.



ஒரு நாட்டின் பிரஜையொருவர், இனம் மற்றும் மத பேதங்கள் இன்றி, அவர்களின் வைபவங்களை நடத்துவதற்கும் மற்றும் நினைவு கூர்வதற்கும் இடமிருக்கின்றது. அவ்வாறானவற்றைப் பலவந்தமாக நிறுத்துவதற்கு எவ்விதமான தேவையும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் உரிமைகளுக்கு எதிராகவும் அவ்வாறானவற்றுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் அரசு செயற்படாது என்றும் அவர் கூறினார்.

அவ்வாறான செயற்பாடுகளுக்கு மத்தியில் அனைவரினதும் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்த முடியும். நாட்டின் சமாதானத்தை சீர்குலைக்காத வகையில் அவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்குமாறும் பொலிஸாருக்கு நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

# சில அரச வங்கிகளை ஒன்றிணைக்கத் திட்டம்

கொழும்பு, டிசெ. 01

அரச வங்கிகள் சிலவற்றை ஒன்றாக இணைப்பதற்கு வரவு - செலவுத்திட்ட அறிக்கையில் முன்மொழியப்பட் டுள்ளது.

அதற்கமைய, வீடுகள் அபிவிருத்தி நிதி நிறுவனங்கள் வங்கியும் (எச்.டீ.எப்.சீ. வங்கி) அரச ஈடுகள் மற்றும் முதலீடுகள் வங்கியும் ஒருங்கிணைக்கப்பட்டு தேசிய வீடுகள் வங்கியாக புதிய வங்கியொன்று நிறுவப்படவுள்ளது.

லங்கா புத்ர வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்திகள் வங்கி ஒருங் கிணைக்கப்பட்டு லங்கா சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி வங்கியாகப் பெயரிடுவதற்கும், திவிநெகும (வாழ்வின் எழுச்சி) வங்கியை ஒன்றிணைத்து தேசிய சேமிப்பு வங்கி செயற்படவுள்ளது.

வங்கிகளின் கட்டமைப்பைப் பலப்படுத்தும் நோக்கில் வங்கிகளை ஒன்றிணைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. (த-22)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் திறக்கப்பட்டது பனைசார் உணவு உற்பத்தி நிலையம்





புதுக்குடியிருப்பு,டிசெ.1
புதுக்குடியிருப்பு, பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பனைசார் உணவு உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் சங்க தலைமைக் காரியாலய வளாகத்தில் இலங்கைக்கான நோர்வே நாட்டின் தூதுவரால் திறந்து வைக்கப்பட்டது.
இந்த பனைசார் உணவு உற்பத்தி நிலையம் யு.என்.டி.பி நிறுவனத்தின் வழிகாட்டலின் கீழ் நோர்வே நாட்டு நிதிப்பங்களிப்புடன் கட்டப்பட்டது.
சங்கத்தின் பொது முகாமையாளர் றா.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கட்டடத் திறப்பு நிகழ்வு தொடர்பான நினைவுக் கல்லை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் தொர் வஜோன் கௌவ்ஸ்ரடதர் திரைநீக்கம் செய்து வைத்தார். பனை சார் உணவு பதனிடல் நிலையத்தின் பெயர்ப் பலகையை முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் திரைநீக்கம் செய்து வைத்தார். இலங்கைக்கான நோர்வே தூதுவர், முல்லை.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உ. சுபசிங்க, புதுக்குடியிருப்புப் பிரதேச செய லாளர் பிரதாபன், புதுக்குடியிருப்பு பங்குத் தந்தை அருட்தந்தை சாள்ஸ் ஜஸ்ரின் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.
நோர்வேத் தூதுவரின் வருகையை நினைவு படுத்தி முல்லை மாவட்ட அரச அதிபர், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஆகியோரால் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

(ஐ-ரி7,21)

## இயக்குநர் சபை தெரிவு

சாவகச்சேரி,டிசெ.1
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 23 கிளைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 100 கிளை உறுப்பினர்களிலிருந்து இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.
இயக்குநர் சபைக்கான தெரிவில் இரு பகுதியினர் போட்டியிட்டதால் வாக்கெடுப்பு மூலம் உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டது. இதில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இருவருக்கான போட்டியில் த.சுரேந்திரன், பா.தயாகரன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.
மிகுதி 5 பேரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் செ.மகேஸ்வரன், த.அப்புத்துரை, உ பரமநாதன், கு.மாதவன், ஆ.தில்வைநாதன் ஆகியோர் வாக்குகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.
வாக்குகளின் அடிப்படையில் செ.மகேஸ்வரன் தலைவராகவும் தா.அப்புத்துரை உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஐ-9)

## பிடியாணை இருக்கத்தக்கதாக கசிப்புக் காய்ச்சிய மீசாலை நபர்

### பொலிஸாரிடம் வசமாக மாட்டினார்

சாவகச்சேரி,டிசெ.1
நீதிமன்றால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாக இருந்த மீசாலை வயற்கரை வாசி ஒருவர் கசிப்பு உற்பத்தி செய்து கொண்டிருந்த வேளையில் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.
இந்தச் சம்பவம் கடந்த வாரம் மீசாலையில் இடம் பெற்றது.
கசிப்பு உற்பத்தி தொடர்பாக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சுற்றவாளியெனக் கூறியதால் பிணையில் விடுவிக்கப்பட்ட இந்த நபர் நீதிமன்றில் வழக்குத் தவணைகளுக்கு வராமல் தலைமறைவாகி இருந்துள்ளார்.
இதனால் இவர் மீது நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நபர் மீசாலைப் பகுதியில் நடமாடுவதாகப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் அங்குள்ள பற்றைப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.
இதன் போது குறித்த நபர் கசிப்பு உற்பத்தி செய்த நிலையில் இருந்ததைக் கண்டு அவரைக் கைது செய்தனர்.
அவரிடம் இருந்து கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்கள், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் இரண்டு ரம் கோடா மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு ஆகியவற்றையும் கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

(ஐ-9)

# கல்லுண்டாயில் மிக விரைவில் கழிவு மீள்சுழற்சி

### ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ. 1
வெளிநாடுகளில் பின்பற்றப்படும் முறைகளைப் போன்று கழிவுப் பொருள்களைத் தரம் பிரித்தல், பசளையாக்குதல் மற்றும் மாற்றுவகையில் பயன்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் யாழிலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. இது குறித்துக் கருத்து தெரிவித்த யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன்;
இந்தச் செயற்பாட்டின் முதற்கட்டமாக கல்லுண்டாயில் பத்து ஏக்கர் பரப்பளவில் கழிவுப் பொருள்களைச் சேகரிப்பதற்கான பகுதியும், காக்கை தீவில் இவற்றைப் பயனுள்ளதாக மாற்றி மீண்டும் பயன் படுத்துவதற்கான தொழிற்சாலையும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் இன்னமும் சிறிது காலத்தில் நிறைவடையவுள்ளன. அதனால் யாழ்.மாநகரசபை பகுதியில் கழிவகற்றல் செயல் முறைகள் விரைவாக மேற்கொள்ளப்படவுள்ளன என்று குறிப்பிட்டார்.
யாழ்.மாநகரசபை எல்லையில் கழிவகற்றலுக்கான முன்னேற்பாடுகள் 12 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அன்றாடக் கழிவுகளை அகற்றுவதில் பல்வேறுபட்ட சவால்களை யாழ்.மாநகரசபை நாளாந்தம் எதிர்கொள்கின்றது. இவற்றை அப்புறப்படுத்துவதற்கு சரியான ஏற்பாடுகள் இல்லாத நிலையிலேயே அதற்கான நடவடிக்கைகள் தற்போது நடை பெற்று வருகின்றன. மழை காரணமாக இந்தப் பணிகளில் பல்வேறு பின்

> 24 மணி நேரத்துக்கான பாதுகாப்பு முறைகள் மேற் கொள்ளப் பட வுள்ளதுடன். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே கழிவுகளை அகற்றுவதற்கான அனுமதி வழங்கப்படவுள்ளன.

னடைவுகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.
காக்கை தீவில் சேதனப் பசளை, பிளாஸ்ரிக் மீள்சுழற்சி முறை என்பவற்றுக்கான இயந்திரங்களைப் பொருத்தும் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன. கல்லுண்டாயில் தற்போது பரீட்சார்த்தமாக பத்து ஏக்கர் நிலப்பரப்பில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதற்கும் அவற்றைத் தரம் பிரித்து மீள் சுழற்சி முறையில் பயன்படுத்துவதற்குமான ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. காலப்போக்கில் இது 20 ஏக்கர் நிலப்பரப்பாக அதிகரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.
கல்லுண்டாயில் தனியார் குப்பைகளைக் கொட்டும் நடவடிக்கையை இயன்றளவு தடுத்துள்ளோம். இந்தப் பகுதியைச் சுற்றிலும் முழுமையான கம்பி வேலிகள் அமைக்கப்படவுள் ளன. ஏனெனில் பொலித்தீன் மற் றும் கால்நடைகளின் தொந்தரவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை யும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் கழிவகற்றும் வாகனங்கள் செல்வதற்கான உள்ளக வீதி அமைப்புக்களும், வாகனச் சக்கரத் தைத் துப்புரவு செய்வதற்கான நீர்க்கடவைகளும் அமைக்கப்படவுள்ளன. இந்தப் பகுதியில் 24 மணி நேரத் துக்கான பாது காப்பு முறைகள் மேற்கொள்ளப்பட வுள்ளதுடன். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே கழிவுகளை அகற்றுவதற்கான அனுமதிகளும் வழங்கப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டார் ஆணை யாளர்.
மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள 40 குளங்களையும் புனரமைத்து அவற்றை குடிநீர்த் தேவைக்காகப் பயன் படுத்துவதற்கான கோரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் கழிவு நீர் வாய்க்கால்களும் புனரமைக்கப்படவுள்ளன எனவும் வாகீசன் மேலும் தெரிவித்தார்.

(ஐ-ரி5)

## புதிய இளையோர் நாடாளுமன்ற உறுப்பினரிடையே பதவிப் போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.1
புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பதவி நிலையில் போட்டித் தன்மை உருவாகியுள்ளது என்று அகில இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் உப தலைவர் எஸ்.விஜிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –
புதிதாகத் தெரிவான இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கான நான்கு நாள்கள் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டுள்ளது. இதன் போது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எனப் பிரிக்கப்பட்டுள்ளன.
இந்த நிலையில் ஆளுங்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், உப தலைவர்கள், சபாநாயகர், அமைச்சர்கள் போன்ற பதவிகள் வழங்கப்படவில்லை. குறித்த தலைமைத்துவம் சார்ந்த விடயங்களுக்கு போட்டித்தன்மை நிலவுகின்றது.
இந்தத் தேர்தலில் வேட்பாளர்களாகக் களமிறங்கி வாக்குகள் மூலம் வெற்றிபெற்று 160 உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தனர். ஏனையவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவாகியவர்கள்.
இந்த நிலையில் தலைமைத்துவம் சார்ந்த பதவிகளை தங்களுக்கு வழங்கும்படி நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவாகியுள்ளவர்கள் கோரியுள்ளனர். இது வாக்குகள் மூலம் வெற்றி பெற்றவர்களுக்கு சவாலாக அமைந்துள்ளது.
இளையோர் நாடாளுமன்றம் சார்ந்த உத்தியோகத்தர்களும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரி வாகியோருக்கு சாதகமாகவே பேசி வருவதை அவதானிக்க முடிகிறது. வாக்குகள் பெற்று வென்றவர்கள் தங்களுக்கு துறை சார்ந்த அறிவு, அனுபவம் உள்ளதால் தலைமைத்துவப் பதவிகள் தங்களுக்கே வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர் – என்றார்.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராட்சைப் பழத் தரத்தை உயர்த்த தூண்டும் சுரப்பு

## அறிமுகப்படுத்துகிறது விவசாயத் திணைக்களம்

யாழ்ப்பாணம்,டிசெ.1
திராட்சைப் பழங்களின் தரத்தை மேம்படுத்த ஜிபர்லிக் அமிலம் எனும் தூண்டும்சுரப்பைப்பயன்படுத்தலாம் எனத் விவசாயத் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் கே.சிறிபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கையில் யாழ்.மாவட்டம் திராட்சைச் செய்கைக்கு பிரபல்யமானது. இருந்த போதிலும் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் திராட்சைப் பழங்களின் தரம் தொடர்ச்சியாக கேள் விக் குறியாகவே உள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் "ஸ்ரேல் ப்ளூ" இனத் திராட்சைப் பழக் கலை இறுக்கமானதாகவும் நடுத்தரப் பருமன் கொண்டதாகம் உள்ளது.

அத்துடன் பழங்களின் இனிப்புத் தன்மையும் குறைவு, பழங்களின் பருமன் சிறிது, பழங்கள் வெடித்தல், பழங்களுக்குள்ளே பீடைகள் உட்செல்வதைக் கட்டுப்படுத்தலில் கடினம் போன்ற சிரமங்களை திராட்சைச் செய்கையாளர்கள் எதிர்நோக்குகின்றனர்.

இதனால் திராட்சைப் பழங்களின் கேள்வி குறைவாகவுள்ளது. பழங்

> பழங்களின் சுவை, தரம் போன்றவற்றை மேம்படுத்த கடந்த 2 வருடங்களாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை சாதகமான பெறுபேற்றைக் காட்டியுள்ளன.

களின் சுவை, தரம் போன்ற வற்றை மேம்படுத்த கடந்த 2 வருடங்களாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை சாதகமான பெறுபேற்றைக்காட்டியுள்ளன. இதனால்செய்கையாளர்கள் பயன் பெற்றுள்ளனர்.

இதனை மேம்படுத்த திராட்சைக் கொடிகள் கத்தரிக்கப்பட்டவுடன், குறித்த நாள் இடைவெளியில் வெவ்வேறு அளவான செறிவுகளில் "ஜிபர்லிக் அமிலம்" எனும் ஒரு வகை தூண்டும் சுரப்பு பயன்படுத்தப்படுகின்றது.

ஜிபர்லிக் அமிலம் பாவித்த கொடிக் குலைகளின் நீளம் அதிகரிக்கப்பட்டு பழங்களுக்கிடையிலான இடைவெளி அதிகரிப்பதன்மூலம்பழங்கள்பெரிதாகும் தன்மையும் அதிகரித் துள்ளது. அதுமட்டுமன்றி பழங்களின் இனிப்புச் சுவை யின் அளவும் அதிகரித்துக் காணப்படுகிறது.

எனவே,திராட்சைக் கொடிகள் கத் தரிப்பவர்கள், பழங்களின் தரத்தையும் சுவையையும் மேம்படுத்த விரும் பும் விவசாயிகள், யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் அல்லது விவசாயப் போதனாசிரியர்களிடம் இதற்குரிய தொழில் நுட்பங்களை அறிந்து சிறந்த பயன்களைப் பெறலாம்.

ஜிபர்லிக் அமிலம் எனும் தூண் டும் சுரப்பை தவறாகப் பயன் படுத்தினால் இதன் விளைவுபாதகமாக அமையும். எனவே செய்கையாளர்கள் விவசாயத் திணைக்களத்தில் சரியான தகவலைப் பெற்ற பின்னரே குறித்த தூண்டுதல் சுரப்பனப் பாவிக்க வேண்டும் - என்றார். (ஐ-10)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லை மக்களுக்கு உதவிகள்



முல்லைத்தீவு,டிசெ.1
முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் கொட்டித் தீர்த்த கன மழை காரணமாக வடக்கின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் "உணவளிப்போம்" அமைப்பினுடாக 269 குடும்பங்களுக்கான ஒவ் வொன்றும் 650 ரூபா பெறுமதியானபகுதியளவுஉதவிகள் வழங் கப்பட்டுள்ளன.

மழையால்முற்றாகப்பாதிக் கப் பட்ட முல்லைத்தீவின் பண்டாரவன்னி, பேராறு, பழைய முறி கண்டி, புத்து வெட்டுவான் பகுதிகளிலேயே அவைவழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் முல்லைத் தீவு மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், உணவளிப்போம் அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த உதவித்திட்டத்துக்கான நிதி யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியின் 2005 ஆம் ஆண்டு உயர்தரவகுப்புமாணவர்களால் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. (ஐ-ரி5)

## வடக்கு கைத்தொழிலாளருக்கு முதன் முறையாக விருதுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.1
வடக்கின் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான விருது வழங்கும் விழா யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வை யாழ் வர்த்தகத் தொழிற்துறை மன்றமும், வர்த்தகம் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும்தேசியதொழில் முயற்சி அபி விருத்தி அதிகார சபையும் இணைந்து நடத்தவுள்ளன.

வடமாகாணத்தைச் சேர்ந்த கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த சிறந்த தொழில்முயற்சியாளர்களில் தெரிவு செய்யப்பட்ட குறுகிய, சிறிய, நடுத்தர மற்றும் பெரியளவிலானதொழில் துறைகளை இனங்கண்டு 20 விருதுகளுக்கான போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

தொழில்துறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக தொழில் முயற்சி அதிகார சபையின் பணிப்பாளர் எச்.எம்.எஸ்.எல். விஜயவர்தன, வடக்கு ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ். பளிஹக்கார மற்றும் இந்தியதூதரகத்துணைத் தூதுவர் ஏ.நடராஜன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-10)

## டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

சாவகச்சேரி,டிச.1
யாழ்.குடாநாட்டில் டெங்கின் தாக்கம் அதிகரித்து வருவதால் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் உள்ள கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டுக்குழுக்கள் ஊடாக டெங்கைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுவினர் வீடு வீடாகச் சென்று, டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்கும் செயற்பாட்டினை மேற் கொள்ளவுள்ளனர்

இதன்பிரகாரம் நுணாவில் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான கிராம டெங்கு கட் டுப்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெறும்.

இந்தக்கலந்துரையாடலில் பிரிவைச் சேர்ந்த குழு உறுப்பினர்களையும், பொதுமக்களையும்கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த ஒரு மாத காலத்தில் முப்பதுக்கும் மேற்பட்டோர் டெங்கினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)



நோர்வே அரசின் நிதிப் பங்களிப்பின் கீழ் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி) ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் இளையோர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உதவித் திட்டம் வழங்கும் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (ஐ)

## தொழிற்சாலைக் கழிவுகளால் நோய்கள் வருவதில்லை

### வெளியான தகவல் தவறு என்கின்றனர் நாவாந்துறை மக்கள்

யாழ்ப்பாணம்.டிசெ.1
நாவாந்துறைப் பகுதியில் இயங்கி வரும்தொழிற்சாலைகளின் கழிவுகள் கடல் நீரில் கலப்பதால் அந்தப் பகுதி மக்களுக்கு சரும நோய்கள் ஏற்படுகின்றன என்று தகவல் கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபைப் பிரதிப் பணிப்பாளர் திருமதி ச.விஜிதாவிடம் கேட்டபோது;

இந்த விடயம் தொடர் பில் அந்தப் பகுதி மக்களால் எந்தவித முறைப் பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை. எனினும் சம்பவம் தொடர்பில் விசாரித்து நடவடிக்கை எடுக்கப் படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாவாந்துறைப் பகுதியில் குடியிருப்புக்கள் நெருக்கமாக அமைந்துள்ளன. இந்த நிலையில் அங்குள்ள தொழிற்சாலைகளின் கழிவுகள் கடல் நீரில் கலப்பதால் சரும மற்றும் தொற்று நோய்கள் ஏற்படுவதாக அண்மைக் காலங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அந்தப் பகுதி மக்களும் குறித்த தகவலை மறுத்தனர். தமக்கு அவ்வாறான சரும நோய்கள் ஏற்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் கழிவுக் கடலுடன் கலக்கின்றன. அது உண்மை. ஆனால் கலக்கும் கழிவுநீர் ஓரிடத்தில் தேங்கி நிற்பதில்லை. அது கடல் நீருடன் கலந்து விடும். கழிவு தேங்கியிருந்தால் தான் நோய்கள் ஏற்படும். தொழிற்சாலைக் கழிவுகள் குடியிருப்புக்களைநெருங்குவதில்லை. இதனால் எத்தகைய சரும மற்றும் தொற்று நோய்களும் எங்களுக்கு ஏற்படவில்லை. இந்தப் பகுதியில் எத்தனையோ கைக்குழந்தைகள் கூட உள்ளனர். அவர்களும் தேக ஆரோக்கியத் துடன்தான் உள்ளனர். இதுவரையில் தொழிற்சாலை கழிவுகளால் சரும நோய்கள் ஏற்பட்டதாக நாம் அறிய வில்லை என்று அவர்கள் கூறினர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2,694 சிறுவர்கள் சிறுவர் இல்லங்களில்

## வடக்கு சிறுவர் திணைக்கள பணிப்பாளர் விஸ்வரூபன் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.1
வடக்கு மாகாணத்தில் உள்ள 46 சிறுவர் இல்லங்களில் 2 ஆயிரத்து 694 சிறுவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சிறுவர் திணைக்களப் பணிப்பாளர் விஸ்வரூபன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் போர் உள்ளிட்ட பல காரணங்களால் பல சிறுவர்கள் மாகாணத்தின் 46 சிறுவர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் ஆயிரத்து 830 பெண்களும் 864 ஆண்களுமாக 2 ஆயிரத்து 694 பேர் சிறுவர் இல் லங்களில் தங்க வைக்கப்பட் டுள்ளனர் என்று அவர் தெரி வித்தார்.

**“வடமாகாணத்தில் இயங்கும் 46 சிறுவர் இல்லங்களில் 33 இல்லங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய 13 இல்லங்கள் பதிவு செய்யப்படவில்லை. இவை தொடர்ந்து இயங்குவதானால் பதிவு செய்யப்பட வேண்டும்.”**

இவ்வாறு தங்கியுள்ளவர்களில் அதிகமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 இல்லங்களில் 682 பெண்களும், 268 ஆண்களுமாக 950 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 210 பெண்களும், 43 ஆண்களுமாக 253 பேரும், வவுனியாவில் 342 பெண்களும், 134 ஆண்களுமாக 476 பேரும், கிளிநொச்சியில் 441 பெண்களும், 277 ஆண்களுமாக 718 பேரும், மன்னாரில் 155 பெண்களும், 142 ஆண்களுமாக 297 பேரும் என மொத்தமாக 2 ஆயிரத்து 694 சிறுவர்கள் பராமரிக்கப்படுகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார். குறித்த சிறுவர்களைப் பராமரிக்கும் இல்லங்கள் தொடர்ச்சியாக கண் காணிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் ஒரு சில இல்லங்களில் அடிப்படை வசதிகள் போதாமல் உள்ளன. அவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

வடமாகாணத்தில் இயங்கும் 46 சிறுவர் இல்லங்களில் 33 இல்லங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய 13 இல்லங்களும் பதிவு செய்யப்படவில்லை. இவை தொடர்ந்து இயங்குவதானால் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும், இல்லையேல் அவற்றை மூடுவதற்கு உரிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பதிவு செய்யப்பட்ட 33 இல்லங்களில் யாழில் 16 இல்லங்களும், வவுனியாவில் 4 இல்லங்களும், மன்னாரில் 5 இல்லங்களும், முல்லைத்தீவில் 4 இல்லங்களும், கிளிநொச்சியில் 4 இல்லங்களும் இயங்கும் அதே வேளையில், பதிவு செய்யப்படாமல் வவுனியாவில் 6 இல்லங்களும், மன்னாரில் ஒரு இல்லமும், முல்லைத்தீவில் ஒரு இல்லமும், கிளிநொச்சியில் 4 இல்லங்களும், யாழில் ஒரு இல்லமும் இயங்குகின்றன. இதேவேளையில் அச்சுவேலியில் ஓர் அரச சிறுவர் சீர்திருத்தப் பள்ளியும் உள்ளது. அங்கு 53 சிறுவர்கள் நீதிமன்ற உத்தரவுகளின் பிரகாரம் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-10)



போரால் இடம் பெயர்ந்து மீளக்குடியேறிய மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட முனைக்காட்டில் 17 லட்சம் ரூபா செலவில் நூலகம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. (ற)

## சுகாதாரச் சீர்கேட்டுக்கு மத்தியில் யாழ்.மாநகர இந்து ஆலயங்கள்

### குற்றஞ் சாட்டுகின்றது இந்து சமயப் பேரவை

யாழ்ப்பாணம்,டிசெ.1
யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட இந்து ஆலயங்களும், இந்துநிறுவனங்களும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்கி வருகின்றன என்று யாழ்.இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்து ஆலயங்களும், இந்து நிறுவனங்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல் இந்து சமயப் பேரவைத் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்து ஆலயங்களின் சுற்றாடல்களில் துப்புரவுப் பணிகளை மாநகரசபை மேற்கொள்வதில்லை. அதேவேளை நாகவிகாரை,நாவலர் வீதி சுத்தம் செய்யப்படுகிறது. பொதுமக்களின் வீடுகளைச் சுத்தம் பேணாது விட்டால் அவர்களுக்கு தண்டப்பணம் அறவிடப்படுவதுடன், வரிகளையும் அறவிடுகிறது மாநகரசபை. ஆனால் மாநகரசபைப் பணியாளர்கள் தமக்குரிய பணிகளைச் சீராக மேற்கொள்வதில்லை எனவும், இது தொடர்பில் நீதித்துறை உரிய நடவடிக் கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-ரி6)

## பாடசாலைக்கு வர்ணம் பூச என அறவிடப்பட்ட பணம் எங்கே?

### தரம் 1 அனுமதிக்குப் பணம் கொடுத்த பெற்றோர் கேள்வி

வவுனியா,டிசெ.1
வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட பிரபலமான பாடசாலை ஒன்றில் மாணவர் அனுமதிக்காகப் பெறப்பட்ட நிதியில் பாடசாலை அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தரம் ஒன்றுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதன் போது பாடசாலைக் கட்டடத்துக்கு வர்ணம் பூசுவதற்கென பெற்றோரிடம் குறைந்தது ஆயிரம் ரூபாவிலிருந்து ஐயாயிரம் ரூபா வரையில் பெறப்பட்டது என்று கூறப்படுகிறது. தற்போது 11 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் எந்தவித வேலைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தவிர பாடசாலை மாணவர்களிடமும் வர்ணம் பூசுவதற்கென நிதி சேகரிப்பு மேற்கொள்ளப்பட்ட போது, இந்த விடயம் வலயக்கல்விப்பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய மாணவர்களிடம் சேகரிக்கப்பட்ட பணம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜிடம் கேட்டபோது:

பாடசாலை மாணவர்களிடம் பெறப்பட்ட பணம் தனது அறிவுறுத்தலுக்கமைய மீண்டும் ஒப்படைக்கப்பட்டது, மாணவர் அனுமதியின் போது பணம் பெறப்பட்டுள்ளது. அதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது, அதற்கான வேலைகள் ஏதும் இடம்பெற்றதா இல்லையா என்பது தொடர்பில் எனக்குத் தெரியவில்லையெனவும், இது தொடர்பில் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொண்டு விசாரிக்கவுள்ளேன் என்றும் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டுக்கான மாணவர் அனுமதியின்போது நிதி சேகரிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-ரி2)



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் சார்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி நெல்லியடி இராஜ கிராமம் மற்றும் துன்னாலை மேற்கு கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 230 குடும்பங்களுக்கு உலருணவு வழங்கும் நிகழ்வு நெல்லியடி இராஜ கிராமத்தின் மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், கணேஷ்வரன் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர். (ஐ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.1
வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா, நிறுவுநர் தினம் மற்றும் திறப்பு விழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் அருணாசல சாஸ்திரிகள் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் ந.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்வார். (ஐ-ரி5)

## மழையை அடுத்து பாம்புகள் குடியிருப்புக்குள்

சாவகச்சேரி,டிசெ.1
தற்போது நிலவி வரும் மழையுடனான காலநிலையை அடுத்து பளைப் பிரதேசத்தில் பாம்புகள் மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்து பொதுமக்களைத் தீண்டிவருகின்றன. அத்துடன் பாம்பினால் தீண்டப்படுவோர் சாவகச்சேரி மற்றும் பளை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

வீட்டுக்குள் விளையாடிக் கொண்டிருந்த 4 வயதுச் சிறுவனை நேற்று முன்தினம் விசப்பாம்பொன்று தீண்டியுள்ளது. இதேவேளை சாவுச் சடங்கில் கலந்து கொண்டு மயானம் வரை சென்ற ஒருவர் அங்கு பாம்பால் தீண்டப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கெற்பேலியில் நடந்துள்ளது.

பாம்புகளால் தீண்டப்பட்டவர்கள் பளை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

## பொலனறுவைக்கு விஞ்ஞானிகள் படையெடுப்பு

பொலனறுவை,டிசெ.1
பொலனறுவை அருகே விழுந்த விண்கல்லில் பல அரிய உலோகங்கள் காணப்பட்டதையடுத்து, பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகளும் பொலனறுவைக்குப் படையெடுத்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டு பொலனறுவை திம்புலாகல பிரதேசத்தில் விண்கற்கள் விழுந்திருந்தன. இதனைச் சேகரித்திருந்த வானியல் ஆய்வாளர்கள் ரஷ்யாவின் விண்வெளி ஆய்வுமையம் ஒன்றுக்கு மேலதிக ஆராய்ச்சிகளுக்காக அனுப்பி வைத்திருந்தனர்.

குறித்த ஆராய்ச்சியில் விண்ணிலிருந்து விழுந்த கற்களில் டைட்டானியம், தோரியம், யுரேனியம் போன்ற அரிய வகை உலோகங்கள் கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் அடையாளம் காணப்படாத நுண்ணுயிர்கள் மற்றும் இரண்டு வகையான பக்ரீறியாக்களும் குறித்த விண்கற்களில் உயிர்வாழ்ந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து தற்போது உலகின் பல்வேறு நாடு களின் விஞ்ஞானிகளினதும் கவனம் பொலனறுவை நோக்கித் திரும்பியுள்ளது. தற்போது பொலனறுவையை நோக்கிப் பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகளும் படையெடுத்து ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் தொழிற்சாலை மீதான இடைக்காலத் தடை நீக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.1
ஒலி மாசடையும் விதத்திலும், அருகில்குடியிருக்கும் அயலவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் விதமாகவும் இயங்கி வந்த ஐஸ் தொழிற்சாலையின் தொழிற்பாட்டுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் விதிக் கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவு கடந்த வெள்ளிக்கிழமை நீக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் பெரிய தோட்டம், மணியந்தோட்டம் பகுதியில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் இயங்கி வந்த ஐஸ் கட்டிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையின் செயற்பாட்டினால் ஒலி மாசடைதல் இடம்பெறுவதாகவும், பிள்ளைகளின் கல்வி நடவடிக் கைகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்தப்பகுதியை சேர்ந்தவர்களினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடொன்று பதிவு செய்யப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்த பின்னர், அந்த விடயம் நீதிமன்றி னால் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணையின்போது முறைப்பாட்டாளர் தரப்பில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் குறித்த தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளதால் இரவு நேரத்தில் தொழிற்சாலை இயந்திரங்கள் எழுப்பும் பெரிய சத்தம் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளைப் பாதிப்பதாகவும், சூழலின் அமைதி பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சாலை உரிமையாளர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி சகல நிறுவனங்களிலிருந்தும் அனுமதிப் பத்திரத்தைப்பெற்றுக்கொண்டே தொழிற்சாலையை ஆரம்பித்ததாகவும், பெரியளவில் மூலதனம் இடப்பட்டுள்ளதாகவும், தொழிற்சாலையில்பலதொழிலாளர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளதாகவும், தொழிற்சாலையின் செயற்பாடுகள் பாதிக்கப்படும் பட்சத்தில் பெரியளவு நட்டம் ஏற்படுமெனவும் ஒரு மாத காலத்தினுள் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் அனுமதியைப் பெற்று நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

இரண்டு தரப்பு வாதங்களையும் கவனத்தில் எடுத்த நீதிமன்றம் தொழிற்சாலைகள் உரிய நியமங்களைப் பின்பற்றி செயற்பட வேண்டுமெனவும், ஒலி மாசடையும் விதத்தில் செயற்பட முடியாது எனவும், அயலிலுள்ள மக்களினதும், பிள்ளைகளினதும் அமைதி குலைவதை அனுமதிக்க முடி யாது எனவும் தெரிவித்து, இயந் திரங்களின் ஒலியைக் குறைக்கும் பொறிமுறையொன்றைக் கையாளும் வரை தொழிற்சாலையின் செயற்பாடுகளை மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணி வரையும் நிறுத்துமாறு இடைக்காலத் தடையுத்தரவை வழங்கியது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது தொழிற்சாலை உரிமையாளர் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி கஜப்பிரியா திருக்குமரன் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட அனுமதிப் பத்திரத்தை மன்றில் சமர்ப்பித்து தற்போது ஒலி அளவு குறைக்கப் பட்டு தொழிற்சாலை மறு சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் எனவே மன்றினால் விடுவிக்கப்பட்ட தடையுத்தரவைநீக்கி தொழிற்சாலையை முழுமையாக இயங்க அனுமதிக்குமாறு கோரினார்.

இதனையடுத்து நீதிவான் பெ. சிவகுமார் அயலிலுள்ளவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தொழிற்சாலை இயங்க வேண்டுமென எச்சரித்து இடைக்காலத் தடையுத்தரவை நீக்கினார்.

(த-ஐ-103)



ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் பிரான்ஸ் சென்றடைந்தார். அவரை சாள்ஸ் டி கோல் விமான நிலையத்தில் பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் வரவேற்றார். (த)

## ஒளி விழாவும் பாராட்டும்

வவுனியா,டிசெ.1
வவுனியா பிரமண்டு வித்தியாலயத்தில் ஒளிவிழாவும் தரம் 5 மாணவர்களுக்கான பாராட்டு விழாவும் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி ஏம். ஏ. மோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, எம்.பி. நடராஜ், வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசபாதம் உட்பட பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ஐ-402)

# 6 லட்சம் பெறுமதியான தங்க நகைகள், பணம் முள்ளியவளையில் திருட்டு

## வீட்டை உடைத்துத் திருடர் கைவரிசை

முல்லைத்தீவு,டிசெ.1
முல்லைத்தீவு முள்ளியவளையில் உள்ள வீடொன்று உடைக்கப்பட்டு 6 லட்சத்து 15 ஆயிரம்ரூபா பெறு மதி மிக்க தங்க நகை களும், டிஜிற்றல் கமரா மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக முள்ளிய வளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டில் எவரும் இல்லாத சமயத்தில் கடந்த வாரம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் வீட்டின் கூரையை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றுள்ள திருடர்கள் வீட்டிலிருந்த 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க தங்க நகைகள், 30 ஆயிரம் ரூபா பணம், வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட 50ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க டிஜிற்றல் கமரா மற்றும் பழுதடைந்த தொலைபேசி என்பனவற்றையும் திருடிச் சென்றுள்ளனர்.

> குறித்த வீட்டில் எவரும் இல்லாத சமயத்தில் கடந்த வாரம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டுக்குத் திரும்பிய வீட்டின் உரிமையாளர்கள், வீட்டின் கூரை ஓடுகள் உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்ததுடன், குறித்த பொருள்கள் திருடப்பட்டுள்ளதையும் உடனடியாக முள்ளியவளைப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

எனினும் இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் இதுவரைக்கும் எவரும் கைது செய்யப்படவில்லை எனத்தெரிவிக்கும் முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ஐ-433)



ஐந்து நாள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய இராணுவ தளபதி தல்பீர் சிங், இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவை நேற்று முன் தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (த)

## தேர்ச்சித் தரவு விளக்கும் கூட்டம்

சாவகச்சேரி,டிசெ.1
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3,4,5 வகுப்புக்கான மாகாண மட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சித் தரவுகள் பதிவு தொடர்பான விளக்கமளித்தல் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் வகை 111 பாடசாலைகளுக்கு முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும், ஏனைய பாடசாலைகளுக்கு நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.(ஐ-9)

## முதியோர் சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம்,டிசெ.1
சுன்னாகம் நகர மத்தி முதியோர் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக மா.இராமலிங்கம், செயலாளராக திருமதி.செ.அழகேந்திரராஜா, பொருளாளராக செ.குலசிங்கம், உப தலைவராக சிறில் சுகந்திரன், உப செயலாளராக சி.மகாலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஒவ்வொரு பகுதியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவில் 8 பேரும், பதவி வழிப் போசகராக கிராம அலுவலர் எம்.கபிலன், இணைப்போசகர்களாக சே.இராசவல்லவன், சி.குமரவேல் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# அலைபேசி நிறுவனத்தின் அதிகாரி மீது நடவடிக்கை

## தாஜுதீன் கொலை வழக்கில்

கொழும்பு,டிசெ.1
பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் படுகொலையுடன் தொடர்புடைய அலைபேசி உரையாடல்களை மறைத்த குற்றச்சாட்டில், தனியார் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

வசீம் தாஜுதீனின் படுகொலை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அலைபேசியின் சிம் அட்டைகளில் பெருமளவிலான சிம் அட்டைகளைக் குறித்த தனியார் நிறுவனம் விநியோகித்துள்ளது.

குறித்த சிம் அட்டைகளுக்கான அலைபேசி உரையாடல்கள் தரவுகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவு குறித்த தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்திடம், கடந்த 2012 ஆம் ஆண்டு சம்பவம் நடைபெற்று சில தினங்களில் வேண்டுகோள் விடுத்திருந்தபோதும், இதுவரை அந்த உரையாடல்களின் தரவுகள் ஒப்படைக்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த படுகொலைச் சம்பவம் தொடர்பில் மொபிற்றல் மற்றும் எடிசலாட் சிம் அட்டைகளும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அந்த சிம் அட்டைகளுக்கான தொலைபேசி உரையாடல் தரவுகளை மொபிற்றல் மற்றும் எடிசலாட் நிறுவனங்கள் ஏற்கனவே குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைத்துள்ளன.

இந்த நிலையில் குறித்த சிம் அட்டைகளுக்கான தொலைபேசி உரையாடல்கள் தரவுகள் அழிந்துள்ளதால், தம்மால் அதனை ஒப்படைக்க முடியாதுள்ளதாகக் குறித்த தனியார் தொலைத் தொடர்பு நிறுவனம் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்துள்ளது.

மற்ற நிறுவனங்கள் இரண்டும் சம்பந்தப்பட்ட தரவுகளை வழங்கியுள்ள நிலையில், குறித்த தொலைத்தொடர்பு நிறுவனம் மாத்திரம் தரவுகளை வழங்காமல் இருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக வசீம் தஜுதீனின் படுகொலையுடன் தொடர்புள்ள பல முக்கியமான தகவல்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது.(த-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப் பொறிமுறைக்குள் வெளிநாட்டு நீதிபதிகள் வேண்டாம்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிசெ.1
இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் அமைக்கப்படவுள்ள உள்நாட்டு பொறிமுறைக்குள் வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்க முடியாது என்ற தீர்மானத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எடுத்துள்ளது.
இந்த விடயம் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கமாட்டாது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

> அடிப்படையில் நல்லிணக்கம் தொடர்பில் இன்னும் பரந்துபட்ட நடவடிக்கைகள் தேவை என்பது உணரப்படுகிறது.

கடந்த வார இறுதியில் கூடிய சங்கத்தின் உறுப்பினர்களின் முடிவின்படி, நாட்டின் அரசமைப்பு, பங்காளர்களின் நம்பிக்கை என்பவற்றை கருத்தில் கொண்டு இந்த விடயத்தில் முடிவெடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.
இது நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கையாக இருக்காது என்றும் சங்கம் குறிப்பிட்டுள் ளது.
இதேவேளை- ஐக்கிய நாடுகளின் ஜெனிவா இணக்கம், உதாலகம அறிக்கை, பரணகம அறிக்கை என்பவற்றின் அடிப்படையில் நல்லிணக்கம் தொடர்பில் இன்னும் பரந்துபட்ட நடவடிக்கைகள் தேவை என்பது உணரப்படுகிறது.
ஆயினும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் உள்ளவழக்குகளைதுரிதமாக விசாரணை செய்ய ஜனாதிபதியால் முன்னாள் நீதிபதி ஐராங்கனி பெரேரா நியமிக்கப்பட்டமையை சட்டத்தரணிகள் சங்கம் ஆட்சேபித் துள்ளது.
நடைமுறையில் திறமையான நீதிபதிகள் சேவையில் உள்ளபோது முன்னாள் நீதிபதியின் சேவை பெறப்பட வேண்டிய அவசியம் இல்லை. – என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ற)

## சோபித தேரர் நினைவாகக் கிராமம்

கொழும்பு, டிசெ.1
மறைந்த சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரரின் நினைவாக மாதுளுவாவே சோபித கிராமம் என்றபெயரில் உதாகம்மான வீடமைப்புத் திட்டம் ஒன்று அமைச்சர் சஜித் பிரேமதாசவால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
அம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுணுகம்வெகர பிரதேச செயலக பிரிவிலேயே இந்த வீடமைப்புத் திட்டத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ள்ளன. 150 வீடுகள் இந்தத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளன.
குறித்த வீடமைப்புத் திட்டம் அரசின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் ஒதுக்கப்படவில்லை. பிரத்தியேக அன்பளிப்புக்களின் மூலமாகவே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
தமிழ் – சிங்களப் புத்தாண்டுக்கு முன்னதாக இந்த வீடமைப்புத்திட்டப்பணிகள் நிறைவு செய்யப்படவுள்ளன என்றும்– தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## சாட்சியங்களைப் பாதுகாக்க விசேட பாதுகாப்பு இல்லம்!

இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு தகவல்
கொழும்பு, டிசெ.1
இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவுக்கு சாட்சியங்களை வழங்கும் தரப்பினரைப் பாதுகாப்பதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய சாட்சியாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில் விசேட பாதுகாப்பு இல்லங்கள் நிறுவப்பட உள்ளன.
ஊழல் மோசடிகள் தொடர்பில் முறைப்பாடு செய்யும் மற்றும் சாட்சியங்களை வழங்கும் நபர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கினால், அவர்களை இந்த விசேட பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட உள்ளது.
ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யும் மற்றும் சாட்சியமளிக்கும் நபர்களின் பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளனஎன்றுகிடைக்கப்பெற்றமுறைப்பாடுகளின் அடிப்படையில், இந்தப் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.
நம்பகமான முறையில் முறைப்பாடுகளையும் சாட்சியங்களையும் பெற்றுக் கொள்ள இந்த புதிய நடைமுறை வழிவகுக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவினால் புதிய இணையத்தளமொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளது என்றும்– இந்த இணையத் தளத்தின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் ஆணைக்குழு ஊடகங்களுக்கு அறிவித்துள்ளது. (ற)




# நீங்கள் ஏன் இப்படி?

யாழ். கல்வியங்காடு, ஆடியபாதம் வீதிப் பகுதியில் அமைந்துள்ள நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி பாலர் பாடசாலைக்கு அருகில் உள்ள வீதியில் பலராலும் குப்பைகள் கொட்டப்படுகின்றன. அதனால் சிறார்களும், அந்தப் பகுதி மக்களும் பெரும் சுகாதாரச் சீர் கேட்டை எதிர் கொண்டு வரு கின்றனர்.



குறித்த பாடசாலை மதில் ஓரமாக வீட்டுக் குப்பைகள், மிருகக் கழிவுகள் மற்றும் பழுதடைந்த உணவு வகைகள் வீசப்படுகின் றது. அதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. குப்பைகளில் உள்ள உணவு பொருள்கள் மற்றும் மிருக கழிவுகள் என்பவற்றை நாய்கள், காகங்கள் என்பன இழுத்து வீதியில் சிதறடிக்கின்றன. அதனால் குறித்த வீதியால் பயணம் செய்வோரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். குப்பைகளால் பெருகும் இலையான்களால் பாலர் பாடசாலை மாணவர்களுக்கும், அயலில் உள்ளவர்களுக்கும் தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய அபாயமும் காணப்படுகின் றது.
இந்த விடயம் தொடர்பில் யாழ்.மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டபோது அவர்களால் “இவ்விடத்தில் குப்பைகளைக் கொட்டாதீர்கள் எனும் அறிவித்தல் பலகை நடப்பட்டது. ஆனால் அதனை இரவோடு இரவாக இனம் தெரியாத விசமிகள் கழற்றிச் சென்றுள்ளனர். அதன் பின்னர் குப்பைகளைக் கொட்டுவதற்கு என யாழ்.மாநகர சபையால் அங்கு வாளிகள் வைக்கப்பட்டன. அவையும் விசமிகளால் களவாடப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.



இந்த விடயத்தில் மாநகர சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்தனர். கழிவ கற்றலை உரியவாறு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அதேவேளை, குறிப்பிட்ட பாலர் பாடசாலை கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)





மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக அடை மழை பெய்து வருகின்றது. நேற்றுக் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 48 மணிநேரத்தில் 105.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட வானிலை அவதான மையம் தெரிவித்துள்ளது. கடும் மழை காரணமாக பல வீதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், போக்குவரத்தும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. புதிய காத்தான்குடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, நாவற்குடா உட்பட பல இடங்களில் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய அரசின் மெத்தனப்போக்கு நாட்டை எங்கே இழுத்துச் செல்லும்...?

ஏற்றுமதிப் பொருள்களுக்கு வரிச் சலுகை வழங்கப்படும் ஜி.எஸ்.பி. முறைமையின் கீழ் இலங்கை அரசுக்குக் கிடைத்திருந்த சலுகைகள் நீக்கப்படும்.

இந்த நாட்டின் ஏற்றுமதித்துறை மீது மேற்கண்ட குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்.

அண்மையில், தலைநகர் கொழும்பில், ஆடை உற்பத்தியாளர்களின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் டெலி, எச்சரிக்கைத் தொனியில் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இந்த ஆண்டின் முற்பகுதியில், இந்த நாட்டில் வதை முகாம்கள் உண்டு என்ற குற்றச்சாட்டைப் பிரதமர் மறுத்திருந்தார் என்பதையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

ஜி.எஸ்.பி. வரி என்பது இலங்கை அரசு எண்ணிக்கொண்டிருப்பது போன்று ஏற்றுமதிப் பொருள்களைப் பற்றியது மட்டுமன்று--

ஊடக சுதந்திரம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், சுற்றுச்சூழல் பிரச்சினைகளைப் பற்றியதுமாகும் என்று டேவிட் டெலி சுட்டிக்காட்டி உள்ளமை ஊன்றி நோக்கப்பட வேண்டியதாகும்.

திருகோணமலையில், இலங்கைக் கடற்படையினரின் இரகசிய வதைமுகாம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது மற்றும் கொழும்பில் மாணவர்கள் மீது பொலிஸார் அண்மையில் தாக்குதல் நடத்தியமை குறித்தும், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தமது உரையில் கருத்து வெளிப்படுத்தினார்.

அதற்கும் மேலாக, மனித உரிமைகள் தொடர்பில், தனியார் வர்த்தகத்துறையைச் சார்ந்தவர்கள், அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்று அவர் அழுத்தம் திருத்தமாக எடுத்தியம்பினார்.

ஏற்றுமதி வரிச் சலுகை விரைவில் இலங்கைக்குக் கிடைத்துவிடும் என்றும், அதன் பின்னர் நாட்டின் பொருளாதாரம் பெரும் முன்னேற்றம் கண்டுவிடும் என்றும்--

மன்னார் கடற்படுகையில் எண்ணெய்வளம், எரிவாயு வளங்கள் உள்ளன. அவை பயன்பாட்டுக்கு வந்ததும் மக்களின் சுமைகள் அகன்றுவிடும் என்றும்--

இப்போதைய அரசும்--மக்களுக்குப் போக்குக் காட்டி வருகிற நல்லாட்சி அரசும்--அதன் அமைச்சர் பிரதானிகளும் வாயடித்து வருகின்றனர்.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின், எங்கள் நாட்டுக்கான தூதுவரின் கருத்துக்கள், அவை ஊடான தகவல்கள், நல்லாட்சி என்ற "லேபல்" ஒட்டிய மைத்திரிபால சிறிசேன-ரணில் விக்கிரம சிங்க அரசு கந்தறு கோலத்தில் நகர்கிறது என்று உள்ளார்ந்து உயர்ந்துள்ள நிலையைப் புட்டுக்காட்டுகிறது எனலாம்!

மொத்தத்தில் இலங்கை அரசு, மனித உரிமைகளை மேம்படுத்துதல்--

நாட்டில் நிரந்தரமாக, முழுஅளவிலான சமாதானத்தை உருவாக்குதல்--

மக்கள் நலப்பணிகளுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு செய்தல்--

பாதுகாப்புக்கான செலவினங்களைக் குறைத்தல்--

ஆகிய அம்சங்களில் ஆழ்ந்து கவனம் செலுத்தி நாட்டு மக்களின் நலன்களைப் பேணவேண்டும்--என்று ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

அரசு அவரின் கருத்துக்களை, அறிவுரைகளை மனங்கொண்டு செயற்படுத்துமா? அன்றி இவர் யார், எமக்குச் சொல்ல என்ற மெத்தனப் போக்கில் ஏறிநின்று நாட்டை அர்க்கெடுத்துமா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்....!

# மகிந்தவின் ஆட்சிக் கனவு மைத்திரியால் நனவாகுமா?

சேரலாதன்





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது பதவிக்குரிய அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியாத நிலையில் முடங்கியிருப்பதைப் பார்க்கும்போது, இந்த நாட்டின் எதிர்காலம் என்னவாகும் என்ற கவலை மனதில் எழுகின்றது. இரண்டு பிரதான கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டிய நிலையில் அவரது ஆட்சி உள்ளதால் அவர் இவ்வாறு நடந்து கொள்கின்றார் என்பது தெளிவாகப் புரிகின்றது.

மோசடிக் குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளாகி இருக்கும் மகிந்த தரப்பினர் தற்போது எந்தவிதமான பதற்றமோ அல்லது கவலையோ இல்லாது காணப்படுகின்றனர். இவர்கள் மீதான மோசடிக் குற்றச்சாட்டு விசாரணைகள் ஆமை வேகத்தைவிட மந்த கதியிலேயே இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. மைத்திரியின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்கள் சிலரே மோசடிக் குற்றச்சாட்டு விசாரணைகளைக் குழப்பும் வகையில் செயற்படுகின்றனர். இவர்களில் ஒருவரான திலக் மாரப்பன ஏற்கனவே பதவி விலகிவிட்டார். இன்னொரு அமைச்சரான விஜயதாச ராஜபக்சவும் கடுமையான கண்டனங்களுக்கு ஆளானார்.

> ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட முன்னைய ஆட்சியாளர்கள் மீது உரிய விசாரணைகளை மேற் கொண்டு தண்டனை வழங்குவதில் நல்லாட்சி அரசு ஏன் தயக்கம் காட்டுகின்றது?

### மகிந்த தரப்பினர் எதிர்ப்பு

இந்த நடவடிக்கைகளை மகிந்த தரப்பினர் மிகக் கடுமையாக எதிர்த்துள்ளனர். இதுவே அவர்களுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கும் இடையிலான இரகசிய உறவுகளை அம்பலமாக்கியுள்ளது.

இந்த விடயத்தில் பெரும்பான்மையின மக்கள்கூட நிறையவே குழம்பிப்போய்க் காணப்படுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெறுவதற்கு முக்கிய சூத்திரதாரியாக விளங்கிய ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி இன்றளவும் நன்றியுணர்வுடனேயே நோக்கி வருகின்றார். ரணிலைப் பகைத்துக்கொண்டு தம்மால் எதையும் சாதிக்க முடியாதென்பது அவருக்கு நன்கு தெரியும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு அவருக்கு முழுமையாக இல்லாதநிலையில், ஐக்கிய தேசியக் கட்சியை அவர் அரவணைத்துத்தான் செல்ல வேண்டியுள்ளது. ஆனால் இதை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அனுமதிக்கப் போவதில்லை.

### உரிய விசாரணைகள் இடம்பெறுமா?

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட முன்னைய ஆட்சியாளர்கள் மீது உரிய விசாரணைகளை மேற்கொண்டு தண்டனை வழங்குவதில் நல்லாட்சி அரசு ஏன் தயக்கம் காட்டுகின்றது? என்பதே நாட்டில் வாழ்கின்ற மக்கள் எழுப்புகின்ற பிரதானமான வினாவாகும். ஆனால், மைத்திரி ஜனாதிபதியாகப் பதவி ஏற்று ஓர் ஆண்டு நிறைவுக்கு வரப் போகின்ற இந்த வேளையிலும் அதற்கான பதில் இன்னமும் கிடைக்கவில்லை. ஆனால் அரச தரப்பினர் இந்த விடயத்தில்அசமந்தமாக இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஜனாதிபதியின் கட்டுப்பாடற்ற நிறைவேற்று அதிகாரங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எவரும் கருத்து வேறுபாடு கொள்ளமுடியாது. ஆனால் தற்போதுள்ள நாடாளுமன்றத்தின் அரசியல் நிலவரங்களைப் பார்க்கும் போது மகிந்தபோன்று அல்லாமல் மிதமாக நடந்துகொள்ளக்கூடிய இயல்பைக் கொண்ட மைத்திரியிடம் அந்த அதிகாரங்கள் ஒரு குறிப்பிட்ட காலமாவது இருந்தால் குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கைகளை எவருக்கும் அஞ்சாத வகையில் மேற்கொள்ள முடியுமென எண்ணுபவர்களும் இல்லாமல் இல்லை.

### கட்சிகளின் பலம்

தற்போது நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளின் பலத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, தற்போதைய அரசு பெரும்பான்மைப் பலத்துடன் இருப்பதையே காண முடிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரிக்கு ஆதரவானவர்களும் ஒன்றிணைந்தாலே உரிய பெரும்பான்மை கிடைத்துவிடும். இந்த நிலையில் அரசுக்கு வெளியில் இருந்துகொண்டு ஆதரவு வழங்குவதற்கும் சில தரப்பினர் தயாராகவுள்ள னர். ஆகவே அரசைத் தோற்கடிப்பது என்பது தற்போது சாத்தியமானதாகத் தெரியவில்லை. ஆனால், மகிந்த தரப்பினர்மீதான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்குமாயின் இதில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் மத்தியில் ஒரு போர் வெற்றிவீரன் என்ற மாயத் தோற்றம் மகிந்த தொடர்பாக ஏற்படுத்தப்பட்டிருப்பதால் அவர் தண்டிக்கப்படுவதை அந்த மக்கள் ஏற்றுக்கொள்வார்களென எதிர்பார்க்க முடியாது. அவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்படுமாயின், அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்கெனச் சிலர் காத்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாகவே மகிந்த தரப்பினரின் விடயத்தில் ஜனாதிபதி அடக்கி வாசிப்பதை உணர முடிகின்றது.

ஜனாதிபதியின் இந்தப் பலவீனத்தை எதிர்த் தரப்பினர் நன்றாகவே புரிந்து கொண்டுள்ளதால் எந்தவித அச்சமுமின்றி அரசுக்கு எதிரான தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் திட்டமே, எந்த விதத்திலாவது இந்த அரசை வீழ்த்திவிட்டு மீண்டும் மகிந்தவை ஆட் சியில் அமர்த்துவதுதான். மைத்திரி அரசு தொடர்ந்து பலவீனமாகச் செயற்படுமாயின் மகிந்தவின் ஆட்சியின் கனவு நனவாகி விடக்கூடிய வாய்ப்புக்களும் ஏற்பட்டுவிடும்.

வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் கலைய...!

வந்தியத்தேவர்

இனவாதம் மக்களின் ஐக்கியத்தையும் இலங்கையின் வளர்ச்சியையும் மிகப் பெரிய அளவில் பாதித் துள்ளது என்பதை மறுப் பதற்கில்லை. தாங்கள் பெரும்பான்மை இனம்என்பதற்காகசிறுபான்மை இனமக்களை, அவர் தம் உரிமைகளைப் புறந்தள்ளி ஆட்சி நடத்துவது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எனினும் இலங்கை சுதந்திரமடைந்த நாள்தொட்டு அது பெரும்பான்மையாக வாழும் சிங்கள மக்களுக்கே உரிய நாடு என்றும், சிறுபான்மைத் தமிழர்கள் இந்த நாட்டின் பெரும்பான்மை இனத்தின் ஆளுகைக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் என்பதும் சிங்களத் தலைமைகளின் கோட்பாடாகி விட்டது.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னோடிகளாக தமிழர்களும் இருந்துள்ளனர். சேர்.பொன்னம்பலம் இராமநாதன், அருணாசலம் போன்றவர்கள் இதற்காக உழைத்தார்கள். இனவாதக் கருத்துக்களின்றி ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ், சிங்கள மற்றும் சிறுபான்மை மக்கள் ஒற்றுமையுடன் வாழலாம் என்ற நம்பிக்கையில் தமிழ்த் தலைமைகள் சிங்கள மக்களுடன் இணைந்து பிரித்தானியாவிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற உழைத்தனர்.

சுதந்திரம் கிடைக்கும் வரை தமிழ்த் தலைமைகளைத் தலைமேல் வைத்துக் கொண்டாடியவர்கள் அதன் பின்னர் தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாகக் கொண்டு தம்மை ஆளும் இனமாகக் கருதி அதற்கு உந்துசக்தியாக இனவாதத்தைக் கையில் எடுத்தனர்.

**நிரந்தரக் கொள்கையாக இனவாதம்**

இலங்கையில் ஆட்சிக்கான ஒரு நிரந்தரக் கொள்கையாக இனவாதத்தை ஆட்சியாளர்கள் முன்னெடுத்த நிலையில் கல்வியியலாளர்கள், புத்தி ஜீவிகள், வரலாற்றாளர்கள், பௌத்த மதத் தலைவர்கள் என அனைத்துத் தரப்பினரும் இனவாதக் கருத்துக்களை முன்னெடுப்பவர்களாகவே தங்களை உருவாக்கிக் கொண்டனர். தென்னிலங்கையின் இந்தக் கோட்பாடுகளால் வடபகுதியில் உள்ள தமிழர்கள் மற்றும் சிறுபான்மையினங்கள் கூட இனவாதக் கருத்துக்களைச் சுமக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

தமக்கெனத் தனித்தமிழ் இராச்சியமாக இருந்த பிரதேசத்தை அந்நியர் வருகை ஏற்படுத்திய மாற்றத்தாலும் அதன் பின் அந்நியரிடமிருந்து கிடைத்த விடுதலையின்போதும்கூடச் சரி இலங்கையில் ஒற்றுமையுடன் வாழமுடியும் என்பதால் பிரிந்து செல்லக் கோராத தமிழ்த் தலைமைகள் பின்னாளில் இனவாதிகளிடமிருந்து விடுதலை கோர இனவாதத்தையே கையில் எடுக்க வேண்டியதாயிற்று. தமிழ் மக்களும் இன முரண்பாடுகள் குறித்துப் பேசவேண்டிய நிலைக்குள்ளானார்கள். இலங்கையின் இனவாதத்துக்கான மூல கர்த்தாக்கள் சிங்களவர்களே என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

**பயனில்லாத ஆக்கங்கள்**

சிங்கள எழுத்தாளர்களும் சரி, தமிழ் எழுத்தாளர்களும் சரி தமது எழுத்துக்கள் மூலம் தம்மை நிலை நிறுத்திக்கொள்ள முயன்றார்களே தவிர இனங்களுக்கிடையிலான கருத்தொற்றுமை, நட்புறவு ஏற்படக் கூடியதான ஆக்கங்களை முன் வைக்கவில்லை.

> "இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன் னோடிகளாக தமிழர்களும் இருந்துள்ளான் சேர்.பொன்னம்பலம் இராம நாதன், அருணாசலம் போன்றவர்கள் இதற்காக உழைத்தார்கள். இனவாதக் கருத்துக்களின்றி ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ், சிங்கள மற்றும் சிறுபான்மை மக்கள் ஒற்றுமையுடன் வாழலாம் என்ற நம்பிக் கையில் தமிழ்த் தலைமைகள் சிங்கள மக்களுடன் இணைந்து பிரித்தானியாவிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெறக் காரணமாகினர்."

இதனால் அரசியல்வாதிகளால் தூண்டிவிடப்பட்ட இனவாதத் தீ வளர்ந்து கொண்டிருந்ததே தவிர ஒற்றுமை, சுபீட்சம் என்பவை நிலை நிறுத்தப்பட வாய்ப்புக்கள் அருகிப்போயின. இப்போது இனவாதக் கருத்துக்களுக்கு எதிராக சிங்கள இனவாத அரசியல்வாதிகள் சிலர் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிகின்றது. இதில் இதயசுத்தி எந்த அளவுக்கு உள்ளது என்பதைச் சரிவரத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் இனவாதத்தைக் கைவிட்டுத் தம்முடன் ஒத்து ழைக்க முன்வரவேண்டும் எனத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இலங்கையில் இனவாதத்தைக் கையிலெடுத்த சிங்கள அரசியல்வாதிகள் தாமே இந்த முதலீட்டாளர்கள் என்பதை மறைத்து தமிழ் அரசியல்வாதிகள் இனவாதத்தைக் கைவிட்டுத் தம்முடன் இணைய வேண்டும் எனக் கூறுவது என்பது விநோதமான ஒன்று. தமிழர்கள் தமது உரிமைகளுக்காக மட்டுமே போராடினார்களே தவிர இனவாதத்தைத் தூண்டவோ அதனை வளர்க்கவோ எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்படவில்லை. எனவே இனவாதத்தைத் தூக்கி வீசிவிட்டு தமிழ் மக்களுடன் இணைந்து ஒரு சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்ப சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களுடன் இணைய வேண்டியது தான் தார்மீகக் கடமை. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இனவாதம் என்பது எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களிடம் இருக்கவில்லை என்பதே உண்மை.

நாட்டை அதல பாதாளத்துக்குத் தள்ளி விடும் வினையை விதைத்தது தென்பகுதியே. அதற்குரிய பரிகாரத்தைக் காண வேண்டியதும் தென்பகுதியே.





## கிழக்கிலும் உதிக்கட்டும் உதயன்

அகவை முப்பதை நிறைவு செய்து 31 ஆவது ஆண்டில் காலடி வைத்திருக்கும் உதயனின் சாதனை பத்திரிகை உலகில் மிகப்பெரிய வெற்றி.

ஏனெனில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு பத்திரிகை தாக்குப் பிடிப்பது என்பது ஓர் இமாலயச் சாதனை, இந்த வெற்றிக்கு, நிர்வாகம், ஆசிரியர் குழு, தொழில் பகுதியினர், செய்தியாளர்கள், கட்டுரையாளர்கள், பத்தி எழுத்தாளர்கள், விநியோகத்தர்கள், விளம்பரதாரர்கள், விற்பனை முகவர்கள் அனைவரையும் தாண்டி வாசகர்கள் தந்த அளப்பரிய ஒத்துழைப்புத்தான் காரணம்.

வடக்கில் உதிக்கும் உதயன் கிழக்கிலும் தனது ஒளிக்கீற்றைப் பாய்ச்ச வேண்டும் என்பதே எனது அவா. உடனடியாக முடியாது போனாலும், மெல்ல மெல்ல அந்தப் பிராந்தியத்தைப் பிரதிபலிக்க, கிழக்கு மாகாணத்துக்கு ஒரு கிளை படரவைக்க, நிர்வாகம் முயற்சிக்க வேண்டும். பத்திரிகை உலகில் நவீன மயமாக்கப்பட்ட தொழில் நுட்பத்தில், இந்தக் கைங்கரியம் ஒரு பெரிய பிரச்சினையல்ல. இதேபோன்று நவீன உத்திகளைக் கையாண்டு, கிழக்கிலும் உதயன் உதிக்க மனமார வாழ்த்துகிறேன்.

*உமா மகாலிங்கம், நல்லூர்,*

## வெற்றிடங்களை நிரப்பவும்

வடமாகாண பொது நிர்வாக செயலகத்தில் ஆளணி அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் ஐயாயிரத்து 130 (பதவி வெற்றிடங்கள் 5,130) வெற்றிடங்கள் நிரப்பப்படாது வெற்றிடங்களாக உள்ளதாகவும், இவை பல வருடங்களாக நிரப்பப்படாது உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் இருந்த வடமாகாண ஆளுநர் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாதமை தொடர்பில் விபரங்களை முழுமையாக பெற்றிருந்தநிலையில், கடந்த ஜனவரி 8ஆம் திகதி இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடி வைத் தொடர்ந்து பதவியிலிருந்து விலகிச் சென்றார்.

இதனால் வடக்குக்குக் கிடைக்கவிருந்த ஆளணி நியமன வாய்ப்பு கைநழுவிப் போனது. வடமாகாண முதல்வர், வடமாகாண பிரதம செயலாளர் மற்றும் மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் வடக்கின் நிறைவேறாத இந்தத் திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்த முனைவதன் ஊடாக ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் பெறவும், பதவி உயர்வு பெறவும் வழிவகுத்து நீடித்த நிலைபேறான தன்மையும் உருவாக உதவ முடியும்.

*முருகு. [illegible]*

## அரச அதிபரின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

தமது சேவைக்காலத்தில் ஒரே சேவை நிலையங்களில் 10 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிய முகாமைத்துவ உதவியாளர்கள் இடமாற்றப் பட்டியல் 01.01.2016 முதல் நடைமுறைப்படுத்தப்படும் வண்ணம் அரச அதிபரால் வெளியிடப்பட்டமை வரவேற்கத் தக்கது. இவர்கள் தாம் கடமையாற்றும் நிலையங்கள் தமக்கே சொந்தம்என்றும், அலுவலகத்துக்கு வரும் பொதுமக்களை ஏனோ தானோ என்றுநடத்தும் பாணியில் இருந் தவர்கள். இவர்கள் இடம் மாற் றப் படுகின்றமை வரவேற்கத்தக்கது. தற்பொழுது இவர்கள் அரசியல்வாதிகளையும், ஏனையவர்களையும்கொண்டுஇந்தஇடமாற்றங் களை இரத்துச் செய்ய முயற்சித்து வருகின்றார்கள். இவர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஒரு சீரான அரசசேவை செயற்பாட்டில் தயவு செய்து தலையிடாதீர்கள். அரச அதிபர் ஒரு சிவில் உத்தியோகத் தர். அவர் அரச கொள்கைகளை நடைமுறைப்படுத் தும் போது அதைத் தடுக்காதீர்கள்.

நீங்கள்தானே முன்னாள் ஆளுநரை இடமாற்றம் செய்து சிவில் உத்தியோகத்தரை நியமியுங்கள் எனக் கூக்குரல் போட்டீர்கள். அவ்வாறாயின் அவ்வாறு நியமிக்கப்பட்ட சிவில் உத்தியோகத்தர்களை அவர்களது வழியில் கடமையாற்ற விடுங்கள். தயவுசெய்து அவர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்காதீர்கள். அரச அதிபர் எடுத்த இந்தத் துணிச்ச லான முடிவுக்கு வரவேற்பளிக்க வேண்டும். உங்களைப் போன்று 10 வருடங்களுக்கு மேலாகத் தீவுப் பகுதிகள், மருதங்கேணி போன்ற பிரதேசங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் தமது கடமையை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கிறீர்களா? அவர்களுக்கு குடும்பம், பிள்ளை குட்டிகள் இல்லையா? இடமாற்றத்தை இரத்துச் செய்ய ஓடித்திரியும் உத்தியோகத்தர்கள் தயவு செய்து இதனையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எந்த வகை யிலாயினும்2016 ஜனவரிமுதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த இடமாற்றங்களில் விட் டுக் கொடுப்பை செய்ய அரச அதிபர் முன்வரக்கூடாதென்பதே எமது விருப்பமாகும்.

*ம. கணேசராசா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸால் இளவயதுச் சாவுகள் அதிரடியாக 3 மடங்கு உயர்வு

## 15 வருடங்களில் இந்த நிலை என்கிறது யுனிசெவ் அறிக்கை

பிரிட்டோரியா, டிசெ .1



எய்ட்ஸ் நோயினால் ஏற்படும் இளவயதுச் சாவுகள் கடந்த 15 வருடங்களில் 3 மடங்காக அதிகரித்துள்ளதாக யுனிசெப் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தென் ஆபிரிக்காவில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் இளவயதுச் சாவுகளுக்கான முதலாவது காரணமாக எய்ட்ஸ் இனம் காணப்பட்டுள்ளது. சிறுவர்கள் மிகச் சிறிய வயதிலேயே நோய்த் தொற்றுக்குள்ளாகிறார்கள். 10 - 19 வயதுக் கிடைப்பட்ட சிறுவர்களே இந்த அபாயத்துக்குப் பெரிதும் முகம் கொடுக்கின்றனர். ஆபிரிக்காவிலேயே இந்த எண்ணிக்கை அதிகம் என அறிக்கை குறிப்பிடுகின்றது.

இளவயதுச் சாவுகளுக்கான இரண்டாவது காரணமாக எச்.ஐ.வி. தொற்றும் அதன் விளைவினால் எற்படும் உபரி நோய்களும் என அறிக்கை கூறுகின்றது. எச்.ஐ.வி. கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் இறப்புகள் குறையவில்லை என்றும் எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணித் தாய்மாரில் சிலரே , எச் .ஐ .விக்கான எதிர்ப்பு மருந்துகளை எடுக்கின்றார்கள் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தடுப்பு மருந்துகள் கிடைக்காமையால் எச்.ஐ.வி. தொற்றுக்களுடன் குழந்தைகள் பிறக்கும் நிலை தொடர்வது குறித்தும் அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக்குள்ளான சிறுவர்களில் பலர், தமது உடலில் எச்.ஐ.வி. தொற்று இருப்பதைப் பற்றித் தெரியாமலேயே வாழ்கின்றனர். தென் ஆபிரிக்கா, நைஜீரியா, கென்யா, இந்தியா, மொசாம்பிக் மற்றும் தான்சானியா ஆகிய நாடுகளிலுள்ள 15க்கும் 19க்கும் இடைப்பட்ட பதின்ம வயதினரில் ஒருவர் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 26 வகையான நோய்த்தொற்றுக்கு உள்ளாகின்றார். 10 லட்சம் சிறுவர்கள் இதுவரையில் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்கின்றனர் என்கிறது அறிக்கை.

"எச்.ஐ.வி. தொற்றால் பாதிப்புக்குள்ளான 15 வயதுக்குட்பட்ட 2.6 மில்லியன் சிறுவர் களில், ஒரு சிலரே தகுந்த சிகிச்சையைப் பெறுகின்றனர். 2000ஆம் ஆண்டிலிருந்து 1.3 மில்லியன் சிறு வர்கள் புதிய நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. பரவும் நிலையும் அதிகமாகக் காணப்படுகின்றது" என்கிறார் யுனிசெவ் தலைவர் கிரேக் மெக்லூர்.

2014ஆம் ஆண்டில் வைரஸ் எதிப்பு சிகிச்சை பெற்றுக்கொண்ட கர்ப்பிணிப்பெண்களின் எண்ணிக்கையில் 5 இல் 3 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்கள். கர்ப்பிணிப் பெண்கள் இவ்வாறான சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதால் 2000ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை, 4 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் இறப்பு 60 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சிகிச்சை முறை மூலம் இளவயதுச் சாவுகளைக் குறைப்பதுடன், நோயற்ற எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (உ-ரி4)



# ரோபோ சாரதியுடன் கார் பந்தயம் அடுத்த

## வரலாற்றுப் பாய்ச்சலுக்குத் தயாராகிறது

லண்டன்,டிசெ.1

மனிதச் சாரதிகள் இல்லாத ரோபோ கார்ப் பந்தயங்களை முதல் முதலாக அடுத்த வருடம் நடத்தப்போவதாக தானியங்கி ரோபோ தயாரிப்பு நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

கார்ப் பந்தயங்களுக்குப் புகழ்பெற்ற லண்டனின் பார்முலா-1 பந்தய ஏற்பாட்டாளர்களால் இந்தப் போட்டி நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பந்தயத்தில் மனித சாரதிகளுக்குப் பதில் ரோபோக்களே ஓட்டுநர்களாகக் களமிறக்கப்படவுள்ளன.

போர்முலா மின்னியல் கார்ப் பந்தயம் என அழைக்கப்படும் இந்தப் பந்தயத்தை அடுத்த ஜூன் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கார் உற்பத்திச் சந்தையில் பல நிறுவனங்களும் தானியங்கிக் கார்களை உற்பத்தி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வரும் நிலையில், இந்தப் பந்தயம் அவற்றுக்கு ஊக்கம் கொடுப்பதாக இருக்கும் என்று ந

"இந்த ரோபோ காா்
- தொழில்நு உ
பையும், சவால்கை
ளது" என்றார் பார்மு
டுத் தலைமை நிர்வ
ஆகாகை.

"இவ்வாறான முயற்
ர்காலத்தில் பாதுகாப்
அற்ற - பயணங்களு
கும் என்று எதிர்ப
ரோபோக்கள் ஓட்
கேற்கும், இந்தப்
லாற்றில் கொண்
தொன்று, தொழில்
உச்சப் பரிமாண
ளோம்" எனவும்
வித்தார்.

இந்தப் பந்தயம்
லாளர்களுக்கும், க
களுக்கும் சிறந்த வி
என எதிர்பார்க்கப்

# இறந்த விமானியின் உடல் ரஷ்யாவிடம் கையளிப்பு

## கிறிஸ்தவ முறைப்படி நல்லடக்கம்

மொஸ்கோ,டிசெ.1

துருக்கி சுட்டு வீழ்த்திய ரஷ்ய விமானத்தில் உயிரிழந்த விமானியின் உடல் ரஷ்யாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சிரிய எல்லையில் இடம் பெற்ற நிகழ்வில் உடலை ரஷ்ய அதிகாரிகள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.



சிரிய எல்லையை ஒட்டிய துருக்கி வான் பரப்பில் ரஷ்ய போர் விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. தாக்குதலிலிருந்து உயிர் தப்புவதற்காக பரசூட் மூலம் குதித்த இரு விமானிகளில் ஒருவர், சிரிய ஆயுததாரிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இறந்த விமானி யான ஒலிக்பஸ்கோவின் உடல் நேற்றுமுன்தினம் ரஷ்யப் பிரதமர் புடினிடம் முறைப்படி கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் உடல் கிறிஸ்தவ முறைப்படி நல்லடக்கம் செய்யப் பட்டது.

உயிர்பிழைத்த இன்னொரு விமானியான கொன்ஸ்டண்டைன், சிரியாவின் விசேட படைப்பிரிவினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டார். தாக்குதல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த கொன்ஸ்டண்டைன், 'விமானியின் இழப்பிற்குத் தாக்குதல் மூலம் பதில் சொல்ல வேண்டும், நான் மீண்டும் சிரியாவில் தங்கியிருந்து எனது பணியைத் தொடர்வேன்' என்றார்.

இந்தச் சம்பவம் ரஷ்ய - துருக்கி உறவைப் பெருமளவில் பாதித்துள்ளது. ரஷ்யா, துருக்கி மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

கடந்த வருடத்தில் மட்டும் 30 லட்சம் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் துருக்கிக்குப் பயணம் செய்துள்ளனர். துருக்கியின் வர்த்தக பங்காளிகளில், இரண்டாவதாக ரஷ்யா திகழ்ந்தது. விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து இவையெல்லாம் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. (உ-ரி4)



# பொது இடத்தில் சிறுநீர் கழிப்போருக்கு அதிர்ச்சிப் பாடம் கற்பிக்கும் ஜேர்மன்

ஜேர்மனி நாட்டில் பொது இடங்களில் அநாகரிகமாக சிறுநீர் கழிப்பவர்களுக்கு அதிர்ச்சிப் பாடம் கற்பிக்கும் வகையில் ஒரு புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஜேர்மனி நாட்டில் உள்ள கொலோஜின் நகரின் பொது இடங்களில் சிறுநீர் கழிப்பவர்களின் அநாகரிகமான செயல் பொதுமக்களைப் பெரிதும் அவதிக்குள்ளாகி வருகிறது.

குறிப்பாக, டச் பான் என்ற முக்கிய ரயில் நிலையத்தின் சுற்றுப்புறங்களில் சிறுநீர் கழிப்பது தொடர் வாடிக்கையாகி வருகிறது. பொறுப்பற்ற இந்தச் செயலைத் தடுக்கும் விதத்திலும், பொது இடங்களில் சிறுநீர் கழிக்கும் நபர்களுக்கு பாடம் கற்பிக்கும் வகையிலும் அந்த ரயில் நிலைய அதிகாரிகள் ஒரு புதிய தொழில்நுட் பத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

ரயில் நிலையங்களின் சுற்றுப்புறச் சுவர்களில் நவீன ஹைட்ரோஃபோபிக் என்ற வர்ணம் பூசப்பட்டுள்ளது. இவ்வாறு வர்ணம் பூசப்பட்ட சுவர்கள் மீது சிறுநீர் கழித்தால், அது சுவரில் பட்டுத் தெறித்து சிறுநீர் கழிக்கும் நபர்கள் மீது சிறுநீரைத் திருப்பிப் பாய்ச்சும்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த நவீன வர்ணப் பூச்சானது, ரயில் நிலையத்தில் உள்ள சுவர்களில் சுமார் 30 மீற்றர் பரப்பளவுக்குப் பூசப்பட்டுள்ளது. இந்த வர்ணம் பூசப்பட்ட சுவற்றின் மீது சிறுநீர் கழித்தால், அது உங்கள் மீது திருப்பி வீசும் என்ற எச்சரிக்கை வாசகங்களும் எழுதப்பட்டுள்ளன.

இந்த எச்சரிக்கை வாசகங்களை நம்பாமல் சிலர் சுவற்றின் மீது சிறுநீர் கழித்துப் பார்த்தனர் எனவும், அது அவர்கள் மீது தெறித்து விழுந்ததும் அதனைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்து ஓடியதை யும் அந்தப் பகுதி மக்கள் வீடியோ எடுத்து வெளியிட்டுள்ளனர். பல வருடங்களாக நீடித்து வந்த இந்த அசுத்தமான நிலைக்கு தற்போது விடிவு காலம் ஏற்பட்டுள்ளதாக நகர மக்கள் உற்சாகமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-ரி4)

# பாரி
# உல

## முக்கிய

பாரிஸ், டிசெ. 1

பாரிஸில் நடந்து
உலக கால நி
தொடர்பான மா
டுக்கு ஆதரவு தெரி
பல நாடுகளிலும்
வீர்ப்பு ஆர்ப்பாட்
இடம்பெற்று வரு
றன.

மனிதனால் இ
கைக்கு இழை
படும் தவறுகள
தடுக்கும் முயற்சி
இந்த மாநாடு திட்ட
பட்டுள்ளது. இத
இந்த மாநாட்டுக்
றுச் சூ யலாள
பெரும் ஆதரவு
வித்து வருகின்ற
மனிதச் செயற்
களால் சூழல் மா
வதைக் கட்டுப்ப
வேண்டும் என்று
யுறுத்தும் அவர்
காலநிலை மார்
களைக் கருத்தில் கொ
நடத்தப்படும்
மாநாட்டில் உல
ஒன்றைக் காண
கின்றனர்.

இதற்காக ஆஸ்
கூடிய சமூக அ
ஆர்ப்பாட்டம் நட
இதில் பங்கெடுத்
இல்லை" என்ற
ஊர்வ சென்ற
நடைபெற்ற இந்த
பேர் கலந்துகொண்
னர் என்று அதன்
அயர்லாந்து, செ

# அகதிகளுக்கு உதவ துருக்கியும் இணைவு

அங்காரா, டிசெ. 1

அகதிகளின் நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் திட்டத்தில் ஐரோப்பிய நாடுகளுடன் துருக்கியும் இணைந்துள்ளது.

அகதிகளுக்கான சலுகைகளை வழங்குவதற்கும், அவர்களுக்கான வாழ்வாதார வசதிகளை வழங்குவதற்குமாக 2.1 பில்லியன் பவுண்டுகள் துருக்கியால் வழங்கப்படவுள்ளது.

அகதிகளுக்கு உதவும் விடயத்தில் தமது நாடு ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என துருக்கிப் பிரதமர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தின் [illegible] ஆம் ஆண்டிலிருந்து, துருக்கிக் குடிமக்கள், ஐரோப்பாவின் செங்கென் பகுதிக்கு நுழைவிசைவுச் சீட்டு (விசா) எதுவுமின்றிப் பயணிக்கலாம். ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமே இந்தச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் 720,000 [illegible] ஐரோப்பிய [illegible]ள்ளதாக, உலக அகதிகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வரும் அகதிகள், ஐரோப்பாவுக்குப் பயணிக்கும்போது இடையில் தங்கி இளைப்பாறி விட்டுச் செல்லும் இடமாக இதுவரை துருக்கி இருந்துள்ளது. துருக்கி ஏற்கனவே 8 பில்லியன் அமெரிக்க டொலரை அகதிகளுக்காகச் செலவு செய்துள்ளது. (உ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ா முதல் ஜூனில்

து பார்முலா–1

நம்பப்படுகின்றது.
ார்ப் பந்தயம் அறிவியல்
அதிக எதிர்பார்ப்
ளையும் ஏற்படுத்தியுள்
ர்முலா–1 பந்தய ஏற்பாட்
ர்வாகி அலெஜாண்ட்ரோ

யற்சிகளின் மூலம், எதி
காப்பான – விபத்துக்கள்
களுக்கான வழி கிடைக்
ர்பார்க்கப்படுகின்றது.
ஓட்டுநர்களாகப் பங்
ப் பந்தயம் மனித வர
ண்டாடப்பட வேண்டிய
ழில்நுட்ப வளர்ச்சியில்
ணத்தை அடைந்துள்
அவர் மேலும் தெரி

ம் தொழில்நுட்பவிய
, கார்ப் பந்தயப் பிரியர்
த விருந்தாக அமையும்
ப்படுகிறது. (உ–ரி4)

# திமிங்கில வேட்டையை ஆரம்பித்தது ஜப்பான்



டோக்கியோ, டிசெ.1.
ஜப்பான் இன்று தொடக்கம் திமிங்கில வேட்டையை ஆரம்பிப்பதாக தெரிவித்துள்ளது. ஆராய்ச் சிக்காக வேட்டையாடுகிறோம் என்ற போர்வையில் வர்த்தக நோக்கத்துடன் வேட்டையாடப்படுகிறது என ஐக்கிய நாடுகள் குற்றம் சாட்டியுள்ளது.
இது தொடர்பில் தக வல் வெளியிட்ட, ஜப்பானின் கடல்வளத் திணைக்களம், டிசெம்பர் மாதத்திலிருந்து அடுத்த வருடம் மார்ச் வரை திமிங்கில வேட்டை இடம் பெறும் என தெரிவித்துள்ளது.
ஜப்பான் கடந்த ஒரு வருடமாக திமிங்கில வேட்டையை நிறுத்தியிருந்தபோதிலும், தற்போது இவ்வாறனதொரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஜப்பானின் திமிங்கில வேட்டையைக் கண்டித்து சூழல் ஆர்வலர்கள் அதற்கு எதிராக மேற்கொண்ட பல முயற்சிகளின் மூலம் அந்த வேட்டை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2014ஆம் ஆண்டு இது தொடர்பில் தொடுக்கப்பட்ட வழக்கில் திமிங்கிலங்களை வேட்டையாடுவது குற்றம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.
வேட்டைக்குச் சென்ற ஜப்பானியர்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்து நாடு திரும்பினர். ஆனால் தற்போது ஜப்பான், சட்டத்துக்குட்பட்ட விதத்தில் வேட்டையாடுவதாக அறிவித்துள்ளது.
ஆராய்ச்சிக்காக, குறிப்பிட்ட வகைத் திமிங்கிலங்களை வேட்டையாடத் திட்டமிட்டுள்ளனர். இந்தப் பெரும் வேட்டைக்காக 8000 தொன் எடையுள்ள பெரிய கப்பலுடன், 4 படகுகளும் இணைந்து செயற்படவுள்ளன. (ரி4)

> “2014 ஆம் ஆண்டு இது தொடர்பில் தொடுக் கப்பட்ட வழக்கில் திமிங்கிலங்களை வேட்டையாடுவது குற்றம் என தீர்ப்பளிக்கப் பட்டது.”



## நீரே அருந்தாமல் வாழ்ந்து ஆச்சரியமூட்டும் இளைஞர்

மூன்று வருடங்களாக தண்ணீர் அருந்தாமலும் வேறு எந்தத் திரவப் பொருளையும் அருந்தாமலும் ஆரோக்கியமாக வாழும் பீற்றர் பிளாக் என்ற 26 வயது இளைஞர் உலகை ஆச்சரியப்படுத்தி வருகிறார்.
தண்ணீர் அருந்தாத உணவுமுறையில் ஒரு மனிதன் 150 வயது வரை ஆரோக்கியமாக வாழலாம் என்று அவர் அடித்துக் கூறுகிறார். 2012 மே 5ஆம் திகதி மாலை 5 மணிக்கே தான் கடைசியாகத் தண்ணீர் குடித்தார் என்று பிளாக் கூறுகிறார்.
“நாம் நீர் அருந்துவது ஒரு வழக்கமாகிவிட்டது, அவ்வளவுதான். நாம் சாப்பிடுகிற அசைவ உணவுகளாலும் நீர் தேவைப்படுகிறது. காய்கறிகள், பழங்கள் போன்ற சைவ உணவுகளை மட்டும் சாப்பிடும்போது உடல் போதுமான நீர்ச்சத்தை அவற்றிலிருந்தே எடுத்துக்கொள்கிறது” என்கிறார் பிளாக்.
ஆண் தாதியாக முன்னர் தன்னைப் பதிவுசெய்திருந்த இவர் வெப்கேம் மொடலாகவும், பாலியல் பட நடிகராகவும் எழுத்தாளராகவும் உள்ளார்.
நீர் அருந்தாமல் வாழும் உணவு முறை பற்றிய புத்தகங்களை அதிகம் எழுதுகிறார். வலைத்தளத்தின் மூலமாகவும் தனது உணவுப் பழக்கத்தைப் பரப்புகிறார். விளக் கங்களை அளிக்கிறார். இவரது கருத்தைப் பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்றாலும், ஊட்டச் சத்து பற்றிய சிறப்பு வல்லுநர்கள் சிலர் அதனை ஏற் கின்றனர்.
பழங்கள், காய்கறிகள் என 800 இலிருந்து 1000 கலோரி வரையிலான உணவுகளை இவர் ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்கிறார். முழுக் கட்டுப்பாட்டுடன் பழங்களை வைத்தே நீர்ச் சமநிலையை மேற்கொண்டு வருகிறார். கரட், கிவி சாப்பிட்டால் அவை செரிமானமானதும் 2 அப்பிள், வாழைப்பழம் சாப்பிடுகிறார். சிறுவயதிலிருந்தே தேநீர், கோப்பி, புகை, மது என எந் தத் தீய பழக்கத்திற்கும் இடமளிக் காதவர்.
தனது உணவுப் பழக்க வழக்கம் பற்றி இவர் ஆரம்பத்தில் வீட்டில் கூறிய போது, அவரது தாய் கடுமையாகச் சத்தமிட்டிருக்கிறார். தந்தை அதிர்ச்சியடைந்திருக்கிறார். ஆனால், நாளடைவில் மகனது சொல்லைக் கேட்டு அவர்களும் சைவ உணவுப் பிரியர்களாக ஆகிவிட்டனர். ஆனாலும் அளவாக நீர் அருந்தி வருகின்றனர். (உ–ரி4)

## ரஷ்யா விமானத் தாக்கு: சிரியாவில் 40 பேர் சாவு

டமாஸ்கஸ், டிசெ.1
சிரியாவில் ரஷ்யப் போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் பல பகுதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு இஸ்லாமிய அரசு ஒன்றை அமைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் மீது ரஷ்யா தொடர்ந்து நடத்தி வரும் வான் தாக்குதல்களின் ஒரு பகுதியாக இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் வடமேற்கு சிரியாவில் உள்ள அரிஹாவின் முக்கிய நகரத்தில் உள்ள சந்தையில் இந்தத் தாக்குதல் நிகழ்ந்தது. இதில் குறைந்தது 40க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்தனர். (உ–ரி4)

# ஸ் காலநிலை மாநாட்டுக்கு லகம் எங்கும் மக்கள் ஆதரவு

## ப நகரங்களில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள்

து வரும்
நிலை
மாநாட்
தரிவித்து
ம் கவன
ட்டங்கள்
வருகின்

இயற்
ழக்கப்
களைத்
ற்சியாக
திட்டமிடப்
இதனால்
டுக்கு சுற்
ாளர்
வு தெரி
ன்றனர்.
பற்பாடு
மாசடை
ப்படுத்த
ாறு வலி
வர்கள்,
ாற்றங்
கொண்டு
இந்த
உலக நாடுகளில் தலைவர்கள் தீர்வு
ண வேண்டும் என அழுத்தம் கொடுக்

ஸ்திரேலியாவில் நேற்றுமுன்தினம்
ஆர்வலர்கள் பலர் கவனவீர்ப்பு
நடத்தினர். ஆயிரக்கணக்கானோர்
டுத்தனர். “நாம் வாழ வேறு ஒரு பூமி
ன்ற பதாகைகளைத் தாங்கியபடி
ன்றனர். தெற்கு ஆஸ்திரேலியாவில்
ந்த ஆர்ப்பாட்டத்தில் கிட்டத்தட்ட 5000
காண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தி
தன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
கொலம் பியா, பிரிட்டன், ஜப்பான்






ஆகிய உலக நாடுகளின் நகரங்களிலும் இதே போன்ற ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. சமூக ஆர்வலர்கள் மாநாட்டுக்கான தமது ஆதரவைப் பேரணிகள் மூலம் வெளிப்படுத்தினர்.
பிரேசில், அமெரிக்கா ஆகிய நாடுகளின் முக்கிய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. எனினும் இந்த ஆர்ப்பாட்டங்களில் அமைதியின்மை ஏற்பட்டது. பொதுமக்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் பொலிஸார், கண்ணீர் புகைக் குண்டுகளைப் பயன்படுத்தினர்.


> ‘நாம் வாழ வேறு ஒரு பூமி இல்லை” என்ற பதாகைகளைத் தாங்கியபடி ஊர்வலம் சென்றனர்.

காலநிலை மாநாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்தில், பரிஸில் 3 கிலோ மீற்றர் நீளமான மனிதச் சங்கிலி அமைக்கப்பட்டது.
பரிஸில் இடம் பெற்ற தாக்குதலுக்குப் பின்னர், பொது மக்கள் பெருமளவில் கூடி நடத்திய நிகழ்ச்சியாக அது அமைந்தது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி புடின் உட்பட உலகின் 150 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர். (உ–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெரியார்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



சைவத்தையும், தமிழையும் அழியாது வளர்த்த பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது குருபூசைத் தினம் இன்று செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணத்து நல்லூரிலே கந்தப்பிள்ளை-சிவகாமி தம்பதியருக்கு மகனாக1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதியில் அவதரித்த இந்தப் பெருமகனார், இறக்கும்வரை சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களெனப் போற்றி வாழ்ந்தவர். நாவலரின் பணிகள் பன்முகத் தன்மை வாய்ந்தவை. எழுத்தாலும், பேச்சாலும் பயன்கருதாப் பணிகளாலும், தெய்வத் தொண்டுகளாலும் மக்கள் மனங்களில் அழியா இடம்பெற்ற பெருமைக்குரியவராக அவர் விளங்குகின்றார். ஈழத்திலும் தமிழகத்திலும் அவர் ஆற்றிய பணிகள் ஒப்பற்றனவாகும். விளையும்பயிரை முளையிலே தெரியும் என்னும் முதுமொழிக் கிணங்க இளமையிலிருந்தே தமிழறிவும், சமய அறிவும் மிக்கவராக அவர் திகழ்ந்தார்.

நல்லை நகர் நாவலர்
பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே
சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்து புராணங்கள் எங்கே
பிரசங்கமெங்கே
ஆத்தனறிவெங்கே அறை

என்று ஆறுமுகநாவலரைப் போற்றினார் நற்றமிழ் அறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை. சைவச் சிறுவர்கள் சைவச் சூழலில் சைவசமயக் கல்வியைப் பெற வேண்டும் என்னும் இலட்சியம் கொண்ட நாவலர், சைவச் சிறுவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் கிறிஸ்தவ சூழலில் கல்வி பயில்வதை விரும்பவில்லை. இதன் நிமித்தம் கிறிஸ்தவ ஆங்கில பாடசாலை யில் தமக்களிக்கப்பட்ட பதவியை 1848 இல் துறந்துவிட்டுச் சைவப்பாடசாலைகள் நிறுவும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அதே ஆண்டில் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்து தமிழ், சமயம், ஆங்கிலம் ஆகியவற்றை இலவசமாகக் கற்பித்து வந்தார். நாவலரின் அயராத உழைப்பும், பரப்புரையும் பல பாடசாலைகள் தோன்றக் காரணமாக இருந்தன. ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் சைவப் பாடசாலைகளை நிறுவிய பெருமை இவரையேசாரும். 1850 இல் யாழ்ப்பாணத்தில் வித்தியானு பாலனயந்திரசாலை என்னும் பெயரில் அச்சகம் ஒன்றை நிறுவி அதன் மூலம் தேடற்கரிய பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். இவரது தமிழ்த் தொண்டு, அக்காலத்து ஆதினங்களின் தலைவர்களாலும், அறிஞர்களாலும் பெரிதும் மதித்துப் போற்றப் பட்டது. இதன் பேறாகத் தமிழ் நாட்டில் உள்ள திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுகத்துக்கு நாவலர் என்னும் பட்டம் அளித்துப் பாராட்டியது.

> தமிழில் பாடநூல் களைத் தாமே எழுதி வெளியிட்டும் சிறந்த இலக்கிய, இலக்கண நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்ட தோடு நின்றுவிடாது. சமயப் பரப்புரை நடவடிக்கை களிலும் தீவிர கவனம் செலுத்தினார்.

ஆறுமுகம், ஆறுமுக நாவலர் ஆனார். தமிழில் பாடநூல்களைத் தாமே எழுதி வெளியிட்டும் சிறந்த இலக்கிய, இலக்கண நூல்களைப் பதிப்பித்தும்வெளியிட்டதோடு நின்றுவிடாது. சமயப் பரப்புரை நடவடிக்கைகளிலும் தீவிர கவனம் செலுத்தினார். சைவ ஆலயங்கள், சைவப்பாடசாலைகள் தோறும் சைவசமயப் பரப்புரைகளை நிகழ்த்துவதற்கும் வழிகாட்டியவர் ஆறுமுகநாவலரேயாவார். கல்விப்பணி, சமயப்பணி, சமூகப் பணிகளில் மட்டுமன்றித் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் உரமூட்டிய பெருமையும் நாவலரையே சாரும். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றை வசன நடையிலே எழுதினார். தமிழ் உரைநடையின் தந்தை எனவும் வசனநடை கைவந்த வல்லாளர் எனவும் போற்றப் படுகின்றார். நாவலரின் உரைநடை தமிழ் மொழிக்குக் கிடைத்த பெரும் பேறாகும். இவ்வாறு தமிழ் உரை நடைக்கும், தமிழிலக்கிய வளர்ச்சிக்கும், சைவசமய மறுமலர்ச்சிக்கும், சைவக்கல்வி வளர்ச்சிக்கும் சமூகப் பணிகளுக்கும் தம் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்த நாவலர் பெரு மான் 1879 இல் தனது ஐம்பத்தேழாவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது உயரிய தொண்டுகளைப் பாராட்டும் முகமாக இலங்கை அரசு 1971 ஆம் ஆண்டில் அவரைத் தேசிய வீரர்களுள் ஒருவராகப் பிரகடனம் செய்ததோடு அவரது உருவப்படம் பொறித்த முத்திரையையும் வெளியிட்டுக் கௌரவித்தது. சுருங்கக் கூறின் நாவலர் பெருமான் ஒரு தேசிய வீரர். தமிழ்மொழிக்கும், சைவசமயத்துக்கும், சைவக் கல்விக்கும் புத்துயிரளித்தவர். நூலாசிரியராக, நூற் பதிப்பாளராக, ஒப்பற்ற பேச்சாளராக, அஞ்சா நெஞ்சினராக, சமய மறுமலர்ச் சிக்கு வித்திட்டவராகத் திகழ்ந்தார். அன்னைத் தமிழ் உள்ளவரை மக்கள் மனதில் அவர் நாமம் நின்று நிலைக்கும் என்பது திண்ணம்.

திருமதி மலர்விழி கனகசபை

---

மருத்துவர் கௌரிமனோகரி

# HIV

## இன்னும் எங்களுடன் இன்றே பரிசோதிப்போம்!

1981ஆம் ஆண்டு மருத்துவத் துறைக்கே சவாலாக உலகத்துக்கு அறிமுகமாகிய எச்.ஐ.வி. நோய், மக்கள் மத்தியில் பயம், நோய், சாவு என்பவற்றைத் தோற்றுவித்தபோதும் இன்று அதற்கான சிகிச்சை முறை வளர்ச்சி கண்டுள்ளது.

### அறிமுகம்

நோய் அறியப் பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்தபோதும் இலங்கையில் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை இப்போது 0.1 வீதத்துக்கும் குறைவாகவும் உலகில் 0.8 வீதமாகவும் காணப்படுகின்றது. இன்றைய உலகில் தொற்றுள்ளவர்களில் கிட்டத்தட்ட அரைப் பங்குக்கு மேற்பட்டவர்கள் பெண்கள் இந்த நோய் சார்க் நாடுகளுக்கிடையே சமூக, சுகாதார பிரச்சினையாகவும் விளங்குகிறது. கடந்த சில வருடங்களாக எச்.ஐ.வி. தொற்றுக்குரிய மருந்துகள் உலகம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் எய்ட்ஸ் எச்.ஐ.வி நோயால் ஏற்படும் சாவு வீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. எச்.ஐ.வி. ஏனைய நாட்பட்ட நோய்களைப் போன்று (நீரிழிவு, உயர் குருதி அமுக்கம்) ஒரு நாட்பட்ட நோயாகவே கருதப்படுகின்றது. ஆனாலும் இந்த நோய்க்கு தரமான மருந்துகளைப் பெற்றுக்கொள்வதும் தரமான சிகிச்சை முறையை அளிப்பதும் உலகின் பல பாகங்களில் இன்றும் பெரிய சவாலாகவே உள்ளது.

இந்த நோய்க்குரிய வைரஸ், தொற்றுள்ள ஒருவரிடமிருந்து தொற்றில்லாத ஒருவருக்கு பின்வரும் முறைகள் மூலம் பரவுகின்றது. (1). பாதுகாப்பு உறை உபயோகிக்காமல் இடம் பெறுகின்ற குத வழி, யோனி வழி, வாய் வழி மூலமான பாலியல் உறவு, (2). தொற்றுள்ள தாயிலிருந்து சிசுவுக்கு - வயிற்றிலிருக்கும்போது, பிரசவ வேளை யில் மற்றும் தாய்பாலின் மூலமாகப் பரவும் (3). போதை வஸ்துப் பாவனையாளர்கள் ஊசிகளைப் பகிர்ந்து உபயோகிப்பதாலும் பரவுகின்றது.

### இலங்கையில் நிலவரம்

இலங்கையில் எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவு இருந்த போதிலும் ஒவ்வொரு வருடமும் புதிதாக இனங்காணப்படும் எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகின்றது. 2015ஆம் ஆண்டு மூன்றாம் காலாண்டுப் புள்ளி விவரப்படி இலங்கையில் 2241பேர் எச்.ஐ.வி தொற்றுள்ளவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் (இதில் புதிதாக தொற்றுக்கு ஆளானவர்களுக்கு ஏற்கனவே இனங்காணப்பட்டவரும் அடங்குவர்). இலங்கையில் பிரதானமாக பாலியல் தொடர்பு மூலம் தொற்று ஏற்பட்டதை காணக்கூடியதாகவுள்ளது. இதிலும் ஆண், பெண் பாலியல் தொடர்பாலேயே பெரும் பான்மையினர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தன் னினச் சேர்க்கையாளர்களிலேயே எச்.ஐ.வி. தொற்று அதிகரிக்கின்றது.



### வடமாகாணத்தில் நிலவரம்

2014ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 13 ஆக இனங்காணப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களிலும் வடமாகாணத்தைச் சேர்ந்த எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்கள் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். ஆனாலும் எச்.ஐ.வி. குருதிப் பரிசோதனையை தாமாக முன் வந்து மேற்கொள்ளாமையே இந்த எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக் காரணமாகின்றது. தகுந்த வேளையில் எச்.ஐ.வி. குருதிப் பரிசோதனையைச் செய்யாமல் தள்ளிப்போடுவதால் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் எயிட்ஸ் (AIDS) நிலையிலும் இனங்காணப்பட்டுள்ளனர்.

### குருதிப் பரிசோதனை

பல ஆண்டுகளுக்கு முன்போலல்லாது எச்.ஐ.வி. பற்றிய நல்ல அறிவைப் பெற்று எச்.ஐ.வி. தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பல வழிகள் உள்ளன. குருதிப் பரிசோதனையை மேற்கொள்வது மிக இலகுவானது. சகல மாவட்டங்களிலு முள்ள அரச வைத்தியசாலையுடன் இணைந்துள்ள பாலியல் தொற்று சிகிச்சை நிலையங்களில் அதனை இலவசமாகவும் இரகசியமாகவும் செய்துகொள்ளமுடியும். அத்துடன் பெரும்பாலான தனியார் மருத்துவமனைகளிலும் இதனைச் செய்துகொள்ளும் வசதிஉண்டு. தொற்றுள்ளவர்கள் விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட வைத்தியர்களினால் சிகிச்சையளிக்கப்படுகிறார்கள். மேலும், அரசினால் 2004ஆம் ஆண்டிலிருந்து இது இலவசமாக வழங் கப்படுகின்றது. உலகம் முழுவதும் 2020ஆம் ஆண்டில் இந்த நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக பின்வரும் குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 90, 90, 90 அதாவது 90 சதவீதமான எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். தொற்று கண்டு பிடிக்கப்பட்டவர்களில் 90 சதவீதமானவர்களுக்குத் தொற்றுக்குரிய மருந்துகள் வழங்கப்பட வேண்டும். மருந்து கொடுக்கப்பட்டவர்களில் 90 சதவீதமானவர்களின் உடலிலுள்ள வைரசின் எண்ணிக்கை குருதிப் பரிசோதனைகளில் கண்டுபிடிக்கப்படாத அளவுக்கு மிகச்சொற்ப அளவாக குறைந்திருக்க வேண்டும். எனவே நாம் முற்போக்குச் சிந்தனையுடன் பரிசோதனை செய்வோம், அறிவைப் பெருக்குவோம், சிகிச்சை பெறுவோம், நலமாய் வாழ்வோம்.

> பாலியல் தொடர்பு மூலம் தொற்று ஏற்பட்டதை காணக் கூடியதாகவுள்ளது. இதிலும் ஆண், பெண் பாலியல் தொடர்பாலேயே பெரும் பான்மையினர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளாய் அலைந்து வாழ்விழந்து வலி சுமந்த மேனியர்

செ.உமாசுதன்

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் வாழ்க்கை என்பது போராட்டங்கள் பல நிறைந் தவை. தமது உரிமைகளைப் பெறுவது தொடர்பில் அவர்களது பயணம் என்பது கனதியானது. இந்த மண்ணிலே பூர்வீகக் குடிகளாக தம்மைப் பலம் பெறச் செய்வதற்கு நீண்டதொரு பயணத்தை இடை விடாது தொடர்ந்த போதிலும், அதற்கான பயன் இதுவரை கிடைக்க வில்லை. அந்தப் பயணத்திலே மேற்கொள்ளப்பட்டதியாகங்கள் விலைமதிப் பற்றவை.எதிரியின் சூட்சுமத் திட்டங்கள் மக்களை தமது சொந்த நிலங்களில் இருந்து துரத்தியடித்தது.சொத்து சுகங்களை சத்தமின்றிச் சூறையாடியது.கொத்துக் கொத்தாக உயிர்களைக் காவு கொண்டு இரத்தம் குடித்தது. தாய் நிலத்தின் அழகை ஆயுதங்களால் எல்லையிட்டுச் சிதைத்து விட்டது.

### அகதி கிட்டியது அந்தஸ்தே

இந்தச் சிறைவாசம் என்பது தமிழ் மக்களுக்கு எமலோகம் ஆனது.தூரதேசங்களுக்கு புலம் பெயர்வையும் உள்ளூரிலே திசையறியாது அங்கலாய்த்த இடம் பெயர்வையும் வலிந்து திணித்தது. அகதி என்ற அந்தஸ்தை இலவசமாகத் தந்தது. வரலாற்றின் ஆரம்பம் முதலான பயணத்திலே, அகதி அந்தஸ்து இலவச நிவாரணமாக அல்ல வலி நிவாரணியாக வழங்கப் பட்டதால் தற்போது இளைஞர்கள் திட்டமிடப்பட்டு அழிக்கப்படுகின்றனர்.

இந்தச் செயல் முனைப்புக்களைக் கண்டு கொள்வதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும், ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னிறுத்துவதற்கும் உரித்துடையவர்கள் இன்றில்லை.ஆனால்,தமிழர் தலைமைத்துவம் என்று சொல்லுவோர் இதனைத் தடுக்க முன்வருவதாகத் தெரியவில்லை. எமக்கான ஆறுதலையும் அர வணைப்பையும் எப்போதும் தரும் கந்தன் கருணை தான் எமைச் சீர்ப்படுத்த வேண்டும். இந்த நிலையிலே நீண்ட காலப் போர் வாழ்வு, வறுமை,வேலை வாய்ப்பின்மை என்பவற்றால் நாடற்றவர்களாக, வீடற்றவர் களாக நிர்க்கதியான நிலையோடு போர் வாழ்வின் பாரங்களை சுமந்தபடி அகதிகளாக ஆதரவுக் கரம்தேடி இந்தியக் கரையோரத்தில் பல மக்கள் இறங்கினார்கள். ஆனால், அங்கும் முகாம் வாழ்வு தான்.வட பகுதியின் அனைத்துப் பிர தேசங்களில் இருந்து வாழ்வைத் தேடிச் சென்றவர்களுக்கு இந்திய அரசு கொடுத்த, கொடுக்கும் நிவாரணமே சொற்ப அளவு தான்.அது அவர்களின் வாழ்வுக்குப் போதுமானதாக இருக்கவில்லை.

> அரசு எந்த உதவிகளையும் இதுவரையில் செய்யவில்லை. எங்களுடைய வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த கஷ்டப்படுகிறோம். எங்களுக்கான நிவாரணங்களையும் வீட்டுத் திட்டத்தையும் இனியாவது செய்து தரவேண்டும். இது தான் எங்கடை எதிர்பார்ப்பு என அங்கலாய்க்கிறார்.

### 25 வருடங்களின் பின்னர் மீண்டும் தாய் மண்ணுக்கு

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக துன்பங்களை அங்கும் அனுபவித்தார்கள். தற்போது மீண்டும் இந்தியாவிலிருந்து மீண்டு தமது சொந்த இடங்களுக்கு வந்துள்ள போதிலும், அவர்களின் வாழ்வில் ஒளி என்பது இன்னமும் பிறக்கவில்லை. தமதுஅன்றாட வாழ்வைக் கொண்டு நடத்துவதற்கும், வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எமைக் கடந்து சென்ற 30 வருட போராட்ட வரலாற்றில் வட பகுதியில் இருந்து குறிப்பாக தமது சொந்த இடங்களில் இருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு வேறு இடங் களிலே அகதி என்ற நாமத்தோடு ஆதாரமின்றி வைக்கப்பட்ட எம் தமிழ் உறவுகள் ஆயிரம் ஆயிரம் பேர். அதிலும் எமது தொப்புள் கொடிஉறவுகள்என்றுசொல்லிக்கொள்ளக் கூடிய இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள அகதி முகாம்களில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக பல ஆயிரம் ஈழத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தாயகம் நோக்கிய மீள் வருகை என்பது 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் குறைவாக இருந்தது. ஆனால் தற்போது அதிகரித்திருக்கின்றது.யாழ்.மாவட்டத்திலே உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளையும் சார்ந்து 2009 இற்கு முன்பும் அதன் பின்னர் கடந்து வந்த 6 ஆண்டுகளையும் உள்ளடக்கியதாக மொத்தமாக 952 குடும்பங்களைச் சேர்ந்த 2,562 பேர் தாயகம் திரும்பியுள்ளனர். இது தவிர கிளி நொச்சி மாவட்டத்திலே 253 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட் டத்தைச் சேர்ந்த 157 குடும்பங்களும் தாயகம் திரும்பியுள்ளன. குறிப்பாக இந்த வருடத் தின் ஆரம்பத்திலிருந்து இதுவரையான காலப் பகுதியில் யாழ்.மாவட்டத்திலே மொத்தமாக 75 குடும்பங்களைச் சேர்ந்த 158 பேர் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியுள்ளனர்.

25 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவத்தின் அசுரக்க ரங்களுக் குள் அகப் பட்டுக்கிடந்த வலி வடக்கின் பல பிரதேசங்களில் ஒன்று தான் கீரிமலை. தற்போது மீள் குடியமர்வு என்ற திறப்பு விழாவோடு தான் சுமந்த பிள்ளைகளின் ஒரு பகுதியை அரவணைத்த அன்னை பூமியது.

### மீளக்குடியமர்ந்தும் பிரச்சினைகளோ பற்பல

அங்கே இயல்புவாழ்க்கைஎன்பது இன்னமும் இயக்கமற்றுத்தான் இருக்கிறது.ஆங்காங்கே சன நடமாட்டம் ஆரம்பரிக்கின்றது.அது வேறு யாருமல்ல மீண்டும் திரும்பிய அந்த மண்ணின் மைந் தர்கள்தான், [illegible] இடங்கள் புதர் மண்டிப்போய் கிடக்கின்றன. அவற்றின் இடையே நிழல் தந்த உழைப்பின் ஊதியத்தால் உயர்ந்து நின்ற வீடுகள், இல்லை. இந்த மைந்தர்களின் கோயில்கள் சோபை யிழந்து சேடமிழுத்துக் கிடக்கின்றன. இந்த நிலையில் இந்த மண்ணின் மைந்தர்களாய் கூடிக் குலாவி திரிந்த பிள்ளைகள் தங்கள் அகம் தொலைத்து (அகதி)முகாம் கண்டு நீண்ட தூரப் பயணங்களின் வலி சுமந்த பின்னர் தாயகம் திரும்பியுள்ளதைக் கண்டு மகிழ்ந்தாலும் அவர்களை அன்போடு வரவேற்க மனமின்றி சோகத்தோடு தடதடக்கிறது அந்த மண்.



### நம்பிக்கையாவும் தவிடுபொடி

2015 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 13 ஆம் திகதி பெரும் எதிர்பார்ப்போடு தங்கள் சொந்தத் தாயின் அரவணைப்பைப் பெற வந்தவர்கள்தான் கிருஷ்ணலிங்கம் காந்திமதி குடும்பத்தினர். இரண்டு ஆண் குழந்தைகளோடும், கணவனின் ஆதரவோடும், பெருத்த எதிர்பார்ப்போடும் வருகை தந்த இவர்கள் தங்களது இன்றைய நிலை சொல்லிப் புலம்புகின்றனர்."இந்தியாவில் இருந்து வந்தால் முன்னுரிமை எண்டு சொன்னாங்கள். ஆனால் எமக்கு எதுவும் கிடைக்கவில்லை. 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து வன்னிக்குப் போனனாங்கள். பிறகு படகிலை இந்தியாவுக்குச் சென்றோம். அங்கை மதுரை கூடல் நகர் முகாமிலை இவ்வளவு காலமாக இருந்தனாங்கள். பிள்ளைகள் இனியும் கஷ்டப்படக்கூடாது. சொந்த மண்ணிலையாவது சுதந்திரமாய் இருக்கட்டுமெண்டு தான் வந்தோம்.

### அரசின் உதவி எதுவுமே கிட்டவில்லை

போரினால் வீடுகள் எல்லாம் அழிஞ்சு போச்சுது. இங்கை இப்ப இருக்கிறதுக்கு வீடு இல்லை.வந்து ஆறு மாதமாச்சுது. எந்த ஒரு உதவியும் அரசு செய்யேல்லை.காணி இல்லாதவங்களுக்கு வீட்டுத்திட்டம் கொடுக்கிறாங்கள்.ஆனால் எங்களுக்கு...? பிறத்தியார் வீட்டிலை காலத்தை ஓட்டுறம். எந்த ஒரு உதவியும் இல்லாமல் இருக்கிறதைவிட திருப்பியும் அங்கை போய் இருக்கலாம் போல கிடக்குது.அங்கை நெருக்கடி இருந்தாலும் சந்தோசமாய் இருந்தோம். நாங்கள் அங்கை இருந்த வரைக்கும் ஆரம்பத்திலை 15 நாள் களுக்கு ஒருக்கா இந்தியக் காசிலை 3,300 தந்தவங்கள். இப்ப ஒரு மாதத்துக்கு ஒருக்கா கொடுக்கிறாங்கள்.இதுதவிர 5 லீற்றர் மண்ணெண்ணெய்,சீனி 2கிலோ அரிசி மொத்தமாக 48 கிலோ, அதிலை 20 கிலோ இலவசமாக அரசு தந்தது.தீபாவளி சிறப்பு பண்டிகையெண்டு 2,000 ரூபா கூப்பனும் தந்தாங்கள்.இங்கை வந்தாப் பிறகு சரியாகக் கஷ்டப்படுகிறோம். இந்தியாவில் இருந்து இலவசமாக யு.என்.எச்.ஆர் இங்கை கொண்டு வந்து விட்டவை.யாழ்ப்பாணம் வாறதுக்கு பணயச் செலவாக 2,000 ரூபா செக்கும், பாங்கிலை 50 ஆயி ரம் காசும் போட்டுவிட்டினம். அதோடை சரி.அரசு எந்த உதவிகளையும் இதுவரை யில் செய்யவில்லை. எங்களுடைய வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த கஷ்டப்படுகிறோம்.எங்களுக்கான நிவாரணங் களையும் வீட்டுத்திட்டத்தையும் இனியாவது செய்து தரவேண்டும்.இது தான் எங்கடை எதிர்பார்ப்பு என அங்கலாய்க்கிறார். எங்களைத் திருப்பி அனுப்புவதாக இருந்தால் நாங்கள் போகத்தயார் எனப் பெருமூச்சு விடுகிறார் அவர். இந்த நிலையிலே தொடர்ந் தும் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பு வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவர்கள் தொடர்பில் அரசின் அசண்டையீனமும் உதவிகளைத் தானாக முன்வந்து வழங்காத அசமந்தப்போக்கும் பாராமுக மும் இவர்களைக் கதிகலங்க வைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூபாலனின் நேர்மை!

மரியாதை இராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரர் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர். பணத்தாசை பிடித்தவர். ஒருமுறை சோமன் தனது தோட்டத்தில் விளைந்த தேங்காய்களைச் சந்தையில் விற்று விட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாவுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்து விட்டார். வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப்பையைத் தேடிப் பார்த்துக் கிடைக்காததால் புலம்பித் தள்ளினார். அப்போது அவரது மனைவி "உங்கள் பணப்பையைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்கள், கண்டிப்பாக எவராவது கொண்டு வந்து கொடுப்பார்கள்" என்றார். ஆகா! இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டுச் சொல்லி விட்டார். ஊர் மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து விட்டு சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். எப் படித் தேடிப் பார்த்தும் எவருக்கும் பணப்பை கிடைக் கவில்லை. இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரத் துக்குப் பின்னர் அருகில் உள்ள ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப் போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இருந்தாலும் கௌரவமாக வாழப் பிரியப்படுபவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர். அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயத்தைச் சரியாகச் செய்யமுடியவில்லை, வேறு தொழில் செய்யவோ அவரிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்குச் சென்று ஏதாவது வேலை செய்து, சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்தார். போகும் வழியில் காட்டுப் பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்குப் போய் வேண்டிக் கொண்டார். அவ்வாறு காட்டு வழியில் போகும்போது அங்கே ஒரு புறா அடிப்பட்டுக் கீழே கிடந்தது. அதைப் பார்த்து இரக்கப்பட்ட பூபாலன் அந்தப் புறாவைத் தூக்கி அருகில் இருந்த குளத்துக்குக் கொண்டு சென்று தண்ணீரை எடுத்து அந்த புறாவின் வாயில் ஊற்றினார், பின்னர் அந்தப் புறாவை அருகில் இருந்த மரக்கிளையில் வைத்துவிட்டு வந்தார். அவர் அப்படி வரும்போது பாதையின் ஓரத்தில் காலில் ஏதோ மாட்டியதைக் கண்டார், அது ஒரு பை. அதில் நிறையப் பணம் இருந்தது. அதை எடுத் தவுடன் பூபாலனுக்கு யாரோ பாவம், தனது பணப்பையை விட்டு விட்டுப் போய்விட்டார், அப் படித் தொலைத்தவர் மனம் எத்தனை வேதனைப் படுமோ, எனவே விரைவில் அவரைக் கண்டு பிடித்துக் கொடுத்து விட வேண்டும் என்று ஊருக் குள் விரைந்தார். ஊருக்குள் சென்று அங்கே இருந்த கடையில் விசாரித்த போது கடைக்காரர் சோமனைப் பற்றிச் சொல்லி, அவர்தான் தொலைத்தவர், நீங்கள் இதைக் கொடுத்தால், கண்டிப்பாக சன்மானம் கொடுப்பார் என்றார். உடனே பூபாலனும் சோமனின் வீட்டைத் தேடிப் பிடித்துச் சென்று பணப்பை கிடைத்த விவரத்தைச் சொன்னார், சோமனுக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. உடனே அந்தப் பணப்பையை வாங்கிக் கொண்டார், அதே நேரம் அவரது கெட்ட எண்ணமும் வெளிப் படத் தொடங்கியது. பணப்பை கிடைத்து விட்டது, பணமும் சரியாக இருக்கிறது. இப்போது ஏன் இவனுக்குச் சன்மானம் கொடுக்க வேண்டும், சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார் சோமன். கெட்ட மனம் கொண்ட சோமன் பூபாலனைப் பார்த்து "நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய், நான் என் னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன், அதைக் காணவில்லை, மரியாதையாகக் கொடுத்து விடு, உன்னைச் சும்மா விடமாட்டேன்" என்று கத்தினார். பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரு வேளை இவர் சொன்னது போல் வைர மோதிரம் இருந்து தொலைந்து போயிருக்குமோ, ஆனால் நான் தான் எடுக்கவில்லையே, இவரிடம் சன்மானம் வாங்குவதை விடப் பிரச்சினையில் இருந்து தப்பிக்கலாம் என்று யோசித்தார்.

சோமனோ விடாமல் சத்தமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தார், பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்குச் சொன்ன கடைக்காரர், கஞ்சப்பயல் சோமன் அப்படி என்னதான் பரிசு கொடுக்கப் போகிறான் என்று பார்ப்போம் என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல் நிற்பதைக் கண்ட ஊரார் சோமனைச் சும்மா விடக் கூடாது, இந்த பிரச்சினையை மரியாதை இராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்புக் கேட்க வேண்டும் என்று சொன்னார்கள். சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர் மக்கள் அனைவரும் மரியாதை இராமனுக்கு முன்னால் போய் நின்றார்கள். சோமன், தான் பணப்பையையும், அதில் இருந்த வைர மோதிரத்தை தொலைத்த கதை யையும், பூபாலன் தான் பணப்பையைக் கண்டுபிடித்த கதை யையும் சொன்னார்கள். ஏற்கனவே சோமன், அறிவித்த தண்டோரா பற்றி மரியாதை இராம னுக்குத் தெரியும், அப்போது தண்டோரா போடும் போது வைரமோதிரம் பற்றி ஒன்றும் சொல்லாததும் தெரிந்தது தான். ஆக மொத்தம் சோமன் ஏமாற்று கிறான் என்பதைப் புரிந்து கொண்ட மரியாதை இராமன், சோமனுக்கு, சரியான தண்டனை கொடுக்க நினைத்து இவ்வாறாகத் தீர்ப்புக் கூறினார் "சோமன் தொலைத்த பையில் பண மும், வைர மோதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார். இப்போது பூபாலன் கொண்டு வந்த பையில் பணம் மட்டுமே உள்ளது. ஆகவே இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை. அப்படித் தொலைத்தவர் இது வரை எவரும் முறைப்பாடு கொடுக்கவில்லை, அவ்வாறு எவரும் முறைப்பாடு கொடுக்காத வரை எமது ஊர் வழக்கைப்படி கிடைத்த பணத்தில் பத்தில் ஒரு பங்கு அம்மன் கோயில் செலவுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக் கொள்ளலாம், ஆகவே பூபாலன் அந்தப் பணத் தைத் தனது சொந்த உபயோகத்துக் கென வைத்துக் கொள்ளலாம், சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையைக் கண்டு பிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார், சபை கலையலாம்" என்றார்.

மரியாதை இராமன் இப்படித் தீர்ப்புச் சொன்னதும் சோமனுக்கு இதயமே நின்று போனது போல் ஆகி விட்டது. பூபாலன் கிடைத்த பணத்தில் 10 சதவீதம் அம்மன் கோயிலுக்குக் கொடுத்து விட்டு, மீதியைத் தனது சொந்த ஊருக்குக் கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1640 - 60 வருட ஸ்பானிஷ் ஆட்சியின் பின்னர் போர்த்துக்கல் மீண்டும் சுதந்திரம் பெற்றது.

1750 - கைப்பணிப் பயிற்சிகள் வழங்குவதற்காக முதலாவது பாடசாலை அமெரிக்கா மேரிலாண்டில் தொடங்கப்பட்டது.

1843 - முதலாவது அங்கீகரிக்கப்பட்ட பரஸ்பர ஆயுள் காப்புறுதி நிறுவனம் தொடங்கப்பட்டது.

1878 - முதன் முதலில் வெள்ளை மாளிகையில் தொலைபேசி இணைப்பு மேற்கொள்ளப்பட்டது.

1918 - ஐஸ்லாந்துக்கு டனிஷ் நாடாளுமன்றம், சுதந்திரம் வழங்கியது.

1919 - பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முதற் பெண் பிரதிநிதியாக லேடி நான்ஸி அஸ்ரர் பதவிப் பிரமாணம்.

1941 - ஜப்பான் சக்கரவர்த்தி ஹிரோஹிற்றோ போர்ப் பிரகடனத்தில் ஒப்பமிட்டார்.

1947 - டொன் பிறட்மன் இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 185 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டார்.

1953 - முதலாவது 'பிளேபோய்' சஞ்சிகை - நடுப்பக்கத்தில் மறிலின் மன்றோவின் படத்துடன் ஹஹ் கென்பரால் வெளியீடு.

1958 - சிக்காக்கோவில், 'அவ லேடி ஒப் ஏன்ஜெல்' பாடசாலையில் தீ விபத்து 92 மாணவர்களும் 2 அருட்சகோதரிகளும் சாவு.

1973 - பப்புவா நியூகினியாவுக்கு அவுஸ்திரேலியா சுயாட்சி வழங்கியது.

1991 - எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம், உக்ரைன் மக்கள் சுதந்திரத்துக்கு வாக்களிப்பு.

1993 - வடக்கு - கிழக்குக்கு புதிய ஆளுநராக லயனல் பெர்னாண்டோ பதவியேற்பு.

1994 - மேல் மாகாண ஆளுநர் டி.எம்.சுவாமிநாதன் ராஜினமா.

1999 - மடுத் தேவலாயத் தாக்குதலைக் கண்டித்து வடக்கு - கிழக்கில் கறுப்புப் பட்டிப் போராட்டம்.

2012 - பலஸ்தீனம் தனி நாடாக ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிப்பு, 193 நாடுகளில் 138 நாடுகள் ஆதரித்து வாக்களிப்பு.

2014 - கொலைகார ஆட்சிக்கு முடிவு கட்டுவோம் என 9 வருடங்களின் பின் நாடு திரும்பிய சந்திரிகா அறை கூவல்.

## உங்களுக்கு தெரியுமா?

- முதன் முதலில் கேள்விக்குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தின் மொழி தான்.
- கைரேகையை வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தனது வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
- எறும்புகள் தூங்குவதில்லை.
- கங்காருக்குட்டி பிறக்கும்போது ஒரு அங்குல நீளம் மட்டுமே இருக்கும்.
- உதட்டுச் சாயத்தில்(லிப்ஸ்டிக்) மீனின் செதில்கள் பயன் படுத்தப்படுகின்றன.
- இறால், மீனின் இதயம் அவற்றின் தலையில் இருக்கிறது.
- ஒரு பசு தனது வாழ்நாளில் 2 லட்சம் குவளைகள் பால் வழங்குகிறது.
- ஈ என்ற ஒலியுடன் முடியும் சொற்களுக்குப் பூனைகள் உடனே செவிமடுக்கும்.
- பூனைகளால் நூறுவிதமாக ஒலியெழுப்ப முடியும்.
- நாய்களால் பத்துவிதமாக ஒலியெழுப்ப முடியும்.
- கரப்பான் பூச்சியால் ஒன்பது நாள்கள் தலை இல்லாமல் வாழ முடியும். அதன் பின்னரே பசியால் அது செத்துப் போகும்.
- ஒரு மரம்கொத்தியால் ஒரு நொடியில் இருபது முறை மரத்தைக் கொத்த முடியும்.
- பச்சோந்தியின் நாக்கு அதன் உடம்பைப் போல் இரண்டு மடங்கு நீளம் கொண்டது.
- பாலூட்டிகளின் குருதி சிவப்பு,பூச்சிகளின் இரத்தம் மஞ்சள்,நீர்வாழ் உயிரினங்களின் குருதி நீல நிறமுடையது.
- எறும்புகள் 16 வருடம் வரை வாழக்கூடியவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் பற்றிய அளவுகோல்

பெண் என்பவள் யார்? அவளின் குணாதிசயங்கள் யாவை? அவளின் எதிர்பார்ப்புக்கள் எவை? அவளிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது? - ஏன்? இதெற்கெல்லாம் பதில் ஓர் ஆணால் கூறமுடியுமா? அல்லது ஆணை அளவுகோலாகக்கொண்டு பதில் தேட முடியுமா? இரண்டும் இல்லை, எம்மை நம்மால் மட்டுமே வரையறுக்க முடியும் இதற்கென ஓர் அளவுகோல் கொண்டு தேட முடியாது,

ஒரு மாமரத்தோடு வேப்பமரத்தையும் மல்லிகையுடன் மருக்கொழுந்தையும் ஒப்பிடமுடியுமா? இரண்டும் இரு வேறான இயல்புகளோடும், இரு வேறான பயன்பாடுகளோடும் இருக்கக்கூடியவை. ஆனால் இதில் உயர்வென்பதும்தாழ்வென்பதும்உண்டோ? மாமரம் உபயோகப்படும் இடத்தில் வேம்புக்கு தேவை இல்லை. அது போல் ஆண் சில இயல்புகளோடும், சில பயன்பாடுகளோடும், பெண் சில குணாதிசயங்களோடும் சில பயன்பாடுகளோடும் படைக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவரை ஒருவர் ஒப்பிட்டுக்கொண்டு மற்றவர் உலகத்துக்குள் தன்னைத் திணித்துக் கொள்வது தேவையற்ற அவஸ்தை. எதிரெதிர் உலகத்தைப் பற்றிய புரிதல்கள் மட்டுமே தேவை.






உடுப்பு மாற்றங்கள் கூட தனது சுய சௌகரியங்களுக்காக மட்டுமே இருந்தவரை அதற்கு மிகப்பெரிய மரியாதை இருந்தது, அந்தக்காரணங்களாலேயே, தாவணியும் புடைவையும், பாவாடை சட்டையாகவும், சுடி தாராகவும் மாறிய போது மிக எளிதாக அதிகம் முணுமுணுப்புக்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது, ஆனால் அதுவே குட்டைச் சட்டையாகவும், கட்டைப் பாவடையாகவும், மொட்டைக் கையாகவும் மாறும் பொழுது தலைப்புச் செய்திகளாகின்றது. எமது உடுப்புச் சுதந்திரம் என்பதை ஆண்கள் உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நாம் செய்த தவறான புரிதல்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

அலுவலகப்பணிக்கு செல்வதோ, வியாபாரம் செய்வதோ, ஊர்திகள் ஓட்டுவதோ, காலத்தோடு ஒட்ட வழுவி எம்மை மேம்படுத்தச்செய்யும் உத்திகள். அதாவது அதைக் கற்றுக்கொள்வதன் நீடிப்பு என்றோ கூடுதல் பொறுப்பு என்றோ கொள்ளலாம். அதை விடுத்து எமது அடிப்படைப் பொறுப்புக்களை நாம் மறந்து தட்டிக்கழிக்க முற்பட்டால் எம்மை நாமே தோற்கடித்துக் கொள்பவர்களாகிறோம்.

எவரிடமும் நாம் எமக்கான உரிமையை கேட்டுப் பெறவேண்டியதில்லை, வீதியில் நாம் ஊர்திகளோட்டும் போது எமக்கென நாமென்ன தனி வீதி ஒதுக்கீடு கேட்கிறோமா? அல்லது வாகன நெரிசலை நிறுத்தச்சொல்கிறோமா? இரண்டும் இல்லை. ஊர்திகளோட்டும் திறமையும் தன்னம்பிக்கையும் உள்ளவர்கள் தனியாகச்செல்கிறோம். இதில் சக பயணிகளோடு சண்டைகள் எதற்கு? அவரவர் இலக்கு அவரவர் பாதை, குறுக்கே செல்லும் சக பயணியை எமக்கு காயங்கள் இல்லாத வண்ணம் கடந்து செல்வதும் எமது திறமைகளுள் ஒன்று.

மன வளர்ச்சி என்பதும் முதிர்ச்சி என்பதும் பெண்ணிடம் இருந்து அதிகம் எதிர்பார்க்கப்படும் ஒன்று. ஏனெனில் அவளைச்சார்ந்தே ஒரு குடும்பமும், சுற்றமும், ஊரும்பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளன. மற்றவர்களைப் புரிந்து கொண்டு ஆதுரப்படுத்தும் ஒரு மேதமை பெண்களிடம் இயல்பிலேயே குடிகொண்டுள்ளதால் ஆண்களிடம் இந்தச் சமூகம் அதிகம் எதிர்பார்ப்பதில்லை. அவர்களுக்குள் மறைந்திருக்கும் அன்பையும், புரிதல்களையும் வெளிக்கொணர்வது கூட எமது திறமைகளில் ஒன்றானதாகும். இந்தப் பணியை நாம் செவ்வனே செய்துவிட்டால் ஒத்திசைந்த வாழ்வியல் இசையில் நாமே ஒரு மிகப் பெரும் படைப்பாளிகள்.

> "மன வளர்ச்சி என்பதும் முதிர்ச்சி என்பதும் பெண்ணிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படும் ஒன்று ஏனெனில் அவளைச் சார்ந்தே ஒரு குடும்பமும், சுற்றமும், ஊரும் பின்னி பிணைக்கப் பட்டுள்ளது."

சங்க காலங்கள் தொட்டுப் பெண்களின் மேதமை எப்போதும் எல்லோராலும் அறியப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இடைப்பட்ட காலங்களில் நேர்ந்த சமூகச் சீர்கேடுகளினால், பெண்களும் அவர்களின் மேதமையும், திறமையும் இருட்டடிப்புச் செய்யப்பட்டாலும் தற்போதைய காலங்களில் அதன் விழுக்காடுகள் முன்னெப்போதையும் விடக் குறைவே. நாம் மிக வேகமாக எமக்குண்டான இயல்புகளைப் புரிந்து கொண்டு அந்த இலக்கை நோக்கிச் சென்று கொண்டு தான் இருக்கிறோம். எமது பாதைகள் சில சமயம் முட்களாலும், பலசமயம் பூக்களாலும் நிரப்பப்பட்டுள்ளன என்பதுதான் உண்மை, முட்களைக் கடந்து செல்லும் வேளையில் அதைப் பற்றிய எமது வீண் கூச்சல்கள் எமது கவனங்களை திசை திருப்பத்தான் பயன்படுமே தவிர இலக்குகளை அடைவதில் அல்ல.

படித்த, படிக்காத, சுய சிந்தனையுள்ள பெண்களின் கருத்துக்கள் பெரும்பான்மையான சமயங்களில் வெற்றிபெறுவது, அதை நாம் எவ்வாறு மற்றவர்களை ஏற்றுக்கொள்ளச்செய்கிறோம் என்பதனால் தானே தவிர கருத்துகளின் மேதமையினால் அல்ல.

இந்தப் பிரபஞ்சமும் அதன் படைப்புக்களும் எல்லோருக்கும் ஒன்றுதான், ஆண்களின் உலகிலும் முட்களும் இருக்கலாம், பூக்களும் இருக்கலாம். அதை அவரவர் தேவைக்குத் தக்கபடி கைகொள்ளுவர். நாம் எமது இலக்குகளைத் தவறான ஒப்பிடுதல்களோடு தவறவிடவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறக்கப்படாத வழிகள்

எமது அரசியல் வரலாற்றுத் தடங்கள் யாவும் போராட்டக் களங்களாகவே இருந்திருக்கின்றன, இருக்கின்றன. ஒரு காலத்தில் அகிம்சை வழி நின்று இது மேற்கொள்ளப்பட்டு மறு கட்டத்தில் தனிஈழம் எனும் இலக்கை இறுதி செய்தது. அதற்கான அர்ப்பணிப்பை அபரிமிதமாக நமது இனம் வழங்கியிருக்கின்றது. அதிகமான உயிர், உடல், வாழ்க்கை இழப்புகள் அதற்காகவே அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன. இது பெருமைக்குரிய ஒன்று என்பதிலும் ஐயமில்லை.

போர் மௌனமாகிய பின்னரான கடந்த ஆறு ஆண்டுகளில் அரசியல், சமூக அபிவிருத்தி ஆகியவற்றில் சொல்லிக்கொள்ளும்படியான வெற்றிகள் எவையும் சாத்தியமாகவில்லை. தீர்க்கமான நகர்வுகள் என்று எவையும் நிகழ்த்தப்படவில்லை. அதற்கான வழிகள் திறக்கப்படவும் இல்லை.

இந்த வழிமுறைகளைத் திறப்பதற்கான ஆர்ப்பரிப்புக்களை வெளிப்படுத்தும் தரப்புக்கள் என்று தம்மை முன்னிறுத்துபவர்கள்கூட அதற்கான சாத்தியமான வழிகளையோ, அணுகுமுறையையோ, மக்கள் நம்பிக்கை கொள்ளும்படியான செயற்பாட்டினையோ வெளிப்படுத்தியிருக்கவில்லை.

இந்த நிலையில், ஓர் இனம், தன்னுடைய உண்மையான நிலையை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். பழம் பெருமைகளைப் பேசுதல் என்பது பல நேரங்களில் மனக்கிலேசங்களை மாத்திரமே கொடுக்கும். மாறாகப் பயன்களை வழங்காது என்பதை உணர்ந்து கொண்டு எமது அடுத்த கட்ட நகர்வுக்கு நாம் தடம் பதித்தாக வேண்டும். இந்தத் தடம் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதை வழிபடுத்தும் தகைமை எமது அரசியல் தரப்பினர் கைகளிலேயே இருக்கிறது.

இந்த நிலையில், இந்தத் தகைமைக்குரியவர்களாக எமது தலைவர்கள் இருக்கிறார்களா என்ற கேள்வி தற்சமயம் தலைகாட்ட முற்பட்டுள்ளது. அதற்கான அளவுகோலை அவர்களே தமது செயற்பாடுகள் மூலம் உணர்த்தி வருகின்றனர்.

தனி மனிதனது தேவைகள் எதிர்பார்ப்புக்கள் என்பவை அவர்களின் தளங்களுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. தனி மனிதர்கள் சமூகமாக ஒருங்கிணையும்போது அந்தத் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் சில விட்டுக்கொடுப்புக்களோடும், அணுகுமுறை சார்ந்தும் பிரதான தேவைகள், எதிர்பார்ப்புகளை இலக்குகளாக மாற்றுகின்றன.

இலக்குகள் என்பவை, சில நேரங்களின் தனி மனிதர்களான சிலருக்கு அவசியமற்றவையாகக் கூட இருக்கலாம். சமூகமாக ஒருங்கிணையும்போது அவற்றை இலக்காக ஏற்றாக வேண்டும். அது தான் சமூக அர்சியலின் சூட்சுமம். இத்தகைய சூழலில் தமிழ் அரசியல் தரப்பினர் எத்தகைய வழிமுறைகளைக் கைக்கொண்டு இனத்தை வழி நடத்தப் போகின்றார்கள் என்பது முக்கியமானது.

நல்லாட்சி அரசுக்கு ஆதரவு அளித்து அதன் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்ட முடியும் என நம்பிக்கை கொண்ட தமிழ்த் தலைமைகள் இன்று அரசுக்கு ஆதரவளிப்பது குறித்து மாற்றுக் கருத்துகளை முன்வைத்து வருகின்றன. 2016 ஆம் ஆண்டுக்குள் இந்த அரசின் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு விடலாம் என நம்பியவர்கள் கண்கெட்டு நிற்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆளும்வர்க்கம் சாமர்த்தியமாக தனது திட்டமிடலுக்கு ஏற்ப அணுகுமுறைகளைக் கைக்கொண்டு தாம் நினைத்தவற்றைச் சாதித்து வருகின்றது. அதற்காகத் தமிழ்த் தரப்பையும் அது லாவகமாகப் பயன்படுத்தி வருகிறது.

தமிழர்கள் தமது அபிலாசைகளை எட்டுவதற்கான களங்களும், அதற்கான அரசியல் செயற்பாடுகளும் தேங்கியிருக்கின்றனவா என்கிற கேள்வி கடந்த ஆறு ஆண்டுகளாக எம்மிடையே எழுப்பப்பட்டு வருகின்றது. அந்தக் கேள்விக்கான பதில் வழங்கப்பட்டிருக்கின்றதா என்றால் பெரும்பாலும் இல்லை என்ற பதிலே கிடைக்கிறது.

அடுத்தது என்ன? இது தான் இப்போது தமிழ் மக் கள் மத்தியில் எழுந்திருக்கும் கேள்வியாகும். எதற்கும் நாம் அரசின் அனுமதி பெற்றுத்தான் செயற்படவேண்டும்என்றநிலை இன்னமும் மாறிவிடவில்லை. இனிமேலும் மாறும் என்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகதான் இருக்கும்.




இதனைக் கடந்த வாரம் நமக்கு உணர்த்திவைத்திருக்கிறது. மண்ணுக்காக தமது இன்னுயிரை நீத்தவர்களை நினைவுகூருவதற்கும் நாம் அரசிடம் அனுமதி கோரி நிற்கவேண்டிய நிலை இருக்கிறது என்பதே அதுவாகும்.

இன்றைய நிலையில் அரசின்மீது அழுத்தங்களைக் கொடுப்பதும், அழுத்திப் பிடிப்பதும், அவர்களின் தவறுகளைத் தட்டிக் கேட்டு வழிப்படுத்துவதும்தான் அவசியமாக உள்ளது.

ஆனால், அதனை விட்டு, மாற்றுத் தலைமை, மாற்று அணி என்று கிளம்பியுள்ள சக்திகள், தமிழரின் பலத்தைச் சிதறடிக்கவே முனைகின்றன. அவ்வாறு தமிழரின் பலம் சிதறும் நிலை ஏற்பட்டால், சர்வதேசம் எவருடைய கருத்தைச் செவிமடுக்கும்? யாருடன் பேச்சு நடத்தும்?

இந்தநிலையில், தமிழ் மக்களின் பிரதிநிதிகளைப் பங்கு போட்டுப் பிரித்துக்கொள்வதால், எதிர்த்தரப்புக்கு வாய்ப்பாகி விடும். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல, ஒருவரை ஒருவர் மாட்டிவிட்டுத் தான் தப்பிக்கொள்ளவே ஆளும் தரப்பு முயற்சிக்கும். இதனை உணர்ந்து அனைவரும் செயற்படுவதே புத்திசாலித்தனம்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 1 | |
| | | 4 | 7 | | 6 | | | |
| | | 2 | | 4 | | 9 | | 5 |
| | | | | 7 | | | 9 | |
| | 9 | 6 | | | | | | |
| | 8 | | | | 4 | 3 | | |
| 6 | | | | | | | 8 | 1 |
| 1 | | | | 2 | | | | |
| | | | | 5 | | | 3 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 9 | 5 | 7 | 2 | 6 | 1 |
| 1 | 9 | 7 | 8 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 2 | 5 | 6 | 1 | 3 | 4 | 9 | 7 | 8 |
| 9 | 1 | 2 | 6 | 8 | 3 | 4 | 5 | 7 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 6 | 8 | 3 |
| 6 | 8 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 3 | 6 |
| 3 | 4 | 1 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 |
| 7 | 6 | 8 | 3 | 9 | 2 | 5 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 'தெறி' தலைப்புக்கு தொடங்கியது பிரச்சினை




இளைய தளபதி விஜய் நடிப்பில் 'தெறி' படத்தின் முதல் பார்வை (பர்ஸ்ட் லுக்) நேற்று வெளி வந்தது. இரசிகர்கள் அனைவரும் இதை இந்திய அளவில் கொண்டாடினர். ஆனால், அந்தத் தலைப்பை ஏற்கனவே சதீஸ் என்பவர் பதிவு செய்து வைத்துள்ளார். தன்னிடம் ஏதும் சொல்லாமல் அவர்களாகவே இந்தத் தலைப்பை வைத்து விட்டனர். என்னிடம் கேட்டிருந்தால் நானே கொடுத்திருப்பேன் என மிகவும் மனம் நொந்து தனது சமூக வலைத்தளத்தில் கூறியுள்ளார். இதன் மூலம் படக்குழுவுக்குத் தற்போதே ஒரு பஞ்சாயத்துக்கு தயார் ஆகிவிட்டது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பொறுப்பை உணர்ந்து செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் படிப்படியாக இலாபம் கூடும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். பணியாளர்கள் எதிர் பார்த்த சலுகை கிடைக்கும்.

**இடபம்:** அக்கம் பக்கத்தவருடன் நட்புப் பாராட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு சிறப்பாக நடந்தேறும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**மிதுனம்:** சொந்த விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு இருக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

**கடகம்:** சமூகத்தின் மீதான அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் தேவைப்படும். இலாபம் கூடும். வெளியூரிலிருந்து எதிர் பார்த்த சுப செய்தி வந்து சேரும். மாணவர்கள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**சிங்கம்:** எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடை ஏற்பட்டு விலகும். இலாபம் சுமார். மனைவியின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும். சீரான ஓய்வு உடல்நலம் காக்க உதவும்.

**கன்னி:** புதிய முயற்சி எளிதில் வெற்றி பெறும். கடந்த கால இனிய நிகழ்வை நண்பரிடம் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்காகும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

**துலாம்:** சாதுரியமாகப் பேசி எதையும் சாதிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பொறுப்பான பதவி கிடைக்கும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்

**விருச்சிகம்:** குடும்பத்தில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பர். வாகனப் பயணத்தில் மித வேகம் நல்லது.

**தனுசு:** மற்றவரிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது. மனைவியின் செயற்பாடு நிம்மதி தரும்.

**மகரம்:** புதிய முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் உண்டு. பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கும்பம்:** உதவும் மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் கூடும். வெகுநாள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினர் மிகுந்த பாசம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் கூடும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

# பேஸ் புக்கில் பிடித்தவை...



நீ என்னிடம் பேசியதை விட எனக்காகப் பேசியதில் தான் உணர்ந்தேன் எங்களது நட்பை

ரயில்வே பிளாட்பார கட்டணம், வரும் ஏப்ரல் மாதம் முதல் ஐந்து ரூபாயில் இருந்து 10 ரூபாயாக உயர்த்தப்படுகிறது



ரயில் டிக்கெட் வெறும் 5 ரூபா வழி அனுப்பி விட வந்தவனுக்கு 10 ரூபாயாடா? நல்லா இருக்குதையா உங்க பார்ட்னர்ஷிப். இப்படியே மெயின்டைன் பண்ணுங்க!!!

நாங்க ஹெல்மெட் போடவே மாட்டோம்



நீங்க ஹெல்மெட் போடலைன்னா விடவே மாட்டோம்

ஏன்யா பணத்த மட்டும் கரெக்டா பேங்கில போடுறீங்களே!!



அது மாதிரி குப்பையையும் குப்பைத் தொட்டியில போட்டா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | – | 80 | – | 80 | – | 80 |
| கத்தரி | 150 | 160 | 160 | 260 | 160 | 160 | 110 |
| கரட் | 180 | 180 | 160–200 | 180 | 300 | 300 | – |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 50 | 40 | 30 |
| பயிற்றை | 250 | 200 | 240 | 180 | 240 | 240 | 220 |
| பாகல் | 300 | 280 | 300 | 300 | 300 | – | 200 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 140 | 130 | 130 | 140 | 140 | 120 | 110–120 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 120 | 180 | 120 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 50 | 80 | 50 |
| தக்காளி | 180 | 160 | 160 | 160 | 200 | 160 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 60 | 80 | 40–50 |
| கீரை | 60 | 50 | 40 | 20 | 40 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 30 | 40 | 12 |
| பச்சை மிளகாய் | 700 | 700 | 800 | 500 | 700 | 800 | 600 |
| புடோல் | 150 | 120 | 140 | 140 | 180 | 140 | 120 |
| கோவா | 160 | 180 | 160 | 180 | 160 | 200 | 180 |
| வெண்டி | 140 | 120 | 120 | 140 | 120 | 140 | 80 |
| போஞ்சி | 300 | 280 | 300 | 240 | 240 | 320 | 200 |
| லீக்ஸ் | 180 | 160 | 120 | 180 | 160 | 200 | – |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50–60 | 40 | 60 | 45 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 100 | 80 | 70 | 80 | 80–120 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 300 | 320 | 200 | 150 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 10–12 |
| கறிமிளகாய் | 500 | 280 | 500 | 360 | 300 | 400 | 200 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | – | 320 | 500 | – | 320 | 300 | 300–350 |

# புதிய அறிமுகம்



'நயன்தாரா டொப்ஸ்' என்று யாழ். நகரக் கடைகளில் சொல்லப்படும் புதியவகை டொப் இதுவாகும். மிகவும் நாகரிகமாக மேலைத்தேய பாணியுடன், கலாசாரமும் கலந்த உடையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான டொப்கள் மேலை நாட்டுப் பெண்களாலும் விரும்பி அணியப்படுகின்றன. இலேசான, மென்மையான துணியில் இந்த டொப்கள் வடிவமைக் கப்பட்டுள்ளன. அடர்த்தியான, மிதமான வர்ணக் கலவையில் இவை காட்சியளிக்கின்றன. இளம் பெண்களின் மனதைக் கவரும் இந்த ஆடையின் விலை ரூபா 2500 - 3000 ஆகும். இந்த டொப்கள் கலாசார விழாக்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அணியத் தகுந்தன.

# பெண்களுக்கான நாகரிக நகைகள்



தங்கம், வெள்ளி போன்ற தூய உலோகங்களில் செய்யப்படும் நகைகள் கொண்டிராத பல தனித்துவமான அலங்கார வடிவமைப்புக்களை நவீன அலங்கார நகைகளில் காணமுடிகின்றது.

அடுத்தது, தேவைக்கும் வசதிக்கும் ஏற்ற வகையில் இந்த நகைகளைத் தாராளமாக வாங்கி வைத்துக் கொள்ள முடியும். நாகரிக மாற்றத்துக்கேற்ப தமது தோற்றத்தையும் மேம்படுத்திக் காட்ட விரும்பும் தற்கால யுவதிகளுக்கு மிகவும் பொருத்தமான அணிகலன்கள் இவை.

அலங்கார நகைகள் என்று இவற்றைப் பொதுவாக அழைத்தாலும், பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள், அவற்றின் நீடித்த தன்மை, வடிவமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து இவை தரப் படுத்தப்படுகின்றன.

'ஸ்ரேலிங் சில்வர்' எனக்கூறப்படும் தரம் வாய்ந்த வெள்ளியில் தங்க முலாம் பூசப்பட்ட நகைகள் சற்றே அதிக மதிப்புப் பெற்றவை. இவற்றில் 'செமி பிரஸ்' கற்களும் சிறுமணிகளும் கலந்து செய்யப்பட்ட நகைகள் ஆடம்பரத்தையும், அதீத அழகையும் வெளிப்படுத்துவதால் தங்க நகைகளுக்கு ஈடான மதிப்பைப் பெறுகின்றன.

இதனால் சமூகத்தில் நடைபெறும் உயர்மட்ட விழாக்களுக்கும், திருமணம், நிச்சயதார்த்தம் போன்ற குடும்ப நிகழ்வுகளுக்கும் 'பைன் ஜுவலறி' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்த நகைகளை பெண்கள் அணிந்து செல்வதை இன்று அதிகமாகக் காணலாம்.

கலப்பு உலோகத்தில் வெள்ளி முலாம் அல்லது தங்க முலாம் பூசப்பட்ட நகைகள் சூழல் மாசுக்களினால் நிறம் மாறினாலும், அவற்றின் பழைய தோற்றத்தைப் பெறக்கூடிய வகையில் இலகுவான பராமரிப்பு வசதிகள் உள்ளன. ஒப்பீட்டளவில் இவை சுனமான நகைகளாக இருப்பதால் அதிக ஆயுட்காலம் கொண்டவையாகவும் விளங்குகின்றன. கண்ணாடி, கலப்பு உலோகம், பிளாஸ்ரிக், கிறிஸ்டல், பவளம், முத்து, சிப்பி, பெறுமதி குறைந்த இரத்தினங்கள், மரம், துணி, நூல் போன்றவற்றாலும் அலங்கார நகைகள் தயாரிக்கப் படுகின்றன. வசதிக்கேற்ற விலைகளில் கிடைப்பதால் இவை பாடசாலை மாணவிகள், உயர் கல்வி கற்கும் இளம் பெண்கள், தொழில் புரியும் பெண்கள், இல்லத்தரசிகள் மட்டுமன்றி மணப்பெண்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்றுள்ளன.

# சமைப்போம் வாருங்கள்

## பொரி விளாங்காய் உருண்டை



**தேவையான பொருள்கள்:**

புழுங்கலரிசி -- 1 படி (நன்றாக பொரிய வறுத்து அரைத்தது)
பொட்டுக்கடலை மா-கால் படி
தேங்காய் -- 1 துருவியது

**வெல்லப்பாகு தயாரிக்க:**

வெல்லம் -- 1 கிலோ
வேர்க்கொம்பு -- ஒரு துண்டு
ஏலக்காய் -- 4

**செய்முறை:**

வெல்லத்தை கொஞ்சம் தண்ணீர் சேர்த்து வேர்க் கொம்பைத் தட்டி, ஏலக்காயைப் பிய்த்துப் போட்டு பாகு போல் காய்ச்சி வடிகட்டி வைக்கவும். தேங்காய் துருவியதை நெய்யில் வறுத்து வைக்கவும். பின் அரிசிமா, பொட்டுக்கடலைமா, தேங்காய் அனைத்தும் கலந்து கொஞ்சம் வெல்லப்பாகை ஊற்றி உருண்டையாக பிடிக்கவும். சத்தான பொரி விளாங்காய் உருண்டை ரெடி.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | சாவகச்சேரி | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 700 | 700 | 600 | 500 |
| நண்டு | 200 | 400 | 300 | 200 | 300 | - |
| கணவாய் | 800 | 600 | 500 | 800 | 600 | - |
| பாரை | 400 | 500 | - | 400 | 400 | 400 |
| சுறா | 600 | 500 | - | 600 | 450 | 500 |
| சீலா | 400 | 400 | 400 | 400 | 300 | 200 |
| விளை | 300 | 500 | 400 | 300 | 600 | 400 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 350 | 200 |
| சிறாக்கன் | - | 800 | 300 | - | 400 | - |
| ஓரா | - | 300 | 300 | - | 350 | 400 |
| திரளி | 200 | 200 | 100 | 200 | 200 | - |
| நகரை | 200 | 200 | 100 | 200 | 150 | 300 |
| சூடை | - | 150 | 100 | 100 | 150 | - |
| ஒட்டி | - | 150 | 200 | - | 250 | - |
| திருக்கை | 100 | 300 | - | 100 | 150 | 120 |
| பாலை | 100 | 200 | - | 100 | 300 | - |
| [illegible] | [illegible] | [illegible] | 200 | 250 | 100 | 200 |
| [illegible] | [illegible] | 100 | 80 | 30 | 100 | - |
| மதனம் | 200 | 250 | 300 | 200 | 150 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை

தமிழ் அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தன. நபர்களும் தடைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் இவற்றில் 8 அமைப்புகள்மீதான தடையும் 267 நபர்கள் மீதான தடையும் அண்மையில் நீக்கப்பட்டன.

இந்த விவகாரம் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றில் நேற்றுக் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை எடுத்த எடுப்பில் ஒரே இரவிலேயே பாதுகாப்பு அமைச்சு நீக்கிவிடவில்லை. ஆழமாக ஆராய்ந்த பின்னரே முடிவு எடுக்கப்பட்டது. தடை மீளாய்வு பற்றி ஆராய்வதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டது. குற்றப்புலனாய்வுப் பிரிவினர், இராணுவப் புலனாய்வு அதிகாரிகள், அரச புலனாய்வுப் பிரிவினர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், மத்திய வங்கி அதிகாரிகள், பயங்கரவாத தடுப்புப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சால் தடைவிதிக்கப்பட்ட மேற்படி அமைப்புகளின் கடந்த மூன்று வருடகால செயற்பாடுகளை மேற்படி குழு ஆராய்ந்தது. தடை விதிக்கப்பட்டிருந்த அமைப்புகள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி வழங்கியுள்ளனவா? உளவுத் தகவல்களை வழங்கியுள்ளனவா? என்றெல்லாம் விசாரணை நடத்தப்பட்டன. இவ்வாறு விசாரணைகளின் பின்னரே சில அமைப்புகளுக்கு தடைநீக்கம் செய்யப்பட்டன.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். தேசிய பாதுகாப்பு பற்றி விழிப்பாகவே இருப்போம். புலனாய்வுப்பிரிவு பலமாகவே இருக்கின்றது.

அதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களுள் ஒரு தொகுதியினருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. இது பிணை தவிர விடுதலை அல்ல. மாதத்தில் நான்கு தடவைகள் இவர்கள் தங்களை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

காணாமல்போனோர் தொடர்பான ஐ.நா. செயற்குழு உறுப்பினர்கள் திருகோணமலை கடற்படை முகாமுக்குள் சென்றது பற்றி இங்கு கருத்து வெளியிடப்பட்டது.

ஐ.நா. குழு அங்கு செல்வது பற்றி சட்டம் ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுடன் கலந்துரையாடப்பட்டன. அங்கு ஒளிப்பதற்கு ஒன்றும் இல்லை என்று கடற்படை தளபதி கூறினார். உரிய நடைமுறைகளுக்கு அமையவே அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அங்கு சென்ற ஐ.நா. குழு தனக்கு தேவையான வகையில் செயற்படுவதற்கு இடமளிக்கப்படவில்லை. இந்த முகாம் பற்றி சி.ஐ.டி. விசாரணை இடம்பெறுகின்றது. அவர்களும் அங்கு சென்றிருந்தனர்.

ஐ.நா. அமைப்பில் இலங்கை அங்கம் வகிக்கின்றது. ஆகவே, அவ்வமைப்புடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் – என்றார். (த-சி)

## தமிழ்க்

யில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், புனர்வாழ்வு கோரிய 85 பேரில் முதற் கட்டமாக 20 பேருக்கு புனர்வாழ்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு புனர்வாழ்வுக்கு முதற் கட்டமாக தெரிந்தெடுக்கப்பட்ட 20 பேரில் 3 பேர் மாத்திரமே புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்படக் கூடிய நிலைமை காணப்பட்டது. ஏனையோருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் இருந்தமை காரணமாக அவர்கள் விடுவிக்கப்பட முடியாத நிலைமை இருந்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கடந்த சனிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தியுள்ளார். இதன் தொடர்ச்சியாக இன்றைய தினமும் பேச்சு இடம்பெறவுள்ளது.

இதற்கிடையில், கைதிகளை முதலில் பிணையில் விடுவித்துவிட்டுப் பின்னர் புனர்வாழ்வு வழங்கும் யோசனை தொடர்பில் அரச தரப்பு ஆராய்ந்துள்ளது. இந்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே எஞ்சிய கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## வடக்கு

ஆங்காங்கே இலேசான மழை பெய்யவும் , சில இடங்களில் கன மழை பெய்யவும் வாய்ப்புண்டு. மாலை, இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பும் உள்ளது. ஆனால் இந்த மழையால் எந்த அபாயகரமான விளைவுகளும் ஏற்பட மாட்டாது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-ரி4)

## காய்ச்சலால்

முல்லைத்தீவு, ஐயங்கன்குளத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை பிருந்தாகரன்(வயது-22) ஆவார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது –

கடந்த ஒரு வாரமாக உடலில் ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக மல்லாவி வைத்தியசாலையில் மருந்து எடுத்த இளைஞர், காய்ச்சல் குணமடையாததால் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுத்துள்ளார்.

ஆனாலும் காய்ச்சல் அதிகரித்தமையால் நேற்று முன்தினம் மீண்டும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வந்தபோது நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் வந்து பார்க்கும்போது குறித்த இளைஞனின் இரத்தத்தில் கிருமி இருப்பதாகக் கூறி இரத்தத்தை வெளியில் எடுத்து சேலைன் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. பின்னர் இரவு 8 மணிக்கு அவர் இறந்துவிட்டதாக வைத்தியசாலையில் இருந்து தொலைபேசி மூலம் தமக்குத் தகவல் வழங்கப்பட்டதாக சாவடைந்த இளைஞனின் அண்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டபோது, சாவடைந்த இளைஞனின் இரத்தத்தில் கிருமி கலந்ததன் காரணத்தால் குறித்த சாவு இடம்பெற்றிருக்கலாம் எனவும், இது தொடர்பாக இன்று (நேற்று) இரவுக்கு பின்னரே முழுமையான தகவல்களை வழங்கமுடியும் எனவும் தெரிவித்தார். (த-21-ரி3)

## விடுதலையே

திருந்தோம்.

மீண்டும் விசாரணை, இழுத்தடிப்பு என்பதை விரும்பவில்லை. இதனாலேயே எம்மைப் பொது மன்னிப்பில் விடுதலை செய்யுமாறும் அல்லது புனர்வாழ்வு வழங்கி விடுவிக்குமாறும் கோரியிருந்தோம். ஆனால் தற்போது ஒருதொகுதி கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட்டு, மறு தொகுதி கைதிகள் புனர்வாழ்வுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் விசேட நீதிமன்றம் அமைக்கும் செயற்பாட்டை அரசு முன்னெடுத்துள்ளது.

இதனை நாம் எதிர்க்கின்றோம். விசாரணையை நாம் வலியுறுத்தவில்லை. விடுதலையையே கேட்கின்றோம். உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டிருந்தபோது வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும்–என்றுள்ளது. (த-5)

## பட்ஜெட்

கூடி ஆராயப்பட்டுள்ளபோதும் முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்று அறியமுடிகின்றது.

தேசிய அரசின் வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்று வருகின்றது. இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வரவு – செலவுத் திட்டத்தை வரவேற்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அதன் பின்பு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு – கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தனர். அத்துடன், தற்போதைய அரசு, கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமையினால் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை விலக்கவேண்டும் என்றும் கூட்டமைப்பு நாடளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இதனால் வரவு – செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது கூட்டமைப்பு என்ன செய்வது என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை முதற்கட்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன் போது எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை. இந்த நிலையில் இன்றைய தினம் மீளவும் கூடி ஆராய்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-5)

## இலங்கை

தூதரகம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் சில பத்திரிகைகள் மற்றும் இணையதளங்களில் 2016ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியிருந்தது. இது தொடர்பான உண்மைத்தன்மையை அறியும் வகையில் இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தின் தொடர்பாடல் முகாமையாளர் டியான் சில்வாவைத் தொடர்புகொண்டு வினவியபோதே எதிர்வரும் ஆண்டில் பிரிட்டன் பிரதமர் இலங்கைக்கு பயணம் செய்யும் எவ்வித திட்டங்களையும் தற்போதைய நிலையில் கொண்டிருக்கவில்லை' என்று தெரிவித்தார்.

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக இலங்கை அரசால் முன்னெடுக்கப்படவுள்ள நம்பத்தகுந்த பொறிமுறை குறித்து இலங்கை வரும் பிரிட்டன் பிரதமர் கமரூன் கூடுதல் கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் நேற்று ஊடகங்களில் வெளியான செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக மோல்டா சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கடந்த வெள்ளிக்கிழமையன்று சந்தித்துக் கலந்துரையாடியிருந்த நிலையிலேயே அவரது இலங்கைப் பயணம் தொடர்பான செய்தி நேற்று ஊடகங்களில் வெளியாகியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் பிரிட்டனின் உதவிகளில் கணிசமான அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளமை குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதன்படி அடுத்துவரும் மூன்று வருட காலப்பகுதிக்கு இலங்கையின் நல்லிணக்கம், இராணுவ மறுசீரமைப்பு மற்றும் இடம்பெயர்ந்தோரின் நலன்களுக்காக 6.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் பிரிட்டனால் உதவி வழங்கப்படவுள்ளது. இதனைத்தவிர இலங்கையில் வதிவிடத்தைக் கொண்டிராத பிரிட்டன் பாதுகாப்பு ஆலோசகரொருவரும் நியமிக்கப்படவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தப் பாதுகாப்பு ஆலோசகர் இலங்கையின் இராணுவ மறுசீரமைப்பிற்கு ஏற்புடைய வகையில் பிரிட்டனின் இராணுவப் பயிற்சி நெறிகளைப் பெற்றுத்தருவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பார் எனவும் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது. (த-சி)

## தமிழ்

கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது –

ஒரு பாரம்பரிய சமூகத்தின் அடையாளமே அது வாழ்ந்து வரும் நிலந்தான். பாரம்பரிய நிலத்தில் இருந்து சமூகத்தைப் பிரித்தால், பிரிக்கப்பட்ட சமூகம் அநாதையாகிவிடும். எமது பாரம்பரிய சமூகத்தைப் புகலிடம் அற்றவர்கள் ஆக்கவே பல நடவடிக்கைகள் அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்டு வருகின்றன.

2009 ஆம் ஆண்டு போர் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டன. வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்குப் படையெடுத்து வந்தவர்கள் போர் முடிந்ததென்று தங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்லவில்லை. எமது பாரம்பரிய நிலங்களில் பெரும் பகுதியைப் தம்வசம் பற்றிவைத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். அந்த நிலங்களில் உரிமையுடன் வாழ வேண்டியவர்கள் நிராதரவாக – நிர்க்கதியினராகப் பிறர் நிலங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள்.

தொடர்ந்து வந்த மத்திய அரசுகள் துயருற்ற எமது அகதிகளுக்கு அண்மைக் காலமாகப் பல்வித உறுதிமொழிகளை அளித்து வந்திருந்தாலும் அவர்களைத் தத்தமது பாரம்பரியக் காணிகளில் மீளக் குடியமர்த்துவதில் சிக்கல்களும் தாமதங்களுமே மிஞ்சி இருக்கின்றன.

காணிகளை இராணுவம் கையேற்று வைத்திருப்பதை நான் காலத்தின் கோலமாகக் கருதவில்லை. காலாதி காலமாகக் கரவாகக் கடையப்பட்ட கருத்துக்களின் கடை நிலையாகவே அவர்களின் நடவடிக்கைகளைக் காண்கின்றேன். நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்க முன்னரே அரச குடியேற்றங்கள் ஆரம்பமாகிவிட்டன. அதன் அர்த்தம் என்ன என்று ஆராய்ந்தோமானால் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடங்களில் இன அமைப்பில் மாற்றங்களை இழைக்க வேண்டும் என்ற இழிவான கர வெண்ணமே அக் குடியேற்றங்களின் காரணம் என்பது தெரிய வரும்.

இவ்வாறான குடியேற்றத் திட்டங்களால் பாரம்பரியமாகத் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்ந்து வந்த இடங்கள் அவர்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் தொகையானது 1911 ஆம் ஆண்டில் இருந்து 1981 வரையான காலகட்டத்தில் 3.8 சதவிகிதத்தில் இருந்து 33.6 சதவிகிதத்திற்கு மேலேழுந்தது. அதே காலகட்டத்தில் தமிழ் மக்களின் தொகையானது 56.8 சதவிகிதத்தில் இருந்து 33.7 சதவிகிதத்திற்குக் கீழிறங்கியது. அதே காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மக்களின் சனத்தொகை 7 சதவிகிதத்தில் இருந்து 38 சதவிகிதத்திற்கு மேலெழுந்தது. தமிழ்ப் பேசும் மக்களின் தொகை 37 சதவிகிதத்தில் இருந்து 20 சதவிகிதத்திற்கு கீழிறங்கியது. இது 1983 ஆம் ஆண்டுக்கு முன்னைய புள்ளி விபரங்கள்.

இதேமாதிரியான மாற்றங்கள் தற்பொழுது வடக்கு மாகாணத்தின் தென் பகுதிகளிலும் ஆரம்பமாகிவிட்டன. இன அழிப்பு பற்றி நாங்கள் கொண்டுவந்த பிரேரணையை எதிர்ப்பவர்கள் இவை பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு முக்கிய உண்மையை சிங்கள அரசியல்வாதிகள் என்றென்றும் மறந்து விடுகின்றார்கள். இரண்டாயிரம் ஆண்டு காலம் வடக்கு-கிழக்கு மாகாணங் களில் தமிழ் பேசும் மக்கள் தான் பெரும்பான்மையினராக இருந்து வந்துள்ளனர். வேறெவரும் அங்கு அவ்வாறு பெரும்பான்மையினராக இருந்ததில்லை.

இடம்பெயர்ந்த மக்களின் உரித்துக்கள் பற்றி ஐ.நா. பத்து வருடங்களுக்கு மேலாக ஆராய்ந்து 'பின்ஹெய்ரோ கோட்பாடுகள்' என்ற தலையங்கத்தின் கீழ், உள்நாட்டு இடம்பெயர் மக்களினதும், அகதிகளினதும் வீடுகள் காணிகள் போன்றவற்றைத் திரும்பப் பெறுவது பற்றிய சில கோட்பாடுகளை இயற்றியுள்ளார்கள். இந்தக் கொள்கைக் கருத்தானது மீள்க் குடியிருப்பு என்ற தனியுரித்து எந்தளவுக்குச் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

போர் முடிந்து ஏழாவது வருடம் நடந்துகொண்டிருக்கும் இத்தருணத்தில், எமது மக்களின் வாழ்வாதாரங்கள் ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு அவர்கள் ஏதிலிகளாக எவரோ ஒருவர் காணியில், வீட்டில், ஆதனத்தில் கவனிப்பார் அற்று காத்துக் கிடக்கும் இவ்வேளையில், மேற்படி சர்வதேச கொள்கைக் கருத்தானது ஒரு ஒளிக்கீற்றை எம்மண்ணில் உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

இன்றைய கருத்தரங்கம் இந்த பின்ஹெய்ரோ கோட்பாட்டுக் கருத்தை வலியுறுத்துவதற்காக ஏற்பாடு செய்த ஒரு கூட்டமாகவே எனக்குத் தென்படுகின்றது. மக்களை அகதிகளாக்கி, தம் நாட்டிலேயே அன்னியர்களாக்கி வருடக் கணக்காக அவர்களை ஏதிலி வாழ்வு வாழவிட சட்டம் இடம் கொடுக்கவில்லை என்ற கருத்தை நாங்கள் இன்று முன்வைப்போம். எங்கள் அரசுகளும் இராணுவத்தினரும் மக்களின் ஒரு முக்கியமான தனியுரித்தைப் பறித்து வைத்துப் புங்கம் ஏற்படுத்தி அவர்கள் வாழ்க்கைகளைப் பாழ்படுத்தி வந்துள்ளார்கள் என்பதை எல்லோரும் கேட்டறியுமாறு இங்கிருந்து உரத்துக் கூறுவோம்.

நாங்கள் சட்டப்படி குற்றம் இழைத்துவிட்டோம் என்று அரசும் இராணுவத்தினரும் புரிந்து கொள்ளும் விதத்தில், இன்றைய கூட்டம் அமைந்துள்ளது என்ற மனநிறைவுடன், ஆனால் எமது குடிபெயர்ந்த மக்களின் நிலையை நினைத்து மனவருத்தத்துடன் அவர்கள் வாழ்வில் வசந்தம் பரிணமிக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுவதாகத் தெரிவித்தார். (த-5-ரி5-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நாச்சிமார் கோவிலுக்கு வங்கியில் நிதி வைப்பிடவேண்டாம்

## மாவட்ட நீதிமன்றம் நேற்றுக் கட்டளை

சாவகச்சேரி டிசெ.1.

சாவகச்சேரி சப்பச்சிமாவடி வெள்ளுரவை நாச்சிமார் கோவிலின் புனரமைப்புக்குச் சாவகச்சேரி கொமர்ஷல் வங்கி கணக்குக்கு நிதி வைப்பிலிட வேண்டாமெனவும் வங்கிக் கணக்குக்கு யாராவது நிதி வைப்பிலிட்டால் நீதிமன்றுக்கு அறிவிக் குமாறும் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றினால் நேற்றுக் கட்டளையிடப்பட்டது .

சாவகச்சேரி சப்பச்சிமாவடி வெள்ளுருவை ஆலயப் புனரமைப்புக்கு நிதி வழங்குமாறு வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் தொடர்பாக ஆலய வழிபடுவோர்கள் அல்லது அடியார்கள் பிழையாக வழிநடத்தப்படாமல் இருக்க இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய புனரமைப்புக்கு நிதி வழங்கக் கோரி வெளியிடப்பட்ட விளம்பரம் தொடர்பாக நடைபெற்ற வழக்கு விசாரணையின் பின்னர், சாவகச்சேரி கொமர்ஷல் வங்கியின் கணக்கு இலக்கம் 8126005132 இற்கு நிதி உதவிகளை வழங்குமாறு வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் தொடர்பில் நீதிமன்றினால் நேற்று குறித்த வங்கிக் கணக்குக்கு பணத்தை வைப்பிலிடவேண்டாமெனவும், அவ்வாறு பணத்தை ஏற்கனவே வைப்புச் செய்தவர்கள் அது தொடர்பில் நீதிமன்றுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் அறியத் தருமாறும் மாவட்ட நீதிபதி கட்டளையிட்டுள்ளார். (த-9)

# ஜனவரியில் சீனா செல்கிறார் மகிந்த

கொழும்பு, டிசெ.1

முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச எதிர்வரும் ஜனவரி மாதம் சீனாவுக்குப் பயணமொன்றை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்தப் பயணத்தின்போது அவர் இரு வாரம் சீனாவில் தங்கியிருக்கக் கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததன் பின்னர் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பமும் இது வாகும். (த-22)


## 4ஆம் ஆண்டு நினைவலை



மனிதனாக 30.05.1960
தெய்வமாக 16.12.2011

### அமரர் கணபதிப்பிள்ளை குகானந்தன்

(தலைவர் - கிராம அபிவிருத்திச் சங்கம், செயலாளர் - கமக்கார அமைப்பு, உபதலைவர் - சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம், கிராமிய சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்)

எம்மையெல்லாம் வாழவைத்த எங்கள் குடும்ப விளக்கே!
ஆசை அப்பாவே! அருமை மாமாவே பாசமிகு தாத்தாவே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆனாலும்
எம் மனதில் சில நிமிடங்கள் போல் இருக்கின்றது
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !!! சாந்தி !!!

மறவன்புலவு கிழக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
சிவராசா ரவல்ஸ் அன்ட் ரான்ஸ்போட்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 02 . 1968
மறைவு 12 . 12 . 2014

### அமரர் பாஸ்கரசிங்கம் ரஜீவ் (ஜீவா)

(கணினி ஆலோசகர் U.K)

திதி: ஷஷ்டி

எங்கள் உயிருள்ளவரை உங்கள் கனிவான பேச்சும் செயலும் திறனும் எங்களை விட்டு அகலாது.

நீங்கா நினைவுடன்...

அன்பு மகள் சூரி, அக்கா சாந்தி, டடா, சித்தப்பா, சித்தி.

56, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.

(66483)(11,15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 03 . 1930
மறைவு 12 . 12 . 2014

அமரர்

### நல்லையா அன்னக்கண்டு

ஆரவாரமின்றி ஓடி மறைந்து விட்டது ஓராண்டு - உங்கள்
நித்திய இருப்பின் நினைவுகளை மட்டும்
நெஞ்சமதில் தந்தபடி

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

ஊரிக்காடு, முள்ளியான்,
வடமராட்சி கிழக்கு.

பேச்சி அம்மன் கோவில்வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

வட்டு.தென்மேற்கு,வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட

### அமரர் கணேசன் விஜயன் அவர்களின்

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 19 . 07 . 1983



விண்ணுலகில் 12 . 12 . 2014

திதி: ஷஷ்டி

எங்கள் அன்பின் மகனே, ஆசைச் சகோதரனே,
பிரியமான மாமாவே, அருமைப் பேரனே, ஆருயிர் நண்பனே!
நீ சென்று ஓராண்டு ஆனாலும் ஆறாதடா எம் துயரம்.

நீ காட்டும் பாதைதான் சரியென நடந்தோம்
இப்போ பாதை தவறித் தடுமாடுகிறோம்
யார் பாதை காட்டினாலும்
நீ காட்டும் பாதைக்கு ஈடாகுமோ??

உன் உடல் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உன் அழகான தோற்றமும்
அன்பான பார்வையும் அரவணைக்கும் கைகளும்
ஓடித்திரிந்த கால்களும்
எங்கள் மனக் கண்முன் எப்பொழுதும் நிழலாடுமடா!!!

உனது முத்தான சிரிப்பையும்
உள்ளம் கனிந்த பேச்சையும்
ஊரார் உறவினர் நண்பர்கள் மட்டுமல்ல உலகமே புகழ்ந்து தேடுகின்றது.

எங்களையெல்லாம் இவ்வுலகில் தவிக்கவிட்டு
மிக விரைவாக அப்பாவிடம் சென்றுவிட்டாயடா
உங்கள் இருவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி!!!

வீதி,
வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

(66507)(11,15,17)

குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு - 077 238 5487


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பிரச்சினைகளுக்கு பட்ஜெட்டில் தீர்வு இல்லை

## தாதியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ 01
இந்த முறை முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் சுகாதார சேவையில் நிலவும் பாரதூரமான பிரச்சினைகள் எவற்றுக்கும் தீர்வுகள் இல்லை எனவும், தாதியர் சேவை குறித்துக் காத்திரமான செயற்றிட்டமொன்று வரவு- செலவுத் திட்ட முன்மொழிவுகளில் இல்லை எனவும் அகில இலங்கை தாதியர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

சுகாதாரத்துறைக்குச் சராசரி தேசிய உற்பத்தியில் 3 வீதத்தை ஒதுக்குவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் 1.5 வீதமே ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் சங்கம் மேலும் கூறியுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் மருந்து வகைகள் மற்றும் சாதனங்களுக்கான பற்றாக்குறை, பணியாளர் குழுக்களுக்கான பற்றாக்குறை, சிகிச்சை வழங்கும் சேவைகளில் பின்னடைவு என்பன ஏற்படக் கூடும் எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

(த-22)

## மரண அறிவித்தல்

**இம்மானுவேல் ஜெறோம்**

30.11.2015 உதயன் பத்திரிகை யில் பக்கம் 24 இல் பிரசுரமான **இம்மானுவேல் ஜெறோம்** அவர்களின் மரண அறிவித்தலில் பாலியை பிறப்பிடமாகவும் என்பதை பலாலியைப் பிறப்பிடமாகவும் என திருத்தி வாசிக்கவும்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி தபேந்திராதேவி சண்முகராசா

(ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்
யாழ். போதனா வைத்தியசாலை)

பண்ணாகத்தைச் சேர்ந்த திருமதி தபேந்திராதேவி சண்முகராசா நேற்று (30.11.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசி வாயம் சண்முகராசாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் சரவணமுத்து-பார்வதி தம்பதியரின் மகளும், நமசிவாயம்-சிறிமதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதிதேவி, தண்டிகை நாச்சியார், அருளம்பலம், ஆசிரியர் நமசிவாயம் மற்றும் கனகராசன் (ஓய்வுநிலை பிரதி நில அளவையாளர் நாயகம்), ஞானேஸ்வரி (கனடா), வேலாயுதர் (கனடா) கேதீஸ்வரன் (கனடா) பராசக்தி (நோர்வே) நடேஸ்வரன் (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2015) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **ச. கனகராசன் (சகோதரன்)**
**அன்னாரின் குடும்பத்தினரும்**
(66513) (10.17) **021 3213557**

### திருமதி தர்மலெட்சுமி (திரு அன்ரி) சூரியகுமார்



சுருவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலெட்சுமி சூரியகுமார் 29.11.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன விநியோக உத்தியோகத்தரும், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளருமான நல்லதம்பி சூரியகுமாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுருவில் துரையப்பா - விசாலாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலணை வடக்கு நல்லதம்பி - இராஜலெட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும், தினேஷ்குமார் (லண்டன்), Dr.பிரதீபா (ward - 12 போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), கார்த்திகா (சிங்கப்பூர் - முன்னைநாள் யூனியன் வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்மிளா (லண்டன்), Dr.பிரதாப் (M.O, Anaes/ICU- போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), ஜெயராஜன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் அன்னலெட்சுமி (வவுனியா), அழகேஸ்வரி (கொழும்பு), பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/பெரியபுலம் மகாவித்தியாலயம் - தற்போது லண்டன்), பூபாலசிங்கம் (வவுனியா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, சற்குணம் மற்றும் செல்வி சிவநேஸ்வரி - நல்லதம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான துரைசாமி, கந்தவேள், கந்தசாமி மற்றும் இராஜலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - தற்போது லண்டன்), கரோலின், சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கலைச்செல்வி (ஆசிரியை), சாந்தி (லண்டன்), சுரேஷ்குமார் (உரிமையாளர் - காமாட்சி அரிசி ஆலை) ஆகியோரின் அன்பு அத்தையும், இலக்கியா, அபிராம், பிரணவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.68, அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
ந.சூரியகுமார் (கணவர்)
மற்றும் குடும்பத்தினர்.

(66508)(11,15,17)

## மரண அறிவித்தல்கள்



### சுப்பையர் இரத்தின ஐயர்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அளகொல்லைப் பிள்ளையார் ஆலய ஆதீன கர்த்தாவுமாகிய சுப்பையர் இரத்தின ஐயர் நேற்று (30.11.2015) திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையர்-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், அப்பாச்சாமிக் குருக்கள்-சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பஞ்சாட்சர ஐயர், அமரர் நடராஜ ஐயர், இராஜேஸ்வரி அம்மா, தாட்ஷாயினி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாணிக்கவாசக் குருக்கள், சுந்தரேஸ்வர சர்மா, பாலசுப்பிரமணியக் குருக்கள், கௌரி (புனிதம்) தெய்வநாயகி (சக்தி), மகாலிங்கக் குருக்கள், காலஞ்சென்ற உஷாதேவி, கல்யாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், லலிதா, புவனேஸ்வரி, சாந்தா, திருப்பதி, வெங்கடசலா ஐயர், மதிவதனி, திலீபன் குருக்கள் ஆகியோரின் அன்பு மாமனும், சிவப்பிரியன், ரமேஸ்வர சர்மா, கௌரீஸ்வரக் குருக்கள், தினேஸ் சர்மா, லீலாவதி, மயூரநாதக் குருக்கள், அகிலநாதக்குருக்கள், வைத்திய நாதக் குருக்கள், சுவர்ணா, சிந்துஜா, உமாபிரசாத், திவ்வியாங்கன் ஆகியோரின் அன்பு பேரனும், வர்ஷாயுதன், பிரத்யுன்னன், சிவானுஜா, வர்ஷாயினி, பிரதக்ஷன், ஸ்ரீபுஜிதன், கபிலேஸ், ஸ்ரீபுஜன், ஸ்ரீலிஜன், ஹம்சத்வனி, ஸ்ரீபுஜிதசர்மா, ஜீவன் சர்மா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அழகொல்லப்பிள்ளையார்,**
**அளவெட்டி.**

(சி/20519) (10.17)

தகவல்:
**குடுபத்தினர்.**

### சங்கரப்பிள்ளை சிவபாதசுந்தரம்



புலோலிதெற்கு, சாரையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவபாதசுந்தரம் நேற்று (30.11.2015) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், மதி உதயாவின் (யா/வடஇந்து ஆரம்பப் பாடசாலை) அன்புத் தந்தையும், சிவரஞ்சனின் (கிளி/மாசார் அ.த.க. பாடசாலை, கிளி/ இயக்கச்சி அ.த.க.பாடசாலை) அன்பு மாமனும், அபிந்தனின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, தர்மலிங்கம் மற்றும் தங்கம்மா, சிவபாக்கியம், சிவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுப்பிரமணியம் (பிரபல ஆங்கில ஆசிரியர்), அரசகுமாரி, காலஞ்சென்ற இராமேஸ்வரன் மற்றும் சிவபாதசுந்தரம், இராமச்சந்திரன், பத்மநாதன் (கனடா), இன்பதேவன் (கனடா), சுப்புலட்சுமி, சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனரும், பிரியதர்சினி (Dr.அமெரிக்கா), சஞ்சீவன், சத்தியன் ஆகியோரின் மாமனும், கஸ்தூரி (தென் ஆபிரிக்கா), லிசானி, யுவேசாந், ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.12.2015) செவ்வாய்க்கிழமைநடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் மு.ப.10.00 மணிக்கு தகனம் செய்வதற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **மனைவி, மகள்,**
**மருமகன், பேரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தியோகபூர்வ இல்லங்களை மீள வழங்காத 20 அமைச்சர்கள்

கொழும்பு, டிசெ.1

தமக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோக பூர்வ இல்லங்களை இதுவரை மீள ஒப் படைக்காத 20 முன்னாள் அமைச்சர் கள் மீது வழக்குத் தொடுப்பதற்கு அரச நிர்வாகங்கள் மற்றும் முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

இவர்கள் அனைவரும் கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளதுடன் அமைச்சுப் பதவிகளை இழந்துள்ளோர் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்த அரசியல்வாதிகளை குறித்த உத்தி யோக்பூர்வ இல்லங்களிலிருந்து வெளி யேறுமாறு வழங்கப்பட்ட காலவரையறை முடிவடைந்துள்ளதெனவும், உத்தியோக பூர்வ இல்லங்களை மீள ஒப்படைக்கு மாறு விடுக்கப்பட்ட அறிவித்தல்களுக்கு எந்தவொரு பிரதிபலிப்பும் காட்டப்படவில் லை எனவும் அமைச்சின் அதிகாரி ஒரு வர் கூறினார்.

எனவே, அவர்களை வெளியேற்ற நீதி மன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்குத் தயாராக உள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(த-22)

## குடும்பப் பெண் கொலை; வழக்கு மேல்நீதிமன்றுக்கு

கரணவாய், டிசெ.1

கூரிய ஆயுதத்தால் கழுத்தில் குத்திக் குடும்பப் பெண்ணைக் கொலை செய்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேக நபருக்கெதிரான வழக்கை யாழ்.மேல்நீதி மன்றில் பாரப்படுத்தமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்த குடும்பப் பெண்ணான கண்மணி கமலாம்பிகை என்பவரை கூரிய ஆயுதத்தால் கழுத்தில் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கண் மணி என்பவருக்கெதிராகப் பருத்தித் துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கு விசா ரணைகள் இடம்பெற்றுவந்தன.

இந்தக் கொலை தொடர்பான சுருக்க மற்ற விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு அது கொலை என நிரூபிக்கப்பட் டதை அடுத்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்றன.

இந்த வழக்குத் தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக யாழ். மேல்நீதி மன்றில் பாரப்படுத்துமாறு உத்தரவிட்ட நீதிவான் சந்தேகநபரைஎதிர்வரும் 4 ஆம் திகதிவரைமீண்டும் விளக்கமறியி லில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

(த-108)

## பட்ஜெட்டின் பின்னர் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, டிசெ.1

வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பின் பின்னர் அமைச்சரவையில் சில மாற் றங்கள் மேற்கொள்ளப்படக்கூடுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாகத் தற் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி பிரதி அமைச்சராகப் பதவி வகிக் கும் கருணாரத்ன பரணவிதாரணவுக்கு பொதுசன ஊடகத்துறைப் பிரதியமைச் சர் பதவி வழங்கப்படவுள்ளதாகக் கூறப் படுகின்றது.

அரசின் செயற்றிட்டங்கள் மற்றும் கொள்கைகளை விரைவாகவும் வெற்றி கரமாகவும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதை முன்னிட்டு அரசு இந்த நட வடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆயத்தமாகி வருவதாகவும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

(த-22)


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 14 . 03 . 1934

உதிர்வு 12 . 11 . 2014



**செல்லையா அம்பலவாணர்**

நாளோடி வருடங்கள் பலவாகி
ஆண்டு ஒன்றாகி மறைந்துவிட்டதையா
நம்மோடு தினம் வாழும் உன் ஞாபகம்
அகலுமா உந்தன் பிரிவின் சோகம்
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை என்றும் எமக்குத் தெரிந்தும்
ஆறவில்லை என்றும் இதயத்திலிருந்து உங்கள் மறைவு
என்றும் நினைவு கூர்ந்துகொண்டே இருப்போம்.

கிராஞ்சி லேன்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



**சி.காசிநாதன்**

காசிவாசம் சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக வும் கொண்ட சி. காசிநாதன் நேற்று (30.11.2015) திங்கட் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சிற்றம்பலம்-சின்னம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல் வரும், காலஞ்சென்ற முத்தையா மற்றும் நேசமலர் தம்பதி யரின் அன்பு மருமகனும், செல்வநாயகி யின் அன்புக் கணவரும் கோகுலன், சயந்தன், ஷயானி ஆகி யோரின் அன்புத் தந்தையும், காசிராஜன், அமரர்களான காசிமா மணி காசிலிங்கன் மற்றும் காசிமாமலர் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரிக்கா, ஞானவடிவேல் (UK), கெங்காதரன், சசிதரன் (Canada) சுபாஜினி ஆகியோரின் மைத்துனரும் சிவமோகன் ஜெகதீஸ்வரி கௌசலா ஆகியோ ரின் சகலனும் சிவஜெயானி சிவநர்த்தனி சிவகிருஸ்ணண் சிவபிரகாசினி, சிவஜயந்தன் விஜிதன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், விஜயகாந்தன், சுமணதாஸ், கோபிகன், அபிராமி, அபிநயா, சிந்துஜன், இந்துசா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2015) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
கோகுலன் (0770779784)
சயந்தன் (0775293515)

சுழிபுரம் மேற்கு.

(66519) (10.17)

## திருமதி தங்கம்மா பொன்னம்பலம்



பிறப்பு 25.05.1926

இறப்பு 28.11.2015

நீர்வேலி தெற்கு, நீர்வேலி யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தங்கம்மா பொன்னம்பலம் கடந்த (28.11. 2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை) அன்பு மனைவியும், சிவதேவி, சந்திராதேவி, சாரதாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், இரத்தினம், உதயபாலசிங்கம் (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமியும், திவாகரன் - ரஜனி (கனடா), மயூகரன் - கொளி (ஜேர்மனி), நிவாஸ்கரன் (ஜேர்மனி), சண்சிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த் தியும், அமீரா(ஜேர்மனி), பிரவீஸ் (கனடா), நெல்லித் (ஜேர்மனி), தருண் (கனடா), சன்செய் (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (01.12.2015) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
021 223 1151

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் (காணி சுவீகரிப்பு) ஆக கடமையாற்றும் திருமதி. ஸ்ரீ.சாதுரியா அவர்களின் அன்புத் தந்தையும் விஞ்ஞானத் தொலிநுட்ப உத்தியோகத்தர் ஸ்ரீகரன் அவர்களின் அன்பு மாமனுமாகிய

**ஐயாத்துரை பரமசிவம்**

அவர்களின் திடீர் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

(66512) (10.15.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் சீவரெத்தினம் சுரேஸ்குமார் அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னையா சீவரெத்தினம்**

அவர்கள் இறைபதமெய்தியமையையிட்டு துயருற் றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிகழகம்

(66510) (12.15)

மலர்வு: 11.05.1947
உதிர்வு: 29.11.2015

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## 20ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

தோற்றம் 19 . 05 . 1942

மறைவு 13 . 12 . 1995



**அமரர் சுப்பையா கனகசுந்தரம்**

(முன்னாள் லொறி உரிமையாளர்)

அன்பான அப்பாவே!
இருபதாண்டுகள் சென்றதுவோ நீங்கள் பிரிந்து
இன்னமும் கண்கள் கரிக்கின்றதே உங்களை
நினைக்கையில்...
எப்போதும் எம் நினைவில் நிறைந்திருப்பீர்கள்
ஒளி விளக்காய்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சின்னத்துரை பரமேஸ்வரி**



மலர்வு
15.04.1954

மறைவு
11.12.2010

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் ஆறுமோ நெஞ்சம்
இன்முகம் காட்டி அன்போடு நல்வழிகாட்டி
உத்தமியாய் உலகம் போற்ற வாழ்ந்தீர்
வானுறையும் தெய்வமாகிவிட்ட அன்புத் தெய்வமே!
என்றும் உம்மை நினைத்தே புனித பாதங்களில்
மலர் அஞ்சலி செலுத்துகின்றோம்

நாலக வீதி, கைதடி தெற்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

## 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சின்னையா வேதநாயகம் எற்வேட் நவரத்தினசிங்கம்**

(ஜே.பி)



தோற்றம்
06.02.1908

மறைவு
01.12.1975

ஏழைகள் கல்வி கற்க ஏணியாய் இருந்து இன்புற்றீர்
கல்வியால் உயர்வு காணக் கலங்கரை விளக்கமானீர்
பாடுகள் பலவும் பட்டீர் பரம பிதா வழிநடந்தீர்
நாலுபத்தாண்டாயிற்று ஞாலத்தின் மனிதம் ஆனீர்!
நீங்கள் காட்டிய அன்பிற்காகவும்
புரிந்த தியாகங்களுக்காகவும் நன்றியோடு
இந்நாளில் நினைவு கூருகிறோம்.

பண்டத்தரிப்பு.

குடும்பத்தவரோடு
உங்கள் மாணவர்களும் குடும்பமும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்துவின் கரம் தொடரில் சம்பியனானது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம், டிசெ. 1
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத் தப்பட்ட கரம் தொடரில் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இருபால் பிரிவிலும் கொக்குவில் இந்துக்கல்லூரி சம்பியனாகியுள்ளது.

**ஆண்கள் பிரிவு**
இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும் ஒரு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் அணி சார்பில் மிதுசனும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சார்பில் நியூட்டனும் மோதிக் கொண்டனர். நியூட்டன் 15:12 என்ற புள்ளி அடிப்படையில் முதலாவது ஒற்றையர் ஆட்டத்தைக் கைப்பற்ற கொக்குவில் இந்துவின் ஆதிக்கம் ஆரம்பமானது.
இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸின் சார்பில் அபினேஸ்ஸும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் சார்பில் நிவேதிகனும் மோதிக் கொண்டனர். 22:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் நிவேதிகன் வெற்றி பெற, மூன்றாவது செற்றுக்கு வேலைவைக்காமல் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சம்பியனானது. மூன்றாம் இடத்தை ஆனைக்கோட்டை ஆர்.சி. கைப்பற்றியது.

**பெண்கள் பிரிவு**
பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி, ஆனைக்கோட்டை ஆர்.சி. அணி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி ஆகிய மூன்று அணிகள் மட்டுமே தொடரில் பங்குபற்றியமையால் புள்ளி அடிப்படையில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி சம்பியனானது. (ம-23)






## இன்றைய மோதல்கள்

*கலைமதி வி.கழகத் தொடர்*
கரணவாய், டிசெ. 1
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் அங்கத்துவக் கழகங்களுக் கிடையில் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**எப்.ஏ. கிண்ணத் தொடர்**
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் எவ்.ஏ. கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் பதிவுசெய்த அணிக ளுக்கு இடையிலான ஆட்டங் கள் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்திலும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக



மைதானத்திலும் இடம்பெற்று வருகின்றன.
குறித்த தொடரில் இன்று அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.தோமஸ் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

## சமநிலையான ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 1
யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான இரண்டாம் கட்ட ஆட்டங்கள் அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதிக்கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பதிவு செய்ததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதிக்கொண்டது. ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவு செய்ததனால் இந்த ஆட்டமும் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

## நவஜீவன்ஸ், மனோகரா அணிகளுக்கு வெற்றி

கரணவாய். டிசெ. 1
நவிண்டில் கலைமதி விளை யாட்டுக் கழகம் நடத்திய உதைபந் தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.

**நவஜீவன்ஸ் -றேஞ்சர்ஸ்**
முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது. பத்து நிமிடங்கள் முழுமையாக முடிவதற்குள் கோல்கணக்கை ஆரம்பித்தது நவஜீவன்ஸ். அடுத்த சில நிமிடங்களிலேயே பழிதீர்த்து முடித்தது றேஞ்சர்ஸ். வேறெந்த கோல்களும் பதியப்படாத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி.
பந்துடன் இணைந்து நிமிடங்களும் உருண்டோடின, ஆனால் கோல் கணக்கில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இறுதி நிமிடங்களில் மேலுமிரு கோல்களைப் பதிவுசெய்து 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நவஜீவன்ஸ்.

> ஆரம்பம் முதலே ஆட்டத்தை தனது இறுக்கமான கட்டுப் பாட்டில் வைத்தி ருந்தது மனோகரா.

**மனோகரா - வதிரி**
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பம் முதலே ஆட்டத்தை தனது இறுக்கமான கட்டுப்பாட்டில் வைத்திருந்தது மனோகரா. அந்த அணியின் வீரரான மிதுசனின் ஹற்றிக் கோலுடன் 4:0 என்று வெற்றிபெற்றது மனோகரா விளையாட்டுக் கழகம். (ம-108)

## ஸ்கந்தாவில் கரப்பந்தாட்டத் திடல்

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கரப்பந்தாட்ட திடல் ஒன்றுக்கான கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இளைஞர் வலுப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் பிரதேசத் துக்கு இரண்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ஒவ்வொன்றும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இந்த வேலைத்திட்டத்தில் உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கரப்பந்தாட்ட திடல் ஒன்றை அமைக்க முன்வந்துள்ளது. குறித்த மைதானத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது. (ம)




இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் வருடாவருடம் 15 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையே சமபோச கிண்ணத்துக்காக நடத்தும் தேசிய மட்ட உதைபந்தாட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வின் ஓர் பதிவு. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோக்லியின்
### ரசிகனான கங்குலி

தான் இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லியின் மிகப்பெரிய ரசிகன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் தலைவரா்ன கங்குலி.

கோக்லியின் தலைமையில் இந்திய அணி டெஸ்ட் தொடர்களில் அபாரமாகச் செயற்பட்டு வருகிறது. இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளுக்கு எதிராக இந்திய அணி தொடரைக் கைப்பற்றிய நிலையில், கோக்லி தொடர்பாக கங்குலி தெரிவிக்கையில் நான் கோ்க்லியின் மிகப் பெரிய ரசிகன். அவரது ஆக்ரோசமான செயற்பாட்டை விரும்புகிறேன். அவர் இந்திய அணியை சிறப்பாக வழிநடத்தி வருகிறார். டெஸ்ட் ஆட்டத்தில்வெற்றியைக்குவிப்பது என்பது இலகுவானதல்ல. ஆனால் இந்திய அணி மூன்று நாள்களில் ஆட்டத்தை முடித்துக் கொண்டிருக்கிறது. விமர்சனங்கள் இல்லாமல்வெற்றியில்லை. சில விமர்சனங்கள் இருக்கத்தான்செய்யும்.அவற்றை கண்டுகொள்ளத் தேவையில்லை. இந்தியாவின் வெற்றிதொடரும் என்றார். (ம)




# வீழ்ந்தார் விளாடிமிர் கிளிட்ச் கோவ்
## சம்பியன் பட்டம் பியூரியிடம் கைமாறியது

உலக குத்துச் சண்டைத் தொடரில் கடந்த 11 ஆண்டுகளாக தோல்வியே காணாத விளாடிமிர் கிளிட்ச் கோவை வீழ்த்தி டைசன் பியூரி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

ஜேர்மனியின் பெர்லின் நகரில் நடந்த இந்தப் போட்டியில் 40 வயதான உக்ரைன் வீரர் விளாடிமிர் கிளிட்ச்கோவை இங்கிலாந்து வீரர் டைசன் பியூரி எதிர்கொண்டார். 2004ஆம் ஆண்டுமுதல் ஒரு போட்டியில்கூட தோற்காமல் தொடர்ந்து வெற்றிநடை போட்டு வந்த விளாடிமிர் கிளிட்ச் கோவ். இப்போட்டியிலும் எளிதாக வெல்வார் என்று கருதப்பட்டது.

ஆனால் குத்துசண்டைக் களத்தில் அவருக்கு கடும் நெருக்கடியைக் கொடுத்த டைசன் பியூரி 115-112, 115-112, 116-111 என்ற புள்ளிக் கணக்கில் விளாடிமிர் கிளிட்ச் கோவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். 27 வயதான இவர் கடந்த 25 போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.(ம)

## ஆடுகளத்தில் தவறில்லை ரவிசாஸ்திரி கருத்து

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டங்களை மூன்று நாட்களில் இந்திய அணிமுடித்து விடுவதால், ஆடுகளங்கள் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. குறித்த விமர்சகர்களுக்குப்பதிலடிகொடுத்துள்ளார் ரவிசாஸ்திரி.


இந்திய ஆடுகளங்களை விமர்சித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆஸ்திரேலிய வீரர்களாவர். இந்த நிலையில் ரவிசாஸ்திரி தனது நேர்காணலில் – டெஸ்ட் ஆட்டம் மூன்று நாட்களுக்குள் முடிவதில் எந்தத் தவறும் இல்லை. நாக்பூர் ஆடுகளத்தில் ஆடியதில் இரு அணியினருக்குமே எந்தப் பிரச்சினையும் இல்லை. அடுத்த டெஸ்ட் நடக்கும் டெல்லி ஆடுகளமும் இதே போன்றுதான் இருக்கும் என்று நம்புகிறேன். தென்னாபிரிக்காவும் அப்படித்தான் எதிர்பார்க்கும்.

ஆஸ்திரேலியாவில் இருந்து கொண்டு, இந்திய ஆடுகளங்கள் குறித்து விமர்சிக்கலாம். இந்திய ஆடுகளங்கள் குறித்துப்



பேசி, நேரத்தை வீணடிக்க வேண்டாம். அதற்குப் பதிலாக இங்கு வந்து விளையாடுங்கள். இயலுமென்றால்வெற்றிபெறுங்கள். ஆஸியில் அமைக்கப்படும் ஆடுகளங்கள் வேகத்துக்குச் சாதகமானவை. ஏனெனில் ஆஸியால் வேகத்தை மட்டுமே பயன்படுத்த முடியும். நேற்று முன்தினம் முடிவடைந்த முதலாவது பகலிரவு டெஸ்ட் ஆட்டம் 3 நாட்களில் முடிவடைந்தது. ஆடுகளத்தில் இருந்த தவறு தான் இதற்குக் காரணமா? (கோக்லியும் இதே கருத்தை தனது நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.) ஆஸ்திரேலியாவில் நிலைமை இவ்வாறிருக்க இந்தியாவை விமர்சிப்பது ஏன்? என்றார்.

## கிண்ணம் கிழக்கு மாகாணத்திடம் கபடியில் வடக்கினை வீழ்த்தி



யாழ்ப்பாணம், டிசெ. 1

தேசியமட்ட கபடித் தொடரில் வடமாகாண அணியை வீழ்த்தி சம்பியன் ஆனது கிழக்கு மாகாண கபடி அணி.

நேற்றுத்திங்கட்கிழமை மன்னார் மாவட்ட உள்ளரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிழக்கு மாகாண அணியை எதிர்த்து வடமாகாண அணி மோதிக் கொண்டது. இதில் கிழக்கு மாகாண அணி 41:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று தேசியமட்ட சம்பியன் ஆனது.

நிகழ்வுக்குப்பிரதமவிருந்தினராக வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் தேசப்பிரியவும், கௌரவ விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரனும் கலந்து கொண்டனர். (ம-23)

## சமபோச கிண்ணத் தொடரில் நேற்றைய ஆட்டங்களின் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 1

15வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தினால் சமபோச கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடர் நேற்று அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது. குறித்த தொடரில் சில ஆட்டங்களின் முடிவுகள்:

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கம்பஹா கலகெடிஹேன மகாவித்தியாலய அணியை எதிர்த்து சிலாபம் பிங்கிரிய தேசிய கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் பிங்கிரிய தேசிய கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பதுளை சுஜதாபாலிக மகா வித்தியாலய அணியை எதிர்த்து விசாக மாகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலை பதிவு செய்ததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மாத்தளை சிகிரியா கிம்பிஸ்ஸ கனிஷ்ட வித்தியாலய அணியை எதிர்த்து கொழும்பு கேட்வே சர்வதேச கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கிம்பிஸ்ஸ கனிஷ்ட வித்தியாலயம் 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் கிண்ணியா மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து மாத்தளை அஜ்மீர் தேசியக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் திருகோணமலை கிண்ணியா மத்திய மகா வித்தியாலய அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பிபிலி மெதகம தேசிய கல்லூரி அணியை எதிர்த்து கந்தானை டி மெசனெட் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கந்தானை டி மெசனெட் கல்லூரி அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)



வவுனியா [illegible] அமைப்பினால் (முள்ளந்தண்டுவடம் பாதிப்புற்றோருக்கான அமைப்பு) சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்டத் தொடரின் பதிவுகள். (ம-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனில் கும்ளே பதவி விலகல்

மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை ஆலோசகராகச் செயற்பட்டுவந்த அனில் கும்ளே தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை ஆலோசகராகச் செயற்பட்டுவந்த கும்ளே நேற்று தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். இவரது வழி காட்டலில் மும்பை அணி இரண்டு முறை ஐ.பி.எல். கிண்ணத்தையும், ஒரு முறை சம்பியன் லீக் கிண்ணத்தையும் வென்றிருந்தது. கும்ளேயின் இடத்துக்கு நிர்வாகம் சச்சினை தலைமை ஆலோசகராக நியமிக்க வாய்ப்புக்களும் உள்ளன. (ம)





# மீண்டும் கமில்டன் முதலிடம்

நடப்பு வருடத்தின் உலக கார்ப் பந்தயத் தொடரில் சம்பியனாகியுள்ளார் இங்கிலாந்தின் லூயிஸ் கமில்டன்.

வழக்கம்போல நடப்பு வருடத்துக்கான கார்ப் பந்தயத் தொடரும் 19 சுற்றுக்களாக நடைபெற்றது. இதன் 16ஆவது சுற்றிலேயே புள்ளிகளின் அடிப்படையில் கமில்டன் சம்பியனாவது உறுதியானது. 19ஆவதும் இறுதியானதுமான சுற்று அபுதாபியில் நேற்று நடைபெற்றது. இதில் முதலிடத்தை ரஸ்பேர்க் (19ஆவது சுற்றில் மட்டும்) கைப்பற்றினார். ரஸ்பேர்க் இந்த வருடத்தில் பெறும் 6ஆவது வெற்றி இதுவாகும். 2ஆவது இடத்தை கமில்டன் கைப்பற்றினார். இருப்பினும் ஒட்டுமொத்த சுற்றுக்களின் அடிப்படையில் கமில்டன் முதலிடத்தையும் ரஸ்பேர்க் இரண்டாவது இடத்தையும் வெட்டல் மூன்றாவது இடத்தையும் பெற்றனர். 19 சுற்றுக்களில் கமில்டன் 10 வெற்றியும், ரஸ்பேர்க் 6 வெற்றியும், வெட்டல் 3 வெற்றியும் பெற்றனர். கடந்த வருடம் நடைபெற்ற கார்ப் பந்தயத்தில் கமில்டன் 15 ஆவது சுற்றில் தனது வெற்றியை உறுதி செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

> "இதன் 16ஆவது சுற்றிலேயே புள்ளிகளின் அடிப்படையில் கமில்டன் சம்பியனாவது உறுதியானது."

## அதிரடி காட்டிய மகேல

நியூசிலாந்தில் நடந்து வரும் உள்ளூர் ரி-20 தொடரில் ஜெயவர்த்தனவின் அதிரடியால் சென்றல் டிஸ்ரிக் அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்றது.

சென்றல் டிஸ்ரிக்–நொதேன் டிஸ்ரிக் அணிகள் மோதிய இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற நொதேன் டிஸ்ரிக் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, கோரே ஆண்டர்சனின் அதிரடியால் 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகள் இழப்பிற்கு 152 ஓட்டங்கள் எடுத்தது.

153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய சென்றல் அணிக்கு, தொடக்க வீரர்கள் ஜார்ஜ் வொர்கர், மகேல அதிரடி தொடக்கம் கொடுத்தனர். வொர்கர் 39 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மறுமுனையில் அசத்திய மகேல அரைச்சதம் கடந்தார். அவர் 59 பந்தில் 17 பவுண்டரி 2 சிக்சர் உட்பட 97 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். மகேலவால் சென்றல் அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்றது. மகெல ஆட்டநாயகனானார். (ம)

இதோ நாளை முதல் வெளிவருகிறது
உங்கள் மார்கழி மாத குடும்ப முன்னேற்ற சஞ்சிகை







இன்னும் பல
அறிவியல்
சமயம்
பொழுதுபோக்கு
விஞ்ஞானம், அழகுக் குறிப்பு
போன்ற தகவல்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

உங்கள் பிரதிகளுக்கு அருகில் உள்ள 'சுடர் ஒளி'
'உதயன்' முகவர்களை நாடவும்

தொடர்புகளுக்கு :- 071 427 3035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.